# இதோ நாட்கள் வருகிறது !

“யோனாவும் இன்றைய சபையும்..
நினிவேயும் நாளைய இந்தியாவும்.."



Pastor. Romilton

# இதோ நாட்கள் வருகிறது !




PASTOR. S.ROMILTON

**அடைபட்ட அக்கினி**
246-B, Pocket-C, Mayur Vihar,
Phase-2, Delhi-110091.
**Mob: 98106 46981**

இதோ நாட்கள் வருகிறது
**முதல் பதிப்பு  - ஆகஸ்ட் 2023**

புத்தகங்கள் கிடைக்குமிடம் :
**அடைபட்ட அக்கினி**
246 - B, Pocket-C, Mayur Vihar,
Phase-2, Delhi-110091.
Mobile: 98106 46981
Email: hiddenfireromilton@gmail.com

# சமர்ப்பணம்

எனக்கு எழுத்து கற்பித்தவளும்,கைப்பிடித்து
கையெழுத்து படிப்பித்தவளும்,
உச்சரிப்பை உச்சரிப்பாய் உச்சரிக்க
உற்சாகப்படுத்தியவளும்,

விசுவாசத்தை வித்தாய் ஊன்றியவளும்,
பாலப் பருவத்திலேயே
"என் பாலகனை ஒரு மிஷினரியாய்
அர்ப்பணிக்கிறேன்"
என்று என்னை உன்னதருக்கு
உத்தமமாய் அர்ப்பணித்த

என் அருமைத் தாய் திருமதி ஞானம்மாள்
அவர்களுக்கு இப்புத்தகம் அர்ப்பணம்.

# இதோ நாட்கள் வருகிறது !!



"இன்னும் 40 நாட்கள் உண்டு..
நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும் !

ஒரே ஒரு இரு வரி பிரசங்கம்!

தொடர்ந்தது..
ஒரு அதிரடி மனமாற்றம் !
ஒரு மெகா எழுப்புதல் !!
ஒரு மாஸ் கன்வர்ஷன் !

படை பலத்துக்கும் பராக்கிரமத்துக்கும் கொடூரத்துக்கும் பேர்போன நினிவே !
பகைவர்களைத் தோலுரித்துத் தொங்கவிடும் நினிவே !

இப்பொழுது..

மன்னனும் மக்களும் மிருகங்களும் முழங்காலிலே !
40 நாள் தொடர் உபவாசம்!
தேவனின் முடிவையே திருப்பிப்போட வைத்த ஒரு உபவாசம் !

நினிவேயின் தேவன் பாரதத்தின் தேவன்!
நிஷ்டூரமான நினிவேயே மனந்திரும்புமானால்..
தேவ நிபந்தனைகள் இங்கேயும் நிறைவேற்றப்படுமானால்..
இங்கும் எழுப்புதல் தூரமில்லை..

ஆனால்..

நினிவே, தன் எழுப்புதலைக் காணுமுன் அங்கே ஆயத்த காரியங்கள் சிலவற்றை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார் தேவன்..

இங்கும் தேவ ஆயத்தங்கள் ஆரம்பித்துவிட்டன - ஆனால் எப்போதும் தேவனின் வழிகள் நம் வழிகள் அல்ல அல்லவே?

சில நேரம் அது செங்கடலின் வழி !
சில நேரம் அது யோர்தானின் வழி !
இப்பொழுதோ அது மத்திய தரைக்கடலின் வழி!

யோனா பாதாளத்தின் வயிற்றுக்குள் இறங்கியது, ஏதோ விதியோ, விளையாட்டோ, விபரீதமோ, விசுவாசமோ அல்ல - தான், நன்றாகவே தெரிந்து வைத்திருந்த தேவனுடைய திட்டத்தைத் திட்டமிட்டே அவன் மீறியது தான்!

இன்றைய சபையும் ஊழியர்களும் அறியாதது தான் என்ன? வசனம் தெரியாதா? வார்த்தை தெரியாதா? தேவ நோக்கம் தெரியாதா? தேவ திட்டம் தெரியாதா? சகலமும் தெரிந்தே எதிர்த்திசையில் பயணிப்பவர்கள் இவர்கள்..

இன்றைய சபை, தான் பிரயாணிக்கும், தேவனுக்கு எதிரான வழியை அதற்கு முகத்தில் அறைந்து உணர்த்திக்காட்டவும், அதைத் தம்மை நோக்கியும், தமது வழியை நோக்கியும் மீண்டும் திருப்பவும், சிட்சை என்னும் பிரம்பைக் கையிலெடுத்து, தமது சபையின் மேல் உபத்திரவம் என்னும் பெருங்காற்றைத் தேவன் வரவிடப்போகும் நாட்கள் இதோ வருகிறது!

அந்த உபத்திரவத்தினாலே தேசத்தின் சபைகளிலே, கிறிஸ்தவர்கள் மத்தியிலே மிகப்பெரிய கொந்தளிப்பு ஒன்று உண்டாகப்போவது நிச்சயம். அந்தப் பெருங்காற்று சகலத்தையும் கீழது மேலதாக்கும் ஜீவ மரணப் போராட்டமாயிருக்கும். அது தேவனாலே அனுமதிக்கப்பட்டதாய் இருக்கும். அதினாலே அநேகருடைய விசுவாசக் கப்பல்களும் சபைகளும் உடைந்து சுக்குநூறாகும்.

இந்த பாரத்தை லேசாக்க என்ன உபாயங்கள் செய்தாலும், போராட்டங்களும் உண்ணாவிரதங்களும் நடத்திக் கொடி பிடித்தாலும், கோர்ட்டுக்குப் போனாலும், ஜனாதிபதியைச் சந்தித்தாலும், மைனாரிட்டி கமிஷனுக்குப் போனாலும், சமரச முயற்சிகள் பல மேற்கொண்டாலும், எத்தனை சினாடுகள் எழும்பி நின்றாலும், சபையானது, "தான் கர்த்தருடைய சமூகத்திலிருந்தும் வழிகளிலிருந்தும் வார்த்தையிலிருந்தும் விலகி ஓடிப்போனேன்" என்று மனஸ்தாபப்பட்டு, மார்பில் அடித்து அழுது அறிக்கை செய்து மனந்திரும்பி மன்றாடாத வரை சபையாம் சமுத்திரம் இன்னும் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டேதான் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த மகா கொந்தளிப்பின் காலத்துக்குப் பின்னும், தலைமறை சபை ஒன்றின் காலத்துக்குப் பின்னும், யோனாவைக் கரை சேர்த்த கர்த்தர், தமது சபையையும் கரை சேர்ப்பார். நினிவே ஒரு மகா எழுப்புதல் கண்டது போலவே இந்த தேசமும் எழுப்புதலின் காலமொன்றைக் காணும் என்பதே நம் நம்பிக்கை!

இவைகளை இன்றைய சபை விரும்பினாலும் வெறுத்தாலும்
"இப்படிப்பட்ட நாட்கள் இதோ, வந்தே தீருகிறது !"

நடுக்கத்துடனும் எச்சரிப்புடனும்
Romilton

# உள்ளே

பக்கம் எண்

01 இப்படியும் ஒரு எழுப்புதலா ? ........ 09

02 யோனாவும் இன்றைய சபையும் ........ 15

03 யோனாவின் கப்பல் பயணம் &
பவுலின் கப்பல் பயணம் - ஒரு ஒப்பீடு ! ........ 23

04 பாதாளத்தின் வயிற்றிலிருந்து.. ........ 29

05 சீன அந்தரங்க சபைகள் - வரப்போகும்
நாட்களுக்கு ஒரு முன்னோட்டம் ........ 39

06 சீன இரகசிய சபைகளில் உயிரோடு எழுந்து
வந்த அப்போஸ்தல நடபடிகள் ........ 61

07 தேவனின் கடத்தல்காரன் ........ 81

08 அந்தரங்க தலைமறை சபைகளின் காலம்
ஒன்றுக்கு ஆயத்தமாகும் காலம் இது ! ........ 95

09 செந்நீர் தேசம் ........ 115

10 தீக்கொளுத்துவேன் ! தீக்கொளுத்துவேன் ! ........ 149

11 இது காலமா? ........ 167

12 நினிவேக்குத் திரும்புங்கள்...
எழுப்புதல் காத்திருக்கிறது ! ........ 181

# இப்படியும் ஒரு எழுப்புதலா ?

CHAPTER - 1



# இப்படியும் ஒரு எழுப்புதலா ?

## Chapter - 1

அசீரிய சாம்ராஜ்யம்..

தலைநகர் நினிவே..

இதன் சிதிலங்கள் இன்றைய ஈராக்கின் மாசூல் நகரின் எதிரே..

மூன்றாம் சல்மனாசர் ஆட்சியின் காலம்...

கிமு 786க்கும் 746க்கும் இடைப்பட்ட வருடங்கள்..

அசீரியப் படை வருகிறது என்றாலே அடம்பிடிக்கும் பிள்ளைக்கும் சப்தநாடியும் அடங்கும்!

■ தாங்கள் சிறைப்பிடித்த தங்கள் எதிரிகளின் தோலை உயிரோடு உரித்து அவர்களை அப்படியே ஊருக்குள் நடக்கவிடுவார்கள்.. வெயிலில் உடல் காய்ந்து அணு அணுவாய்த் துடிதுடித்து சாகும்வரை.. நகரின் கோட்டைச் சுவரெங்கும் அவர்களது தோலைத் தொங்கப்போட்டு வைத்திருப்பார்கள்.. துணி காயப்போடுவது போல ..

■ கழுமரத்தை மக்கள் கூடுமிடத்தில் நிறுத்தி வைத்து, அதிலே தாங்கள் பிடித்து வந்த தங்கள் பகை தேசத்தின் இராணுவ வீரர்களையும், பிரபுக்களையும் உயிரோடு நெஞ்சுக் கூட்டுக்குள் கழுவேற்றி, பல நாட்களாக உயிரோடு தொங்கவிட்டிருப்பார்கள்.. கழுமரத்தின் கூர்முனை கழுத்தின் வழியாகவோ, வாய் வழியாகவோ, தலை வழியாகவோ வெளியேறிச் சாகும் வரை !

<தாங்கள் போரில் தோற்கடித்ததவர்களின் தலைகளால் பிரமிடுகள் செய்வதும், மரங்களில் தொங்கவிட்டு அழகு பார்ப்பதும் இவர்கள் பொழுதுபோக்கு. அவற்றைக் கழுத்தில் மாலையாய் அணிந்து குத்தாட்டம் போடுவது கொண்டாட்டத்தின் ஒரு பகுதி.

பிடிபட்டவர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டால்

அப்படிப்பட்டவர்கள் கொடுத்து வைத்தவர்களாம்.. ஆனால் கை கால்களைத் தறித்துப்போடுவதும், மூக்கையும் நாக்கையும் காதையும் நறுக்கிப் போட்டு, கண்களைப் பிடுங்கி அவர்களை வைத்து நடுரோட்டில் பரேடு நடத்தி, தங்கள் சொந்த இராணுவத்தினரையும், தங்கள் சொந்த நாட்டு மக்களையும் திகிலிலும் கிலியிலும் கட்டி வைப்பது இவர்களது சைக்கலாஜிக்கல் டார்ச்சரின் ஒரு பகுதி என்கிறது வரலாறு. இதனாலேயே இவர்களது தேசத்தின் எல்லைகளின் பக்கவாட்டில் நடந்து போகக் கூட மக்கள் பயந்து நடுங்குவார்களாம்.

■ முந்தின ஆலயமாகிய எருசலேம் ஆலயத்தைத் தரைமட்டமாக்கி, அதின் அலங்கத்தை இடித்து, வாசல்களைத் தீக்கிரையாக்கி, அதிலுள்ளவர்களை சிறையாக்கித் தன் நாட்டில் 70 வருடமாய் சிறையிருப்பில் வைத்திருந்த பாபிலோனின் நேபுகாத்நேச்சாருக்கே பாலபாடம் எடுத்தவர்கள் இந்த அசீரியர்கள்..

■ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்திலிருந்த பிந்திய எருசலேம் ஆலயத்தை இடித்து, ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி சுட்டெரித்த பிற்கால ரோம சாம்ராஜ்யத்தின் தீத்து ராயனுக்கும் நீரோவுக்கும் சூப்பர் சீனியர்கள் இந்த நினிவேயினர்!

இப்படிப்பட்ட ஒரு கொடூர வரலாற்றுப் பின்னணி கொண்ட அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரான நினிவேயில் மூன்றாம் சல்மனாசர் ஆண்ட நாட்களில் தான் இப்படிப்பட்ட "நீங்காப் புகழ் பெற்ற" ஒரு "நகரத்துக்கு விரோதமாய்ப் பிரசங்கி..." என்று யோனாவை அனுப்புகிறார் ஆண்டவர். அந்நாட்களின் நினிவேயின் பின்புலம் யோனா புத்தகத்தில் விரிவாய் இல்லாவிட்டாலும், அவர்களின் பலமும், பராக்கிரமமும், முரட்டுத்தனமும், கொடூரமும் நிறைந்த நினிவேயின் காட்சியைத் துல்லியமாய்த் தருகிறது நாகூம் புத்தகம். (நாகூம் 1:1, 3:1-4).

"நினிவேயின் பாரம்" என்று ஆரம்பிக்கும் நாகூம் புத்தகம்,

“இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது. கொள்ளை ஓயாமல் நடக்கிறது..

சவுக்குகளின் ஓசையும், உருளைகளின் அதிர்ச்சியும், குதிரைகளின்

*பாய்ச்சலும், இரதங்களின் கடகடவென்று ஓடுகிற சத்தமும், வீரர் குதிரை ஏறுகிறதும், பட்டயங்கள் துலங்குகிறதும், ஈட்டிகள் மின்னுகிறதும், வெட்டுண்டவர்களின் திரளும், பிரேதங்களின் ஏராளமும் அங்கே உண்டாயிருக்கும். பிணங்களுக்குத் தொகையில்லை; அவர்கள் பிணங்களில் இடறி விழுகிறார்கள்..*

*தன் வேசித்தனங்களினால் ஜாதிகளையும், தன் சூனியங்களினால் வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியும் ரூபவதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித்தனங்களும்... அங்கே உண்டு"*
*(நாகூம் 3:1-4) என்று காட்சிப்படுத்துகிறது..*

*ஆனால், இப்படிப்பட்ட அசீரிய அசுரர்களின் மாநகரமாகிய நினிவேயிலா இப்படி ஒரு மா மகா மனந்திரும்புதலின் எழுப்புதல் நடந்தது?*

***இங்கேயா ? இப்படியா ?***
***இப்படியும் ஒரு எழுப்புதலா ?***

*இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையும், விபச்சார சந்ததியுமான பில்லி சூனிய மாபாதகர்களும் கூட ஜீவனுள்ள தேவன் மேல் விசுவாசம் கொள்ளுவார்களோ? (யோனா 4:5)*

*உபவாசிக்க அறிந்திராத இப்படிப்பட்டவர்களும் அன்ன ஆகாரமின்றி 40 நாள் கொடும் பசியாய் உபவாசித்துக் கிடப்பார்களோ? (யோனா 4:5)*

*"இரட்டு உடுத்துதலின்" அடையாளம் அறியா இவர்களும் இரட்டுடுத்திக்கொண்டு, தங்களைத் தாழ்மைப்படுத்திக் கொள்ளக் கூடுமோ ? (4:5)*

*தலைகளைக் கொய்தே பழக்கப்பட்டவனும், யாருக்கும் தலைவணங்கா நினிவேயின் அரசனுமான சல்மனாசரா தன் சிங்காசனத்தை விட்டெழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்? (யோனா 4:6)*

*நினிவேயின் மனுஷரும் மிருகங்களும் கூட ஆகாரம் ருசியாமலும், புல் மேயாமலும், சொட்டுத் தண்ணீர் குடியாமலும் 40 நாள் பட்டினி கிடந்து உபவாசிக்க வேண்டுமென்று இவனும் இவனது*

பிரதானிகளுமா ஆணை பிறப்பித்தார்கள்? (4:7)

தாங்கள் இதுவரை செய்து வந்த யாவும் பொல்லாத வழிகள் என்றும், தங்கள் கைகளெல்லாம் கொடுமையினால் நிறைந்தது என்றும் உண்மையாய் உணர்ந்து, மனஸ்தாபப்பட்டு, மார்பில் அடித்து, தேவனை நோக்கித் தங்கள் மிருக ஜீவன்களோடு கூட தாங்களும் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டது இந்த அசீரிய அரக்கர்களோ? (4:8)

தேவனே தாம் செய்ய நினைத்ததற்காக மனஸ்தாபப்பட்டு, தமது முடிவையே மாற்றுமளவுக்கு அவரது இரக்கத்துக்காகக் கெஞ்சினவர்கள் இந்த நினிவேயினரோ? (4:9).

"இவர்களுக்காக நான் பரிதபியாமல் இருப்பேனோ?" என்று இவர்களுக்காகவே, பூச்சிக்கும் புழுவுக்கும், காற்றுக்கும் கடலுக்கும், செடிக்கும் வெயிலுக்கும், மீனுக்கும் மனுவுக்கும் தேவனே இறங்கி வந்து கட்டளையிட்டது இந்த நிஷ்டூரர்களுக்காகவோ?

அரசன் முதல் ஆண்டி வரை ஒருவர் விடாமல் தேவன் பக்கம் திருப்பிய ஒரு மாநகர எழுப்புதல் அல்லவோ இது?

கிறிஸ்தவ வரலாற்று எழுப்புதல்களுக்கெல்லாம் முன்னோடியான ஒரு மகா பெரிய எழுப்புதல் அல்லவோ இது?

இப்படிப்பட்ட கொடுங்கோலர்களின் தேசத் தலைநகராம் நினிவேயின், வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இலட்சத்து இருபதினாயிரம் பேர் மத்தியிலே 40

நாட்களுக்குள்ளேயே ஒரு மாஸ் கன்வர்ஷனும், மெகா எழுப்புதலும் உண்டாயிருக்குமானால், ஓ! இந்த இந்திய தேசத்தில் மட்டும் அப்படி ஒரு நாள் வராதோ?

இந்த தேசத்தின் தலைநகரும், பெருநகரும், சிறு நகரும், சிற்றூர்களும் கிராமங்களும் தேவனிடம் திரும்பாதோ?

அரசியல்வாதிகளும் ஆடம்பரவாதிகளும் அறிவர்களும் அறியாதோரும் தேவனிடம் திரும்ப, நினிவே நமக்கு ஒரு Motivational Challenge அல்லவோ?

தேவனின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் நினிவேயாகட்டும், நீலாம்பரியாகட்டும்..யார் தடுக்க முடியும் எழுப்புதலை?

**ஆனால்...**

*இந்த நினிவே, எழுப்புதலைக் காணுமுன், "அதற்கு விரோதமாய்ப் பிரசங்கிக்கவும், எச்சரிக்கவும், தேவனிடமாய்த் திருப்பவும் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாகிய யோனாவின் காரியங்கள், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இன்றைய சபையின் காரியங்களுக்கு ஒப்பானவைகளாய்க் காணப்படவில்லையோ?*

*அசீரிய எழுப்புதலை அயோத்தியில் காணுமுன், சபை என்னும் யோனாவில் தேவன் அன்று செய்ததையும், யோனா என்னும் சபையில் தேவன் இன்று செய்யப் போவதையும் நாம் கண்ட பின்னேயே எழுப்புதல் ஒன்று இங்கே வெடிக்கும் என்பது வேதத்திட்டம்..தேவ திட்டம் என்பது திட்டம் அல்லவோ?*

***அன்று நினிவேக்கு அளிக்கப்பட்டது 40 நாட்கள்!***
***இன்று இந்த இந்து தேசத்துக்குத் தரப்படுவதோ ???***

***"இதோ நாட்கள் வருகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்..!"***



# யோனாவும் இன்றைய சபையும்

CHAPTER - 2

# யோனாவும் இன்றைய சபையும்

## CHAPTER - 2

*“நினிவே" என்றால் "நினுஸ்" என்னும் அசீரிய தேவதையின் பெயர் கொண்ட "தேவனின் பிரதான தூதன்" என்னும் பொருள்படுவதாகச் சொல்லப்படுகிறது.*

*இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையும், விபச்சாரமும், பில்லி சூனியமும் கொடுமையும் பாவமும் நிறைந்த ஒரு பட்டணத்துக்கு தேவனின் நியாயத்தீர்ப்பின் செய்தியை உரக்கக் கூவி அறிவிக்க அழைக்கப்பட்ட, அனுப்பப்பட்ட யோனா சென்றதோ, "தனது மன ரம்மியம்" என்று அர்த்தம் கொள்ளும் “தர்ஷீசுக்கு.."*

*யோனாவை இன்றைய இந்திய சபைக்கு ஒப்பிட்டால், விக்கிரக ஆராதனையும், அறியாமையும், மூடப்பழக்கவழக்கங்களும், பாரம்பரியங்களும் நிறைந்த இந்தத் தேசத்துக்கு தேவகுமாரனின் குரலாய் எழும்பி நிற்க வேண்டிய இந்திய சபை, இன்று, தனது மன ரம்மியமும், தனக்குப் பிரியமானதும், சுகமும் சொகுசு வாழ்க்கையும் சம்பிரமமுமான முற்றும் எதிர்த்திசையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கவில்லையோ?*

### ***கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி ஓடும் யோனா என்னும் இன்றைய சபை:***

*வேதம் சொல்கிறது,"யோனா கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி.."*

*"தான் கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகும்படி..*
*“ தர்ஷீசுக்குப் போகும்படி கப்பல் ஏறினான் (யோனா 1:3).*

*அதையே அவன் தன் வாயினாலும் சொல்கிறான்.. "அவன் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன்" என்று ங்களுக்கு அறிவித்ததினாலே.. (யோனா 1:10).*

■ தேவ சமூகத்தில் தேசத்திற்காக நிற்கவும், தேச ஜனங்கள் முன் தேவன் தரப்பில் நிற்கவும் வேண்டிய இன்றைய சபை, தேவ சமூகத்திலிருந்தே தன்னிச்சையின்படி, தன் மனம்போன திசையிலே தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கவில்லையோ?

■ தேவ சமுகம், தேவ சித்தம், தேவ சத்தம், தேவ வழி, தேவ வார்த்தை - இவை யாவும் இன்று காற்றில் பறக்கவிடப்படவில்லையோ?

**கூலி கொடுத்து டிக்கெட் எடுத்த யோனா :**

யோப்பா துறைமுகத்தின் டிக்கெட் கவுண்ட்டரிலே தர்ஷீசுக்குப் போக டிக்கெட்டுக்குக் காசு எடுத்துக் கொடுத்தான் யோனா. ஆனால் தேவனுக்கு எதிரான எதிர்த்திசையில் எதிர்த்துச் செல்லும் அந்த எழுப்புதல் தீர்க்கன், உண்மையிலே அந்த டிக்கெட்டின் உண்மையான விலை மதிப்பை அறிந்திருக்கவில்லை. அது வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத நினிவேயின் இலட்சத்து இருபதினாயிரம் ஆத்துமாக்களின் விலையேறப்பெற்ற விலை அல்லவோ?

அது, திமிங்கிலத்தின் அடிவயிற்றின் குமட்டி எடுக்கும் நாற்றமும், மத்திய தரைக்கடலின் ஆழத்தின் கும்மிருட்டும், தண்ணீரில் உருண்டு புரண்டு கடல்பாசியும் கொடிகளும் தலையைச் சுற்றி குரல்வளையை நெறிக்கும் குலை நடுங்கச் செய்யும் திகிலும் மரண பயமும் நிறைந்த ஒரு மாபெரும் விலை அல்லவோ?

**[எஜமானின் சித்தம் அறிந்தும், அதைச் செய்யாமல் தப்பித்து ஓடும் பின்மாற்றக்காரர்கள் செலுத்தப்போகும் மொத்தக் கூலியின் மதிப்பையும் விலைக்கிரயத்தையும் நித்திய நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்றே வெளிப்படுத்தும் - L R]**

கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி எதிர்த்திசையில் ஓடும் பெரும்பான்மையான கூட்டம் கொண்ட இன்றைய சபையும் ஊழியர்களும் செலுத்தப்போகும் விலையைத் தாங்களே அவர்கள் அறிவார்களோ? தேசத்தின் க்ஷேமத்தின் செய்தி, தேவனின் செய்தியாய் சபையின் கையிலும் ஊழியர்கள் கையிலுமே தரப்படவில்லையோ? வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இந்திய ஜனத்தின் 146 கோடியின் இரத்தப்பழியும் இன்றைய சபையாகிய நம் தலையின் மேல் இல்லையோ?

சபையும் ஊழியர்களும் திசைகெட்டு ஓடிக்கொண்டிருக்கும் பாதையின் விலையொன்றை நியாயத்தீர்ப்பின் நாளிலே மட்டுமல்ல, இங்கேயும் அவர்கள் செலுத்தித் தீர்த்தே ஆகவேண்டியதில்லையோ?

*கர்த்தருடைய வழிகளுக்குக் கண்சொருகிப்போய், இப்பொழுது கர்த்தருடைய சத்தத்துக்கும் தன் செவிகளை அடைத்துக் கொண்ட யோனாவின் ஒவ்வொரு அசைவையும் இப்போது அசையாமல் கவனியுங்கள். அவை ஒவ்வொன்றும் கீழ்நோக்கியே செல்கிறது..*

*He went DOWN to Joppa.*

*1. அவன் கீழாக யோப்பாவை நோக்கிப் போய்.. (1:3)*

*2. கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கி.. (1:5)*

*3. பர்வதங்களின் அடிவாரம் பரியந்தம் இறங்கினான் (2:6).*

*தேவனின் வழிகளை விட்டு விலகி விலகி தூரமாய்ப் போகும் பின்மாற்றக்காரனின் ஒவ்வொரு அடியும் சறுக்கலும் வழுக்கலும் விழுதலுமான இறங்குமுகம் தான்!*

## பெருங்காற்றும் பெரிய கொந்தளிப்பும் :

*யோனா பாதாளத்தின் வயிற்றுக்குள் இறங்கியது, ஏதோ விதியோ, விளையாட்டோ, விபரீதமோ, விசுவாசமோ அல்ல - தான், நன்றாகவே தெரிந்து வைத்திருந்த தேவனுடைய திட்டத்தைத் திட்டமிட்டே அவன் மீறியது தான்!*

*இன்றைய சபையும் ஊழியர்களும் அறியாதது தான் என்ன? வசனம் தெரியாதா? வார்த்தை தெரியாதா? தேவ நோக்கம் தெரியாதா? தேவ திட்டம் தெரியாதா? சகலமும் தெரிந்தே எதிர்த்திகையில் பயணிப்பவர்கள் இவர்கள்..*

*பாதாளத்தின் வயிற்றில் அவனுக்கு நடந்ததை அலசுமுன் இந்த வரியை சற்று கவனியுங்கள்!*

***கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார்.. அதினாலே..பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று.. (யோனா 1:4)***
***இன்றைய சபை, தான் பயணிக்கும், தேவனுக்கு எதிரான வழியை அதற்கு முகத்தில் அறைந்து உணர்த்திக்காட்டவும், அதைத் தம்மை நோக்கியும், தமது வழியை நோக்கியும் மீண்டும் திருப்பவும், சிட்சை என்னும் பிரம்பைக் கையிலெடுத்து, தமது சபையின் மேல் உபத்திரவம் என்னும் பெருங்காற்றை தேவன் வரவிடப்போகும் நாட்கள் இதோ வருகிறது!***

அந்த உபத்திரவத்தினாலே தேசத்தின் சபைகளிலே, கிறிஸ்தவர்கள் மத்தியிலே மிகப்பெரிய கொந்தளிப்பு ஒன்று உண்டாகப்போவது நிச்சயம். அந்தப் பெருங்காற்று சகலத்தையும் கீழது மேலதாக்கும் ஜீவ மரணப் போராட்டமாயிருக்கும். அது தேவனாலே அனுமதிக்கப்பட்டதாய் இருக்கும். அதினாலே அநேகருடைய விசுவாசக் கப்பல்களும் சபைகளும் உடைந்து சுக்குநூறாகும்.

இந்த பாரத்தை லேசாக்க என்ன உபாயங்கள் செய்தாலும், போராட்டங்களும் உண்ணாவிரதங்களும் நடத்திக் கொடி பிடித்தாலும், கோர்ட்டுக்குப் போனாலும், ஜனாதிபதியைச் சந்தித்தாலும், மைனாரிட்டி கமிஷனுக்குப் போனாலும், சமரச முயற்சிகள் பல மேற்கொண்டாலும், எத்தனை சினாடுகள் எழும்பி நின்றாலும், சபையானது, "தான் கர்த்தருடைய சமூகத்திலிருந்தும் வழிகளிலிருந்தும் வார்த்தையிலிருந்தும் விலகி ஓடிப்போனேன்" என்று மனஸ்தாபப்பட்டு, மார்பில் அடித்து அழுது அறிக்கை செய்து மன்றாடாத வரை சபையாம் சமுத்திரம் இன்னும் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டேதான் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

## அயர்ந்த நித்திரையில் யோனா :

தன் கீழ்ப்படியாமையின் எல்லைக்கே போய்விட்ட யோனா, ஒரு பக்கம் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்க, கப்பல் உடைந்து நொறுங்கிப் போகவிருந்த நிலையிலும் எந்தக் கவலையுமின்றி நிர்விசாரமாய் நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்.

இந்த யோனா, கடைசிக் காலத்தின் இந்தக் கடைசி விநாடி நேரத்திலும் தூக்க மயக்கத்தால் நிறைந்து எந்தக் கவலையுமின்றி புசிப்பிலும் குடிப்பிலும் கொண்டாட்டத்திலும் ஆவிக்குரிய கனநித்திரையிலும் மூழ்கிக் கிடக்கும் இன்றைய சபைக்கு முன்னடையாளமில்லையோ?

இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவு தேசம் கொந்தளிக்கப்போகும் நாட்கள் இதோ!

இவைகளுக்கு மத்தியிலும் இன்றைய சபை, கணக்கற்ற ஆவிக்குரிய ஏதுக்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டு இப்போது இருப்பது போல எப்போதாவது உறங்கிக் கிடந்ததாக சரித்திரம் உண்டோ?

**The Septuagint என்ற ஒரு வேத மொழிபெயர்ப்பு சொல்கிறது," யோனா குறட்டை விட்டு நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான்.."** என்று.

பயந்து நடுங்கிப்போன கப்பல் பயணிகள், கடல் கொந்தளிக்கக் காரணம் என்னவோ என்று கலங்கிக்கொண்டிருக்க, தன் கண்ணில் சிக்கிய யோனாவைக் கண்டு, "நீ நித்திரை பண்ணுகிறது என்ன?

எழுந்திருந்து உன் தேவனை வேண்டிக் கொள்; உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது ? நீ என்ன ஜாதியான்?" என்று சரமாரியான கேள்விகளால் துளைத்துக்கொண்டிருந்தான், கலவரப்பட்ட அந்த மாலுமி.

இதே கேள்வியைத் தான் இன்றைய நவீன நினிவேயாகச் சீர்கெட்டு சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் வாலிப சமுதாயமும் தேசமும், இன்று கீழ்ப்படியாமையின் எல்லைக்கே சென்று நிம்மதியாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருக்கும் இந்திய லவோதேக்கிய சபையைப் பார்த்து, "சபையே, உன் வேலை என்ன? உன் பொறுப்பென்ன? நீ இங்கே செய்து கொண்டிருப்பது என்ன? உன் நோக்கமென்ன?" என்று எரிச்சலோடு கேட்கிறது.

(ஓரிரு வருடங்களுக்கு முன் வெளிவந்த தமிழ் சினிமா ஒன்றில் பெந்தெகோஸ்தே சபைகளில் நடக்கும் அற்புத அடையாள ஆவியின் பெயரில் நடக்கும் கோமாளிக் கூத்துக்களைத் திரையில் அம்பலமாக்கி, தமிழ் உலகமே கைகொட்டி கும்மியடித்து, அது சோஷியல் மீடியாக்களில் வைரலானதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம்.)

தேச ஜனங்களின் இத்தனை பெரிய இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியானவரின் உண்மையான ஒரு மகா எழுப்புதலையும் குறித்துக் கொஞ்சமும் அக்கறையின்றிக் கவலையற்றுக் கிடக்கும் இன்றைய சபைகளின் விசுவாசிகளுக்கும் ஊழியர்களுக்கும் தம்மைக் குறித்த ஒரு நடுக்கத்தைக் கொடுப்பதற்காகவே, சபைகளை நடுங்கப்பண்ணும் சக்திகளை எழுப்ப வேண்டிய கட்டாயமும் நிர்ப்பந்தமும் நெருக்கடியும் தேவனுக்கு உண்டாகியே இருக்கிறது என்பது திட்டமும் தெளிவுமல்லவோ?

யோனாவுக்கென்றே பெருங்காற்றையும் பெரிய கொந்தளிப்பையும், பெரிய மீனையும், ஆமணக்குச் செடியையும், அரிக்கும் பூச்சியையும், உஷ்ணமான கீழ்க்காற்றையும் ஆயத்தப்படுத்தி இவைகள் யாவற்றிற்கும் கட்டளையிட்டிருந்த தேவன், யோனா என்னும் இன்றைய சபைகளைச் சரியான திசைக்குத் திருப்பிக் கொண்டுவர மிகப்பெரிய அளவில் மகா கொந்தளிப்பு ஒன்றையும், காற்றையும் புசலையும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.

*ஒரு ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே முழு மனுக்குலத்தின் மேலும் மரணம் வந்தது போலவும், ஒரு யோனாவின் கீழ்ப்படியாமையினாலே கப்பலில் இருந்தவர்களின் உயிருக்கு ஆபத்து வந்தது போலவும் நமது கீழ்ப்படியாமை, நிர்விசாரம், நித்திரை மற்றும் வழிவிலகுதலினாலே, நம்மோடிருப்பவர்கள், அண்டை அயலகத்தார், உடன் பணிபுரிபவர்களின் நித்தியம் நமது கைகளில் இருக்கிறபடியினாலே அதற்கான கணக்கை நாம் செலுத்தியே தீரவேண்டும் என்பது எத்தனை உண்மையிலும் உண்மை!*

*"நாங்கள் அழிந்து போகாதபடி எங்களுக்காக வேண்டிக்கொள்.." என்று கப்பலில் இருந்தவர்கள் சொன்னதுபோல, "எங்கள் ஜீவனும் நித்தியமும் உங்கள் கையில் அல்லவோ இருக்கிறது.." என்று நம்மைச் சுற்றியுள்ள உலகம், சபையாம் நம்மைப் பார்த்துக் கெஞ்சுவது நம் காதில் விழவில்லையோ?*

# யோனாவின் கப்பல் பயணம் & பவுலின் கப்பல் பயணம்

– ஒரு ஒப்பீடு !

CHAPTER - 3



# யோனாவின் கப்பல் பயணம்
# &
# பவுலின் கப்பல் பயணம்
## - ஒரு ஒப்பீடு !

## Chapter - 3

***யோனா 1, 2 அதிகாரங்கள்***
***VS***
***அப்போஸ்தலர் 27, 28 அதிகாரங்கள்***

■ இருவரும் தேவ ஊழியர்கள்.
ஒருவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி.
மற்றவர் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்.

■ யோனா சென்றது தர்ஷீஸ்.
பவுலின் சொந்த ஊர் தர்சு.
(இரு ஊர்களும் ஒன்று தான் என்கிறார் வரலாற்று ஆசிரியர் ஜோசஃபஸ். இதுவே பெருமளவில் அங்கீகரிக்கப்பட்டதாகவும் இருக்கிறது.)

■ ஒருவர் தேவ சமுகத்திலிருந்து விலகி தர்ஷீசுக்குப் போகிறார்.
மற்றவர் தேவ நடத்துதலின்படி இராயனுக்கு முன்பாக நிற்க ரோமாவுக்குப் போகிறார்..

■ இருவருடைய கப்பல்களும் பயணித்தது *Mediterranean Sea* எனப்படும் மத்திய தரைக்கடலிலே..
இருவரது கப்பல் பயணங்களிலும் பெருங்காற்று அடித்தது. ஒன்று தேவனால் உண்டான சிட்சையின் பெருங்காற்று.
மற்றது தேவ நாமம் மகிமைப்படும்படியாக அடித்த யுரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று.

■ யோனாவின் கப்பலிலிருந்தும் சரக்குகள் கடலில் எறியப்பட்டன.பவுலின் கப்பலிலிருந்தும் சரக்குகள் கடலில் எறியப்பட்டன.

■ யோனாவின் கப்பலில் இருந்த மனுஷருக்குத் தாங்கள் தப்பிப்பிழைப்போம் என்னும் நம்பிக்கை அற்றுப்போயிருந்தது.
பவுலின் கப்பலில் இருந்தவர்களுக்கும் அப்படியே இருந்தது.

■ யோனாவின் கீழ்ப்படியாமையினாலே உடனிருந்தவர்கள் உயிருக்கு ஆபத்து.
பவுலின் கீழ்ப்படிதலினாலே உடனிருந்தவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு.

■ யோனா கப்பலில் அயர்ந்த நித்திரை பண்ணினான். மற்றவர்கள் அவனை எழுந்து வேண்டிக்கொள்ளச் சொன்னார்கள்.
பவுலோ இரவெல்லாம் தனக்காகவும் தன்னோடு இருந்தவர்களுக்காகவும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்.

■ இருவர் மேலும் தேவன் இரக்கமுள்ளவராயிருந்தார்.
இருவருடைய ஜீவனும் பாதுகாக்கப்பட்டது.

■ இருவரும் கடலில் தூக்கி எறியப்பட்டனர்.
ஒருவரைப் பாதுகாக்க தேவன் மீனுக்குக் கட்டளையிட்டார்
மற்றவரைத் திடப்படுத்த அவர் தமது தூதனையே அனுப்பினார்.

■ ஒருவர் மீன் வயிற்றில் மூன்று நாட்கள் வைக்கப்பட்டுக் கரையிலே கொண்டுபோய் சேர்க்கப்பட்டார்.
மற்றவருக்கு, கப்பலின் உடைந்த கட்டைகளே கரையேறப் போதுமானதாயிருந்தது.

■ யோனா கிறிஸ்துவின் அடக்கம் பண்ணப்படுதலுக்கு அடையாளமாய் இருந்தார்.
பவுலோ கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியானார்.

■ யோனா திசைதிருப்பிக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது நினிவே !
பவுல் தப்பிக் கரை சேர்ந்தது மெலித்தா!

■ நினிவேக்கு நியாயத்தீர்ப்பின் செய்தி!
மெலித்தாவிலோ கிறிஸ்துவின் அற்புத அடையாளங்களோடு கூடிய சுவிசேஷ நற்செய்தி !

■ அங்கே நினிவேயிலே ஒரு மெகா எழுப்புதல்!
இங்கே மெலித்தாவிலே ஒரு மினி எழுப்புதல்!

அல்லேலூயா !!!

## நீ என் பார்வைக்கு அருமையான படியால்...

என்ன தான் யோனா கர்த்தரின் சமூகத்தை விட்டு விலகி ஓடினாலும், அவனது ஜீவன் அவரது பார்வைக்கு அருமையாய் இருந்தபடியினாலே அவனை உயிரோடு விழுங்கி, தன் வயிற்றிலே பத்திரமாய் வைத்திருக்கும்படி பெரிய மீன் ஒன்றை ஆயத்தப்படுத்தியிருந்த தேவன், இன்றைய வழிவிலகிய சபையையும் அதிகமதிகமாய் நேசிக்கிறார் என்பதில் சந்தேகம் உண்டோ?

யோனாவின் ஜீவன் அவருக்கு அருமையாயிருந்தது போலவே, சபையின் விசுவாசிகளின் ஜீவன் மட்டுல்ல, அவரது அநாதி தீர்மானத்தின்படி, வரப்போகும் பெரிய கொந்தளிப்பிலே இரத்தசாட்சிகளாய் மரிக்க அனுமதிக்கப்படப்போகிற பரிசுத்தவான்களின் மரணமும் கூட அவர் பார்வைக்கு அருமையாகவே இருக்கும்.

யோனா என்னதான் எதிர்த்திசையில் சில நாட்களுக்குப் போய்விட்டாலும், அவன் தன்னால் அழைக்கப்பட்டவனும், தெரிந்துகொள்ளப்பட்டவனுமான தீர்க்கதரிசி என்பதை மட்டுமல்ல, அவன் இதற்கு முன் தனது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசங்களையும் மறவாமல் நினைவுகூர்ந்து அவனது ஜீவனைக் காப்பாற்றி, அவனைக் கொண்டு செய்யவேண்டிய வேலையை செய்து முடிக்கத் தீர்மானித்த தேவன், இன்றைய வழிவிலகிப்போன சபையும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டது என்பதினாலே இன்றைய சபையின் முற்பிதாக்களின் கண்ணீரையும், வியர்வையையும், இரத்தத்தையும், ஜெபத்தையும், பிரயாசங்களையும் தப்பாமல் நினைவுகூருவார்.
வரப்போகும் கொந்தளிப்பில் பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ளப்போவதே இல்லை. அது மீண்டும் தேவனிடம் திரும்பும். அவர் அதைப் பாதுகாத்து, அதைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய வேலையையும், செய்ய வேண்டிய எழுப்புதலையும் நிறைவேற்றியே தீருவார்!

ஆனாலும் தேசத்தின் எழுப்புதலுக்கு முன்னே, சபை நடுவிலே ஒரு மா மகா கொந்தளிப்பு உண்டு. அதுவே சபையை சுத்திகரிக்கும் தேவனின் பரிசுத்த சுத்திகரிப்பாகவும், சிட்சையாகவும், பாடமாகவும், தேவனிடம் திரும்பும் மனந்திரும்புதலாகவும், அதே நேரம், எழுப்புதலுக்கான சபையின் விலைக்கிரயமுமாகவே அமையும்.

சமுத்திரம் வெகு மும்முரமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்து, தன் மும்முரத்தை விட்டு அமர்ந்தது போலவே, ஒரு காலகட்டத்துக்குக் கொந்தளிக்கும் உபத்திரவத்தின் தீவிரம் மும்முரமாய் இருக்கப்போவது போலவே, அந்த மும்முரம் அடங்கி அமைதியாகும் காலம் ஒன்றும் நிச்சயம் உண்டு.

# பாதாளத்தின் வயிற்றிலிருந்து...

## CHAPTER - 4



# பாதாளத்தின் வயிற்றிலிருந்து..

## Chapter - 4

***“நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்.” (யோனா 2:2)***

*இது யோனாவின் தனக்கான கூக்குரல் !
அதுவே தேவனின் நினிவேக்கான கூக்குரல் !*

*அவன் சிறைப்பட்டிருந்தது- மத்திய தரைக்கடலின் இருண்ட தண்ணீர்களின் ஆழங்களின் மலையடிவார அஸ்திபாரங்களிலே தூண்கொண்டு கட்டப்பட்ட திமிங்கில வயிற்றுச் சிறைச்சாலையிலே!*

*"நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் அங்கேயும் நீர் இருக்கிறீர்" என்பதையும், "அவர் சத்தம் பூமியின் கடையந்தரங்களிலும் ஒலிக்கும்.." என்பதையும் யோனா படித்திருக்கவில்லையோ? அல்லது படித்ததை மறந்துவிட்டானோ?*

*அவனது ஜெபத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய் அலசுமுன், இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான காரியம் ஒன்று உண்டு.*

*■ மீன் வயிற்றில் மூன்று நாட்கள் சிறைப்பட்டிருந்த யோனாவைப் போலவே, வரப்போகும் நாட்களில் இந்திய சபைகளுக்கு ஒரு சிறையிருப்பின் காலம் உண்டு.*

*■ அந்தக் கொந்தளிப்பின் நாட்கள் விசுவாசிகளும் ஊழியர்களும் சிறை வைக்கப்படும் நாட்கள்..*

*■ அந்த நாட்கள் சபைக்கு ஒரு லாக்-டவுன் பீரியடாகவே இருக்கும்.*

*■ அன்று பவுலின் மேலும், பேதுருவின் மேலும், சீஷர்கள் மேலும், ஜாண் பன்யன், சவனரோலா, ஜான் விக்ளிஃப், வாட்ச்மன் நீ, ஹெரலன் பாப்போவ், ரிச்சர்ட் உம்பிராண்ட் போன்ற தேவ மனிதர்கள் மேலும் கடந்துபோன சிறையிருப்பின் காலமொன்று,*

இன்றைய இந்திய சபையின் மேலும் கடந்துபோகும். அது ஒரு மிகக்கொடுமையான காலம். சித்ரவதைக்குள்ளும், தாங்க முடியா உபத்திரவத்துக்குள்ளும் சபை கடந்துபோகப்போகும் காலம் அது. அநேகர் சிறைகளிலே மடியும், மறையும் காலம் அது ! அந்நாட்களிலே விசுவாச குடும்பங்கள் சிதறிப்போகும். கணவன் மனைவி பிள்ளைகள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிக்கப்படும் காலம் அது !

■ மீன் வயிற்றிலிருந்து விண்ணப்பம் பண்ணிய யோனாவின் விண்ணப்பம் போன்று உண்மையும் கதறுதலுமான இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் ஜெபங்கள் அந்த நாட்களில் தான் சிறைச்சாலைகளிலிருந்தும் மறைவிடங்களிலிருந்தும் எழும்பும்.

■ அப்படிப்பட்ட நாட்களிலே சிறைகளிலே அற்புத அடையாளங்கள் சர்வ சாதாரணமாய் நடக்கும். அநேக சிறைக்கைதிகளும் ஜெயிலர்களும், போலீசாரும், செக்யூரிட்டி கார்டுகளும் இரட்சிக்கப்படுவார்கள்.

சிறைச்சாலை வளாகங்களுக்குள்ளேயே ஞானஸ்நானங்கள் மறைமுகமாய் நடக்கும். தேவன் வல்லமையாய்க் கிரியை செய்வார். அவரது நாமம் மகிமையாய் மகிமைப்படும்.. சுதந்திரமான நாட்களில் வெளியே சுவிசேஷம் கேள்விப்பட்டிராத பேர்போன பேட்டை ரௌடிகளும், தாதாக்களும் அறிவிக்கப்படாதவர்களும் அந்நாட்களிலே ஜெயிலிலே ஆண்டவருடைய அன்பின் நற்செய்தியைக் கேட்பார்கள். வெளியே இருந்த நாட்களிலே சுவிசேஷம் அறிவிக்கப் பயந்தவர்கள் அங்கே விசேஷித்த பெலனடைந்து பயமின்றி சுவிசேஷம் அறிவிப்பார்கள்.

■ யோனாவின் ஜெபத்தைப் போலவே, இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் உண்மையான எழுப்புதல் ஜெபங்கள் அப்போது தான், மறைவிடங்களிலிருந்தும் ஒளிப்பிடங்களிலிருந்தும், இருட்டறைகளிலிருந்தும் ஏறெடுக்கப்படும்.

## யோனாவின் ஜெபம்:

*(ஒவ்வொரு வசனம் வசனமாய்..)*

■ அந்த நெருக்கத்தின் காலத்தில் அநேகர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள். அவர் உத்தரவு அருளுவார். (யோனா 2:2)

■ பாதாள சிறையின் வயிற்றிலிருந்தும், டிட்டென்ஷன் கேம்ப் என்னும் மறைவிடங்களிலிருந்தும் சபை கூக்குரலிடும். தேவன் சபையின் சத்தத்தைக் கேட்பார். (யோனா 2:2)

■ *அந்தக் கடுமையான நாட்களின் நடுமையமாகிய உபத்திரவத்தின் ஆழத்திலே சபை தள்ளிவிடப்படும். (2:3)*

■ *அடிகளும் வேதனைகளும் சித்ரவதைகளுமாகிய நீரோட்டம் சபையை சூழ்ந்துகொள்ளும். உபத்திரவத்தின் வெள்ளங்களும் அலைகளும் சபையின் மேல் புரண்டு போகும் காலமது! (2:3)*

■ *"என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்றும், "கர்த்தர் கூட என்னைக் கைவிட்டாரோ?" என்றும் இருட்டறை ஆழங்களிலிருந்து கதறுமளவு கர்த்தரின் கண்களுக்கு எதிரே இராதபடி சபை இமைப்பொழுது மறக்கப்பட்டுப்போகும் காலமது! (யோனா 2:4)*

■ *அந்த நெருக்கங்களுக்கு மத்தியிலே சபையானது உண்மையாய் தேவனுடைய பரிசுத்த ஆலயத்தை நோக்கிப் பார்க்கும். (2:4)*

■ *சித்ரவதையும் வலியும் வேதனையுமாகிய தண்ணீர்கள் உயிர்போகும் பிராணபரியந்தம் சபையை நெருக்கினாலும், கொடுமையின் ஆழி அதைச் சூழ்ந்து கொண்டாலும், கடல் பாசியாம் உபாதையின் கயிறுகள் அதின் கழுத்தைச் சுற்றி இறுக்கினாலும், "தண்ணீர்களைக் கடக்கும்போது உன்னோடிருப்பேன், ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை" என்றவர், யோசேப்பின் சிறையிருப்பில் அவனோடிருந்தது போலவும், சிங்கக் கெபியிலே தானியேலோடு இருந்தது போலவும் அந்நாட்களிலே தமது சபையோடு இருப்பார். (யோனா 2:5)*

■ *அந்நாட்களிலே அநேகருடைய ஆத்துமா அவர்களுக்குள் தொய்ந்துபோய், அவர்கள் கர்த்தரை நினைப்பார்கள். அப்பொழுது அவர்களது விண்ணப்பம் அவரது பரிசுத்த ஆலயத்திலே அவரிடத்தில் வந்து சேரும். (2:7)*

■ *அப்பொழுது தான் ஜனங்கள், "தாங்கள் பொய்யான மாயையைப் பற்றிக்கொண்டு, தங்களுக்கு வந்த கிருபையைப் போக்கடித்தோமே!" என்றும், "ஐயோ! பகற்காலத்திலேயே நாம் நம்மை அனுப்பினவரின் கிரியைகளைச் செய்யாமல் போனோமே, ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் இதோ, நம்மை வந்து மூடிவிட்டதே!" என்றும், "ஐயோ, இப்படி நம்மை எச்சரித்தவர்களின் சொற்கேளாமல் போனோமே!" என்றும் மார்பில் அடித்துப் புலம்பி அழுவார்கள். (யோனா 2:8)*

■ *அந்த நாட்களில் சிறைச்சாலை களிலும், மறைவான கூடுகைகளிலுமிருந்து துதியின் சத்தத்தோடு ஸ்தோத்திர பலியிடுவார்கள். ஆங்காங்கே பொருத்தனைகள் செலுத்தப்படும். அந்நாட்களில் அநேகரின் இரட்சிப்பு கர்த்தருடைய இரட்சிப்பாயிருக்கும். (2:9)*

***மிஸ்ஸிங் !***
***மிஸ்ஸிங் !***
***மிஸ்ஸிங் !***

***"எழுப்புதல் ஜெபம்" என்று ஆங்காங்கே அறிவிப்பு கொடுக்கப்பட்டு, இன்றைய நாட்களின் 12 மணி நேர, 8 மணி நேர, 6 மணி நேர, முழு இரவு***

*ஜெபங்கள், 21 நாள் உபவாசம், 40 நாள் உபவாசம், 24 மணி நேர இடைவிடா ஆராதனைகள் (Non - Stop worship) என்ற நமது இன்றைய ஜெபங்களையெல்லாம் காட்டிலும், சபையின் சிறையிருப்பின் நாட்களிலும், சபை தன்னை மறைத்துக்கொள்ளும் நாட்களிலும் நடைபெறப்போகும் ஜெபங்களே கண்ணீரும் கதறுதலுமான இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் உண்மையான ஜெபங்களாய் இருக்கும்.*

■ *இன்றைய நமது ஜெபக்கூடுகைகளிலே வியர்த்து விறுவிறுத்து ஜெபம் நடத்துபவர்களின் முகங்களிலோ, கூடி வருபவர்களின் முகங்களிலோ, "என் தலை தண்ணீரும் என் கண்கள் கண்ணீர் ஊற்றுமாயிருக்குமானால் நலமாயிருக்கும்" என்று மார்பிலடித்து, கண்ணீர் தாரை தாரையாய் ஓட ஜெபிக்கும் ஜெபங்கள் மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! அல்லவோ ??*

■ *முந்திய காலங்களின் எழுப்புதல் ஜெபக்கூடுகைகளிலே பாடல் ஆராதனையில் நடத்துபவர்கள் (ஐரா டி. ஸாங்க்கி, Fanny Crossby, எமில் ஜெபசிங் போன்றவர்கள்) ஆவியில் நிறைந்து பாடும்போதே, கூடி வந்தவர்கள் இருதயம் நொறுங்கி கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். புதிய புதிய பாடல்களும் ஆராதனைகளும் ஆக்கிரமித்திருக்கும் இன்றைய கூடுகைகளிலே மேடையிலேயும் கீழேயும் இது மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! அல்லவோ ??*

■ *இன்றைய மெகா கூடுகைகள் மெகா ஊழியர்களுக்காகவே கூடுவதாகக் காட்சியளிக்கிறதே! இது ஆண்டவருக்காக கெத்சமனேயில் கூடுகிற கூட்டமா அல்லது புகழ்பெற்ற ஊழியர்கள் வருவதால் கூடும் கூட்டமா? இதற்கான பதில் மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! அல்லவோ ??*

■ கூட்டம் முடிந்து இன்று சாப்பிட்டுவிட்டுப் போகும் கூட்டம், கண்ணீரும் கம்பலையுமாய், ஆத்தும பாரத்தோடு வீடுதிரும்புவதைக் காணமுடியவில்லையே! அன்றைய எழுப்புதல் கூட்டங்களின் ஜெப நாட்களிலே கூட்டம் முடிந்து வீடு திரும்புபவர்கள், ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமல், ஒருவித பரிசுத்த பயம் அவர்களைப் பற்றிப்பிடித்திருக்க, கர்த்தர் அன்று தங்கள் மத்தியில் செய்ததை நினைத்துக்கொண்டே வீடு திரும்புவார்களாம். இது இன்று மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! அல்லவோ ??

■ இன்றைய ஜெபக் கூடுகைகளில் ஜெபம் நடத்துபவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்தில், ஜனங்களின் கவனம் தங்கள் மேலேயே பதிந்திருக்கும்படியாகவும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் தாங்கள் நன்றாய் நடத்த வேண்டுமே என்ற அதிகப்படியான அக்கறையோடேயே ஜனங்களை அதிலே ஒட்டியிருக்கப் பண்ணி வைத்திருக்க பல காரியங்களைச் செய்வதைக் நன்றாகவே காணமுடிவதில்லையோ?

மாறாக, ஜாண் ஹைடு என்ற ப்ரேயர் ஹைடு, பஞ்சாபின் கெஸ்விக் மாநாட்டிலே எழும்பி நின்று, எந்த எழுப்புதல் செய்தியுமின்றி, "ஓ! பரலோகப் பிதாவே!" என்ற மூன்று வார்த்தைகளை மட்டுமே மூன்று முறை உச்சரித்தபோது, ஜனங்கள் மத்தியிலே எழும்பிய எழுப்புதல் அலையால் அடியற்ற மரம் போல அவர்கள் சாய்ந்து விழுந்து பாவ உணர்வடைந்து மனந்திரும்பி அழுதார்கள் என்கிறது வரலாறு.

இதைப் போன்ற காட்சிகள் இன்றைய நமது ஜெபக் கூடுகைகளிலே மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங் ! அல்லவோ ??

■ எழுப்புதலுக்கான சூத்திரம் "ஜெபம், ஜெபம், மனஸ்தாப மன்றாட்டு ஜெபம் மாத்திரமே!

"நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம், நாங்கள் கெட்டவர்களாய் நடந்தோம்..எங்கள் சபையாரும், குருக்களும், ஐயர்மாரும், போதகரும், ஊழியர்களும், பிஷப்புகளும், சினாடுகளும் பாவம் செய்தோம்..தேவரீர் எங்கள் அக்கிரமங்களையும் துணிகரங்களையும் மன்னிக்கமாட்டீரோ?" என்பது போன்ற எஸ்றா, நெகேமியா, தானியேலின் பாவ மன்னிப்புக்கான ஜெபங்களோடு, காலை முதல் இரவு வரை பரிசுத்த ஸ்தலத்தில் இராமுழுவதும் முகங்குப்புற விழுந்து கிடந்து ஜெபிக்கும் மன்றாட்டு ஜெபங்களை நமது கூடுகைகளில் இன்று காண முடிகிறதோ?

இது போன்ற அழுகுரல்கள் இன்று *Totally missing missing missing* அல்லவோ??

■ நமது 12 மணிநேர, 8 மணிநேர, எழுப்புதல் இரவு ஜெப வேளைகளில் நடக்கும் இன்னொரு காரியம், ஏற்கனவே நாம் ஆயத்தம் செய்து கொண்டு வந்திருக்கும் ப்ரோகிராமையும், அஜெண்டாவையும் வைத்தே ஜெபங்களை நடத்தி முடிக்கிறோமே! ஆனால் எழுப்புதலுக்கான ஜெபம் என்பது, பரிசுத்த ஆவியானவரே தமது ஆளுகையில் வைத்து கூட்டத்தை நடத்துவது அல்லவோ? நமது திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல்களின்படி அல்ல, அவரது நடத்துதலுக்கு விட்டுக் கொடுத்து நடத்துவது. தேவைப்பட்டால் செய்தியே இல்லாமல், பாடல் வேளைகள், சாட்சி நேரங்கள் குறைக்கப்பட்டு, அவரது நடத்துதலின்படி அதிரடியான மாற்றங்களை அங்கேயே செய்ய நம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுப்பது.

இது இங்கே நம் நடுவே மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! மிஸ்ஸிங்! அல்லவோ??

■ ஜெப கூடுகைகளில் வரும் பெரிய ஊழியர்கள், வரப்போகும் நாட்களில் தேசம் சந்திக்கப்போகும் நெருக்கங்களைப் பட்டும்படாமல் மேலோட்டமாய்ச் சொல்லிவிட்டு, அல்லது வந்த கூட்டம் பயந்து விடக்கூடாது என்று பல உண்மைகளைச் சொல்லாமலே விட்டுவிட்டு, "இதோ, எழுப்புதலுக்கான சூறாவளிக்காற்று, சுழல்காற்று ஒன்று எனக்குத் தெரிகிறது" என்றும், "இந்த வருடத்திற்குள்ளேயோ, வரப்போகும் வருடத்திலேயோ தேவன் தேசத்திலே மகத்தான காரியங்களைச் செய்யப்போகிறார்" என்றும் சொல்லி, மக்களை மாயையான ஒரு மகிழ்ச்சியிலே வைத்திருக்க முயற்சி செய்வதைக் காணமுடியவில்லையோ?

உண்மையான தீர்க்கதரிசனங்கள் மற்றும் தேவனின் மனதிலுள்ள காரியங்கள், பாரங்களை அறிந்து உணர்ந்து மக்களுக்குச் சொல்ல வேண்டியவைகள் இன்று மிஸ்ஸிங் மிஸ்ஸிங் மிஸ்ஸிங் அல்லவோ??

■ ஜெபக் கூடுகைகளின் முடிவில், நடத்தியவர்களுக்கும் ஆர்கனைசர்களுக்கும், ஆராதனை வீரர்களுக்கும், வந்த பிரபல ஊழியர்களுக்கும் ஜனங்களுக்கும் பரம திருப்தி. ஆனால் ஆண்டவரோ அநேக நேரங்களில், தாம் காண வந்ததைக் காண முடியாமலேயே ஏமாற்றத்தோடு கடந்து சென்றுவிடுகிறார் என்பது தான் வேதனையான உண்மை அல்லவோ?

இது இங்கே மிஸ்ஸிங் மிஸ்ஸிங் மிஸ்ஸிங் அல்லவோ??

ஆனால் வரப்போகும் சபையின் சிறையிருப்பின் நாட்களிலும், சபை மறைந்திருந்து கிரியை செய்யப்போகும் காலங்களிலும் ஏறெடுக்கப்படப்போகும் ஜெபங்கள், நமது இன்றைய இப்படிப்பட்ட ஜெபங்களைப் போல இருக்கப்போவதே இல்லை. மறைவான அந்தரங்க இரகசிய சபைகளில் ஜெபம் நடத்தப்படமாட்டாது. ஆனால் ஜெபம் செய்யப்படும்.. ஆவியிலே.. ஆராதனைகள் நடத்தப்படமாட்டாது. ஆனால் ஆராதனை செய்யப்படும்.. ஆவியிலும் உண்மையிலும்.. அந்நாட்களில் ஆங்காங்கே மறைவிடங்களில் நடக்கும் ஜெபங்களிலும் ஆராதனைகளிலும் வீணைகளை மீட்டும் தேவதூதர்கள் இறங்கி வருவார்கள். கர்த்தரே வந்து தமது மகிமையின் பிரசன்னத்தினாலே இருட்டறைகளை வெளிச்சத்தினால் நிரப்புவார்.

இப்படிப்பட்ட ஜெபங்கள், நாம் இதுவரை கேட்டிராத ஜெபங்களாய் இருக்கும். அது நாம் இதுவரை கண்டிராத ஒரு மகிமையின் இரகசிய சபையாய் இருக்கும்.

யோனாவின் மூன்று நாள் உபவாச ஜெபம் போலவே, சபை சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலும், தலைமறைவாகும் காலத்திலும் யாருடைய கண்களுக்கும் தெரியாமல் செய்யும் உபவாசங்கள், பரலோகக் கணக்கிலே பதிவாகும். இன்றைய நமது உபவாச ஜெபங்களுக்கும் அந்நாட்களின் உபவாச ஜெபங்களுக்கும் பாரதூர வித்தியாசம் இருக்கும்.

சபையானது அந்த நாட்களில் பர்வதங்களின் உச்சியில் ஏறாமல், அதின் அடிவாரம் வரை இறங்கும்.

பூமியின் தாழ்ப்பாள்கள் சபையை அடைத்து வைத்து, அப்பொழுது தான் இந்தியாவின் Underground Church எனப்படும் இரகசிய சபை அல்லது அந்தரங்க சபைகளின் காலம் ஆரம்பமாகும்! (யோனா 2:6)

**அக்காலம்...**

**தலைமுறை தலைமுறையான சபையின்**
**காலமாய் அல்ல..**
**தலைமறை சபையின் காலமாய் இருக்கும்!**

## ஒரே ஒரு ஆறுதல்!

அந்த நாட்களுக்குப்பின், யோனாவைக் கரையிலே கக்கிவிட மீனுக்குக் கட்டளையிட்ட கர்த்தர், விலங்கு போட்டு பிராணன்

இரும்பிலே அடைபட்டு, தாம் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் தம் வசனம் கொண்டு யோசேப்பைப் புடமிட்டு, அதன் பின் ஆளனுப்பி அவனைக் கட்டவிழ்க்கச் சொல்லி அவனை விடுதலை செய்த ஆண்டவராம் ஜனத்தின் அதிபதி, ஒரு குறிப்பிட்ட காலம் நிறைவேறியபின் இந்திய சபைகளையும் விடுதலை செய்வார்.

அப்படிப்பட்ட உபத்திரவத்தின் சபை, புடமிடப்பட்ட பொன்னாய் வெளியே வந்து ஒரே ஒரு வார்த்தை பிரசங்கித்தாலும் தேசம் தேவனிடமாய்த் திரும்பும்! அந்த வரலாறு காணா எழுப்புதலின் நாள் தூரமில்லை !



造
Underground Church
魔
It cost him everything he had . . . but he gained everything that mattered.
公義
CHAPTER - 5
~ சீன அந்தரங்க சபைகள் ~
வரப்போகும் நாட்களுக்கு
ஒரு முன்னோட்டம்

# சீன அந்தரங்க சபைகள் வரப்போகும் நாட்களுக்கு ஒரு முன்னோட்டம் !

## Chapter - 5

*யோனாவின் சிறையிருப்பை, வரும் நாட்களின் இந்திய சபையின் சிறையிருப்பின் காலங்களுக்கு ஒப்பிடும்போது, சீனாவின் மிகப்பெரிய சைலன்ட் ரிவைவலுக்கு மிக முக்கிய காரணம், அங்குள்ள அந்தரங்க சபைகளே என்பதால், அந்த அந்தரங்க சபைகள், அவைகள் செயல்படும் விதம், விசுவாசிகளின் அசையா விசுவாசம், சுவிசேஷம் அறிவிக்கும் முறைகள், அவர்கள் கடந்து செல்லும் உபத்திரவங்கள், அரசாங்கத்தின் கெடுபிடிகள், அந்தரங்க சபையின் கூக்குரல்கள், சீன இரத்தசாட்சிகள், எழுப்புதலுக்கு அவர்கள் செலுத்திய விலைக்கிரயம் யாவற்றையும் குறித்த ஒரு கூரிய உள்நோக்குப் பார்வை நமக்கு இங்கே இன்றியமையாததாகிறது.*

*சீன விசுவாசிகளையும் ஊழியர்களையும் சபைகளையும் பார்க்கும்போது இங்கே நாம் எங்கே நிற்கிறோம் என்பது மிகப்பெரிய கேள்வி !*

### இந்த நாள் தான் நான் மரிக்கும் நாளாயிருக்குமோ ?

இன்னும் விடிபகல் இருக்க சில மணி நேரங்களுக்கு முன்பாகவே படுக்கையிலிருந்து எழுந்துவிட்ட "லீ குவான்" தனக்கு மிகவும் பரிச்சயமான இந்தக் கேள்வியைத் தனக்குள் கேட்டுக்கொண்டே கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். எழுந்தவன், ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அருகே அவனது மனைவி "ச்சான் மிங்வா" அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். "பிரகாசமான மலர்" என்னும் பொருள் கொண்ட மிங்வா, அவனுக்கு அதைக் காட்டிலும் மேலாகவே இருந்தாள். நான்கு அடி தள்ளி, கட்டிலில் அவனது எட்டு வயது ஒரே மகன் "லீ ஷென்" தூங்கிக்கொண்டிருந்தான். அருகே சென்று மென்மையாய் அவனது நெற்றியிலே முத்தமிட்டு அவனது விரல்களைப் பற்றிக்கொண்ட லீ குவான், மேற்கண்ட இதே கேள்வியை, தான் ஷென்னைப் போலிருந்த எட்டு வயதிலிருந்தே ஒவ்வொரு நாளும் தனக்குள்ளாகவே கேட்டுக்கொள்வான்.

**“இன்றைய நாள் தான் நான் மரிக்கும் நாளாயிருக்குமோ?”**

ஒவ்வொரு நாளும் அதற்குப் பதில் "இன்று இல்லை" என்பதாகவே இருக்கும். ஆனால் அவனது தகப்பனார், "ஒரு நாள் இந்தக் கேள்விக்கு "ஆம் இன்றுதான்!" என்று பதிலிருக்கும், அந்த நாளில் நீ ஆயத்தமாய் இருக்க வேண்டும்" என்று அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று தான் அவனது தாத்தாவின் தகப்பனார் "லீ மன்ச்சு" தலை வெட்டப்பட்டு இறந்தார். அதேபோல அவனது தகப்பனார் "லீ ட்டோங்" சிறையில் அடித்தே கொல்லப்பட்டதும் ஒரு ஞாயிற்றுக்கிழமை தான். இங்கே இதோ இந்தப் பூஷான் நகருக்கு வெளியே குளிரான இந்த விடிபகலின் இருட்டில் பூக்கும் இந்த நாளும் ஒரு ஞாயிறு தான்..

இதற்குள், மெழுகுவர்த்தியின் வெளிச்சம் பட்டு தூக்கம் கலைந்த மிங்வா, "டைம் ஆயிடுச்சா?" என்று கண்களைத் திறக்காமலே கேட்டாள். ஏற்கனவே பல முறை அவளைப் பற்றி அவன் கனவு கண்டிருந்தது போலவே, அந்தக் குறுகின இரவிலும், அவள் தன் கைகளிலேயே இரத்தம் சொட்டச்சொட்ட உயிர்விடுவது போலக் கனவு கண்டிருந்தான்.

இப்போது இரவு இரண்டு மணி. துரிதமாய் எழும்பிய மிங், கொட்டாவி விடும் தன் மகனை எழுப்பி அவசர அவசரமாய் ஏதோ சாப்பிடக் கொடுக்கிறாள். மூவரும் அந்தக் கும்மிருட்டில் ஊருக்கு வெளியே வெகுதூரத்திலிருக்கும் ஏதோ ஒரு இடத்துக்குப் புறப்படுகிறார்கள்.

தூக்கக் கலக்கத்திலிருந்த ஷென்னைத் தன் சைக்கிளில் முன்னால் உட்கார வைத்துக்கொண்டு, பின்னால் கேரியரில் ஒரு பொட்டலத்தைக் கெட்டியாய்க் கட்டி முடிச்சுப்போடுகிறான் குவான். கூடவே இன்னொரு சைக்கிளில் மிங். பூஷானிலிருந்து பத்து கிமீ தள்ளியிருந்த இந்த மலைக்கிராமத்திலிருந்து மேடு பள்ளமும் ஏற்ற இறக்கமும் இறுகிய சேறும் மண்ணுமான ஒழுங்கற்ற மலைப்பாதையிலே இருவரும் சைக்கிளை மிதிக்கிறார்கள். நிலவு வெளிச்சத்திலே யார் கண்ணிலும் பட்டுவிடக்கூடாதே என்ற கவலை குவானுக்கு. சரி, அப்படியே கண்கொத்திப் பாம்பாய்க் கண்காணிக்கும் பப்ளிக் ப்யூரோ ஆட்கள்

கண்ணில் பட்டால் "பிள்ளைக்கு ரொம்ப உடம்பு சரியில்ல..ஃப்ரெண்ட் வீட்டுக்குக் போகிறோம்..." என்று சொல்லிக்கொள்ள வேண்டியது தான் என்று தனக்குள்ளே சொல்லி ஒத்திகை பார்த்துக்கொண்டான்.

இப்போது 7 கிமீ மலைப்பாதையில் வந்திருந்தார்கள். தூரத்திலே புகை போக்கியிலிருந்து மேலெழும்பும் வெண்புகை தெரிகிறது. ஒரு வழியாக வர வேண்டிய இடத்துக்கு வந்தாயிற்று. சைக்கிளை விட்டு இறங்கி சத்தமில்லாமல் அங்கே "ஹோ லீ"னின் வீட்டுக்குப் பின்புறமாக இருட்டிலே சைக்கிளை கோழிக்கூட்டின் பக்கமாக சாய்த்து வைத்துவிட்டு உள்ளே நுழைகிறார்கள். அங்கே ஏற்கனவே 14 சைக்கிள்கள் வரிசையாக நிற்கிறது.

பின்வாசல் வழியாக அந்த ஒற்றை அறை வீட்டுக்குள், "எப்படி இருக்கிறீர்கள் ?" என்று கேட்டுக் கொண்டே நுழைகிறான் குவான். "உங்களுக்கு சமாதானம்" ' என்று அந்த மங்கிய மெழுகுவர்த்தி வெளிச்சத்திலிருந்து ஒரு குழந்தையின் புன்முறுவலோடு வயதான லிங் ஹோவின் பதில் வருகிறது. அவரது மனைவி "மேய்" ஆன்ட்டி, சூடான டீ கொடுக்க முன்னால் வர, அவரைப் பார்க்கும்போது குவானுக்கு அவனது அம்மா ஞாபகம் வருகிறது. அந்தக் குளிரான காலையில் அவனுக்குத் தேநீர் குடிக்கவேண்டும் போல் இருந்தாலும், ஏற்கனவே லேட்டாகி விட்ட அவன், மனைவி மகனோடு சென்று அங்கு ஏற்கனவே கூடியிருந்த 20 பேரைப் பார்த்து மெல்லிதாக சிரித்துக்கொண்டே உட்காருகிறான். அந்தச் சிரிப்பில் ஒரு பயமும் நடுக்கமும் கலந்திருந்தது.

அந்த ஒரு ரூம் சிறிய ஹாலில் சாய்மானம் இல்லாத பெஞ்ச் ஒன்று, சில நாற்காலிகள், ஒரு படுக்கை அவ்வளவுதான். இதற்கு முன்னால் அந்தக் கூட்டம், பத்து பேராக இருந்தபோது வட்டமாக உட்காருவார்கள். இப்போது இருபது பேராகி விட்டதால் அங்கிருந்த இருக்கைகளில் நெருக்கிக்கொண்டு உட்கார வேண்டியிருந்தது.

மூப்பர் "ஸோவு ஜின்" எழும்பி நின்று, "கர்த்தாவே, உமது அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.." என்று ஜெபத்தைத் துவங்க, "நன்றி ஆண்டவரே.." என்று யாரோ மெல்லிதாகச் சொல்வது கேட்கிறது. அதைத்தொடர்ந்து "நன்றி, நன்றி" என்ற மெல்லிய குரல்கள் சன்னமாய் ஒலிக்கிறது.

இப்போது ஜின்னின் மனைவி துணியில் மிகக் கவனமாய் பொக்கிஷம் போலச் சுற்றப்பட்டிருந்த ஏதோ ஒன்றைக் கொண்டுவந்து அவரிடம் தருகிறார். அதைச் சத்தமின்றி மென்மையாய்த் திறந்து அதிலிருந்து ஒரு பகுதியை வாசிக்கிறார், வீங்கிய கண்களோடு இருந்த அந்த வயதான மனிதர்.

**"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.. விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்;**

**ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.."**
*(எபி 11:8-10)*

அவர் வாசிக்க வாசிக்க, குவானுக்கு அவனுடைய தகப்பனாரின் ஞாபகம் வந்தது.

இது அவருக்கு விருப்பமான ஒரு வேத பகுதி. இந்த வயதான மூப்பரைப் பார்க்கும்போதெல்லாம் அவனால் அவனது தகப்பனாரையும் ஜெயிலில் அவரது சித்ரவதைப்பட்டு சிதைந்த உடலையும், சின்னாபின்னமான அவரது முகத்தையும் நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்கவே முடியாது. இந்த நினைவுகளில் மூழ்கிய அவன் மீண்டும் தன் சுய நினைவுக்குத் திரும்ப, எதிரே வாசித்துக் கொண்டிருந்தவரின் வார்த்தைகள் மறுபடியும் கேட்க ஆரம்பிக்கிறது.

**"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்..**

**இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன்**

*அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.." (எபி 11:13-16)*

*சீன மொழியிலே ஷென் ஜிங் எனப்படும் இந்தப் பழமையான வேத புத்தகத்தின் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க, அவன் இருதயம் இனிமையாலும் துக்கத்தினாலும் நிரம்பியது.*

*"இந்த பூமி நமக்கு சொந்தமல்ல.." என்று ஸோ ஜின் மெல்லிதாகப் பேசப்பேச, அவருக்கு முன்பாக இருந்த அந்த சிறு மந்தை, மலைச்சரிவுகளிலுள்ள ஊற்றுகளின் தண்ணீரைத் தாகத்தோடு குடிக்கக் குனிவது போல முன்னுக்குக் குனிந்து காதுகளைத் தீட்டிக் கவனமாய்க் கேட்கிறது..*

*“என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்..." (யோ 14:2,3)*

*கூடியிருந்தவர்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த ஏக்கப் பெருமூச்சுகளும் விம்மல்களும் அந்த அறையை நிறைத்தது.*

*வாசித்து முடித்து மிகவும் பயபக்தியோடு அந்தப் புத்தகத்தைத் பொக்கிஷப் புதையலாயத் துணியிலே சுற்றித் தன் மனைவியிடம் கொடுக்கிறார்.*

*வேதத்தின் ஒரு பிரதியை ஒருவர் தன்னிடம் வைத்துக் கொள்வதற்கே தனி தைரியம் வேண்டும் என்று தனக்குள்ளே*

*சொல்லிக்கொண்ட குவானிடமும், இன்னும் மூன்று பேரிடமும் மட்டுமே ஆளுக்கொரு பைபிள் இருந்தது. அதைத்தான் அவன் தன் சைக்கிளின் கேரியரில் பத்திரமாய் சுற்றிக் கட்டி வைத்திருந்தான். மற்றவர்கள், கையால் எழுதிய வசனங்களை இப்படிப்பட்ட அந்தரங்க வீட்டு சபைகளிலே ஒருவரோடொருவர் மாற்றிக்கொள்வதுண்டு.*

பாஸ்டர் ஸோ ஜின் தன் பிள்ளைகளைப் போன்ற அந்த சபையைப் பார்த்து, "நமது உண்மையான வாசஸ்தலம் எங்கேயிருக்கிறது என்று அறிந்த நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இந்த இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.."

என்று சொல்லி, தனது சுருக்கமான பிரசங்கத்தை முடிக்கும்போது, "மகிமை" என்ற வார்த்தை வெளிவந்தபோது அங்கே ஒரு மின்னல் வெளிச்சம் வெட்டிப் பிரகாசித்தது.

இதற்குள் பின்னாலிருந்து, தன் தோளைச் சில்லிட்ட கை ஒன்று தொடுவதை உணர்ந்த குவான் கையிலே கிழிந்த பாடல் புத்தகத்தின் பேப்பர் ஒன்று தரப்பட, அதிலுள்ள பாடலை மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அந்த இரகசிய வீட்டுக்குழு மெதுவாய்ப் பாட ஆரம்பித்தது. "இயேசுவே, உமது நாமத்தை என்றென்றும் துதிக்கிறோம்..''அதற்குள் அன்று விடிபகல் இரண்டு மணிக்கு அவன் எழுந்தவுடன் அவனுக்குள் எழும்பிய கேள்வி மறுபடியும் மேலெழுந்து அவனை வதைக்க ஆரம்பித்தது.

**“இன்றைய நாள் தான் நான் மரிக்கும் நாளாய் இருக்குமோ?**

குவானின் தாத்தாவின் தகப்பனார் (பூட்டனார்) வாலிப வயதுப் போதகராய் இருக்கும்போது கொலை செய்யப்பட்டார். அப்போது அவனது தாத்தா "லீ வென்"னுக்கு எட்டு வயது. அவரது கண்முன்னே அவரது தகப்பனார் தலை வெட்டப்பட்டது. குவானின் தகப்பனார் "லீ ட்டோங்." போதகராயிருந்த அவர் சீனக் கலாச்சாரப் புரட்சியின்போது கைது செய்யப்பட்டு அணு அணுவாய்ச் சித்ரவதை செய்யப்பட்டார். ஒரு நாள் ஜெயிலில் அடிபட்ட அவர், அதற்குப் பின் உயிரோடு எழும்பவில்லை. விதவையான அவரது மனைவியின் மேல் பிள்ளைகளை வளர்க்கும் பாரம் விழவே, இப்போது கம்யூனிஸ்ட்டுகளின் குரூரப் பார்வையில் பட்டிருப்பது லீ குவான் மட்டுமல்ல, அவனது எட்டு வயது மகன் "லீ ஷென்" னும் கூட..

சிந்தனையில் ஆழ்ந்தவனை பாஸ்டரின் குரல் உசுப்பியது. அடுத்த முப்பது நிமிடங்கள் பாடுகளிலும் நெருக்கங்களிலும் வியாதியிலும் உள்ளவர்களின் ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபத்தில் வழிநடத்த ஆரம்பித்தவர், கோதுமை மணியானது நிலத்தில்

*விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.. ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.." என்ற வார்த்தையோடு முடித்துவிட்டு உட்கார்ந்தார். உட்காருமுன் வயதான அந்தப் போதகர் காயப்பட்ட, இரத்தம் காய்ந்து தழும்பேறிய தன் கையை உயர்த்தி அந்த சிறு கூட்டத்தை ஆசீர்வதித்தபோது, அந்தக் காட்சி குவானை உருவக் குத்துவது போல இருந்தது. வயதான ஜின் ஏற்கனவே தனது விசுவாசத்துக்காக 15 வருடங்களைச் சிறையில் கழித்திருந்தார்.*

*இப்பொழுது விடியற்காலம் மூன்றரை மணி. வெளியே நிலக்கரி போன்ற கரிய கும்மிருட்டு. கூட்டம் முடியப்போகிறதற்கு அடையாளமாக, "நானும் ஒரு நாள் என் ஆண்டவருக்காக மரிப்பேன்.." என்ற இறுதிப்பாடல் பாடப்படுகிறது. இந்தப் பாடலை அவன் தன் சிறு வயதிலிருந்தே கேட்டிருக்கிறான். மறுபடியும், அவன் அன்று காலை எழும்பும்போது அவனுக்குள் எழுந்த கேள்வி திரும்புகிறது..*

***"இந்த நாள் தான் என் மரண நாளாய் இருக்குமோ?"***

*இப்போது இருட்டோடே அந்த அந்தரங்க சபை அமைதியாய்க் கலைய எழும்புகிறது.*

*அப்போது வெளியிலிருந்து ஒரு முரட்டுக் குரல்...*

*"பை டாங்.."*

*"ஒருவரும் அசையக்கூடாது.."*

*சீனாவின் பப்ளிக் செயூரிட்டி ப்யூரோவின் போலீஸ் அந்த மை இருட்டில் அந்த இரகசிய சபையைச் சுற்றி வளைத்தது ..*

*இனி தப்ப வழியில்லை. குவான், தன் எட்டு வயது பாலகனையும், மனைவி மிங்வாவையும் அணைத்துக் கொண்டவனாய்த் தலைகவிழ்ந்தான்.*

***"இது தான் நான் மரிக்கும் நாளாயிருக்குமோ?"***

***அவன் சிந்தனைகள் மின்னலாய்ப் பின்னோக்கிச் சென்றது. அன்றொரு நாள் அவனது தகப்பனாரைப் பார்க்க அவன் சிறைக்குச் சென்றிருந்தபோது உருக்குலைந்த உருவத்தோடு நின்றிருந்த அவர் தன் ஒரே மகனான அவனைப் பார்த்துச் சொன்னார், *"தம்பி, உனக்கும் இது போன்ற ஒரு நாள் வரும்!"***

*அந்த நாள் இது தானோ? குவானின் உடம்பு சில்லிட்டது...*

***அண்டர்கிரவுண்ட் சர்ச் (டா மன் ஜான்)***
***வரப்போகும் நாட்களுக்கு ஒரு முன்னோட்டம் !***

*சீனாவின் பெருநகர்களில் ஒன்றான குவாங் சௌ..*

*பஸ்களும் லாரிகளும் டாக்ஸிகளும் கண்மண் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தன.. சீனாவின் மற்ற நகரங்களைப் போலவே இங்கும் வாகன ஓட்டிகள், பாதசாரிகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.*
*ஷாங் ஹான் 5 என்ற இடத்தின் பஸ் ஸ்டாப்பில் பஸ் ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து இறங்கினான் "ஆ லெங்." யுனிவர்சிட்டியின் கெமிஸ்ட்ரிடி டிப்பார்ட்மென்ட்டிலுள்ள அவனது ஃப்ரெண்ட் "வு ஸான்" சொல்லியிருந்தான், "நீ பஸ்ஸை விட்டு இறங்கியதும், டா மா ஜான் தெருவில் நேரே வந்து கொண்டேயிரு..அது ஒரு குறுகலான தெரு தான்..வண்டி போறதுக்குக் கூட வழியில்லாம இருக்கும்...*

*நேரா வந்தா ஒரு சின்ன இரும்பு கேட் இருக்கும். அதற்குள்ள நுழைஞ்சு வா.. 35 ம் நம்பர் வீடு.. அது வழியா மேல வா.."*
*தெளிவாகச் சொல்லியிருந்தான் வு ஸான். குறுக்கும் நெடுக்குமாய்ப் போய்க்கொண்டிருந்த வாகனங்களை*
*அற்புத விதமாய்க் கடந்து இரும்பு கேட்டுக்கு வந்து சேர்ந்ததும் அந்தத் தெருவைத் திரும்பிப் பார்த்தான் ஆ லெங். அது என்னவோ மன்ச்சூஸ் காலத்துப் பழங்காலத்துத் தெரு மாதிரி இருந்தது.*

ஆங்காங்கே நின்று கொண்டிருந்த ஆட்கள் சிலர்..
விளையாடிக்கொண்டு.. சிலர் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு..
சிலர் நடந்துகொண்டு ..
சின்னச்சின்னத் துணிக்கடைகள், மளிகைக்கடைகள், பெட்டிக் கடைகள்..
என்று பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான். ஏதோ ஒரு வித கலப்படமான வாசனை ஒன்று காற்றில் மிதந்து வந்தது. பன்றிக்கறியும், மீனும், சோறும், காய்கறி பழங்களும் கலந்து விற்கும் வண்டிக் கடைகளின் ஒருவிதமான வாசனை. தெரு வாசனையையும் சத்தத்தையும் தாண்டி ஒவ்வொரு வீட்டு நம்பராய்ப் பார்த்துக்கொண்டே நடந்து வந்தான் லெங். 63...49...வந்து விட்டான்... டா மன் ஜானின் 35ம் நம்பர் வீடு இதோ!

வீட்டு வாசலை அடைந்ததும் மெல்லிய பாடல் சத்தம் கேட்கிறது..

**"கர்த்தருக்காய்ப் பாடனுபவிப்பதல்லவோ அவரைச் சேவிப்பது..
அவரது கண்ணீர் போலவே நம் கண்ணீரும் பரலோகம் தொடுமே..**

**எல்லாக் கிருபையும் ஒருசேர அளிக்கப்பட்ட
அவரது வார்த்தையின் பிள்ளைகள் நாம்..**

அந்த வரிகளும் ராகமும் அந்த மாணவனின் மெல்லிய உணர்வுகளை எங்கோ தொட்டது.

ஆஹ் லெங் - 1980களின் பிற்பட்ட வருஷங்களில் படித்து வந்த ஒரு விஞ்ஞான மாணவன்..உலகத்தை ஆண்டு அனுபவிக்கத் துடிப்பவன்..கடவுள் நம்பிக்கையற்றவன்..

அந்த வீட்டின் இருளும் குறுகலுமான ஏணிப்படிகளில் மெதுவாய்க் கால்வைத்து ஏறினான். மேலே மங்கலாய் எரிந்துகொண்டிருந்த பல்பு வெளிச்சத்தில் ஏணிப்படிகளிலேயே 12 பேர் உட்கார்ந்திருந்தது தெரிந்தது.

"மேல போனா ஒரு சர்ச் இருக்கும்னு" என் ஃப்ரெண்ட் "வு ஸான்" சொன்னானே..

“இதுதான் சர்ச்சா?
" கேட்டுக்கொண்டே கவனமாய்க் கால்வைத்து ஏற ஆரம்பித்தவனை ஏணிப்படியின் கீழ்ப்படியில் இருந்த ஒரு பெண், "உங்களை வரவேற்கிறோம்..

இந்த நல்ல மாலையிலே கர்த்தர் உங்களோடு இருப்பாராக!" என்று வரவேற்று தனக்கருகிலிருந்த படிக்கட்டில் உட்காரும்படி சொன்னாள். இதற்குள் மேலே இருந்தவர்கள், அவனுக்கு வழிவிட்டு தங்களுக்கு அருகே உட்காரும்படி கூப்பிட்டார்கள்.

பாடல் சத்தம் நின்றபோது அங்குள்ள ஸ்பீக்கரில் ஒரு மனிதனின் மென்மையான, ஆனால் அதிகாரமுள்ள குரலொன்று ஒலித்தது.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வரவேற்கிறோம்..

நீங்கள் முதல்முறையாக வந்திருப்பீர்களேயானால், இன்னொரு முறை உங்களை வரவேற்கிறோம்... "சுவிசேஷம் அறிவிப்பதும் கிறிஸ்தவ வாழ்வை எப்படி வாழ்வது என்பதையும் இணைந்து கற்றுக்கொடுப்பதுமே இங்கே எங்கள் நோக்கம்" என்று பேச ஆரம்பித்தார்.

இதற்குள், பேசிக்கொண்டிருந்த அவரை எப்படியாவது பார்க்க வேண்டுமென்று விரும்பிய ஆ லெங், எப்படியோ நெருக்கி மேல் தளத்துக்குப் போய்விட்டான். அங்கே சைக்கிள் சீட் போன்ற இருக்கைகளில் நெருக்கி நெருக்கி ஒரு நூறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்ணை யுனிவர்சிட்டியில் எங்கேயோ பார்த்தது போலிருந்தது. புரஃபஸராக இருப்பாரோ? அருகில் அவரது கணவன் போலும்.. இன்னொரு கதவு வழியாக ஒரு வாலிபப் பெண் உள்ளே நுழைந்தாள். "நீ முதல் தடவை வந்திருக்கியா? இங்க நம்மள மாதிரி நிறைய ஸ்டூடன்ட்ஸ் இருக்கிறாங்க.." என்று சந்தோஷமாய்ச் சொன்னாள். அவனுக்கு இதெல்லாம் புது அனுபவமாக இருந்தது. படித்த அநேகரை அங்கு பார்க்க முடிந்தது.

தரையை விட்டு சற்று உயரமாயிருந்த சிறிய மேடை ஒன்றில் ஐந்தரை அடி உயரமுள்ள பாஸ்டர் "முக் ஸி" நின்று பாடல் பாடிக்கொண்டிருக்தார். அவரைப் பார்க்கும்போது அவனுக்கு சோஷியல் ஃபிலாசஃபி எடுத்த அவனுக்குப் பிடித்த புரபஸர் ஒருவர் ஞாபகத்துக்கு வந்தார்.

அவன் உட்கார்ந்தபோது அன்றைய நாளுக்கான பிரசங்கத்தின் அறிமுகம் தொடங்கியது. கருப்பொருள் : "தேவன் ஜீவனுள்ளவர்.." அவர் பேசப்பேச, ஏதோ ஒன்று அவனுடைய முதுகெலும்புக்குள் பாய்ந்து செல்வது போன்ற ஒரு உணர்வு..

அந்தக் கருப்பொருளின் குறிப்பு கொடுக்கப்பட்ட பேப்பரை ஒரு தடவை திருப்பிப் பார்த்துக்கொண்டான் லெங்.

இதற்கு முன் அவன் கிறிஸ்தவ ஆலயங்களைப் பார்த்ததுண்டு. பக்கதிலிருந்த ஒரு வாலிபனைப் பார்த்து, "இது தான் சர்ச்சா?" என்று புரியாமல் கேட்க, "இது ஹவுஸ் சர்ச்" என்றான் அவன் மெதுவாக.."சீனாவிலே ஹவுஸ் சர்ச் நிறைய உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சொல்ல, அந்த சபையைப் பற்றி ஒரிரு வரிகளில் சுருக்கமாய்ச் சொன்னான் அருகிலிருந்த இளைஞன்.

"இது பாஸ்டர் Samuel Lamb அவர்களின் வீடு. இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான ஹவுஸ் சர்ச் மூவ்மன்ட்டுக்கு தலைவர் அவர். இது தான் பெரியது. மிகத் தாழ்மையான மனிதர் அவர்.. மிகுந்த மதிப்புக்குரியவர்.." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஜெபத்தோடு அன்றைய பிரசங்கம் தொடங்கியது.

"உண்மையிலே நம் தேவன் ஜீவனுள்ளவர். அவரது வார்த்தை என்றென்றைக்கும் உண்மையும் மாறாததுமானது. அவர் பேசப்பேச, "ஆ லெங்குக்கு" அவன் அது வரை படித்ததிலும், இவர் பேசுவதிலும் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிய, கவனமாய்க் கேட்க ஆரம்பித்தான். இப்பொழுது அவனது சிந்தனை பரந்ததாய், கவனிக்கக்கூடியதாய் இருந்தது.

"நாமெல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம்.." பாஸ்டர் பேசிக்கொண்டிருந்தார்.

"மனிதனின் மதங்கள் செத்துக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.."என்று யாரோ ஒரு புரஃபசர் சொன்ன வார்த்தையை பாஸ்டரின் வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அதே நேரம் விக்கிரக ஆராதனையில் மூழ்கியிருந்த அவனது தாயோடு அவன் செலவழித்த அவனது சிறு வயது ஞாபகம் வந்துபோனது அவனுக்கு ..

பாஸ்டர் பேசினார்.."மனிதனின் மனதில் சந்தேகங்கள் வந்து போவது இயற்கை. நானும் கூட என் விசுவாசத்துக்காக இருபது வருடம் ஜெயிலில் இருந்தபோது இப்படிப்பட்ட சந்தேகங்கள் வந்ததுண்டு. ஆனாலும், என் விசுவாசம் ஒரு போதும் ஆட்டம் கண்டதில்லை. அப்படி ஆக நான் ஒரு போதும் இடம் கொடுத்ததில்லை .."

ஆ லெங் யோசித்தான், "20 வருடம் ஜெயிலில் இருந்தாரா? "வு ஸான்" இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே? ஒரு வேளை என்னை ஏமாற்றி இங்கே கூட்டி வந்து விட்டானோ..? அதே நேரம், கம்யூனிஸ்ட் காம்ரேடாக இருந்த தன் சகோதரியை நினைத்தான். அவள் ஒரு போதும் சமாதானமும் சந்தோஷமுமாக இருந்து அவன் பார்த்ததே இல்லை. "ஆனால் இங்கேயோ எல்லார் முகத்திலும் என்ன ஒரு சந்தோஷம்..!"

இந்த நினைவுகளில் மூழ்கியவனை பாஸ்டரின் சத்தம் திருப்பியது. "சகல ஆளுமையும் அதிகாரமும் கொண்ட சிருஷ்டி கர்த்தர் மனிதனைப் படைக்கும்போதே - அவரே நிரப்பக்கூடிய வெற்றிடத்தோடே கூடவே அவனை சிருஷ்டித்தார்.. எபிரேயர் 11:1 சொல்கிறது, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது.."

அங்கே இருந்தவர்கள் சேர்ந்து அந்த வசனத்தைப் படிக்க, ஆ லெங், தனக்கு அருகிலிருந்த வாலிபனைப் பார்த்து,"நீயும் ஒரு பிலீவரா ?" என்று கேட்க, அவன், "ஆமா, நான் விசுவாசியாகி மூன்று மாதமாகிறது, நீயும் இரட்சிக்கப்பட விரும்புகிறாயா?" என்று கேட்க, "எனக்குத் தெரியலையே?" என்றான் லெங்.

"இந்த மீட்டிங் முடிந்ததும், புதுசா வந்தவங்களை மீட் பண்ணுவாங்க..உன் சந்தேகத்தைக் கேட்கலாம்.." என்றான் அவன்.

அதன் பின் வெகுநேரம் அமைதியாய் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த "ஆ லெங்"கினுக்குள் தேவன் கிரியை செய்ய ஆரம்பித்தார்..

சன்னமாய் அவன் காதுகளில் அந்தப் பாடல் ஒலிக்கிறது..

**எனக்காக மரித்தவருக்காக நான் ஜீவிக்கிறேன்**
**பாடுகள் மேலெழும்பும்போது அவரது கிருபை காண்கிறேன்..**

***உக்கிரத்தின் அலைகள் என் மேலெழும்பினாலும்***
***அவரது அன்பின் இரக்கம் என் மனதை அமைதியாக்குமே..***

பாடல் அவன் செவிகளில் ரீங்காரமிட அதையே மென்மையாய் முணுமுணுக்க ஆரம்பிக்கிறான்..

இப்படியாய் சில நாட்களிலேயே 35, டா மன் ஜானின் அந்தரங்க சபையில் ஐக்கியமாகிறான் ஆ லெங்..

இதைப் போன்று சீனாவெங்கும் இலட்சக்கணக்கான தேன்கூடு சபைகள். வாலிபர், படித்தவர்கள், பாமரர்கள் என்று பல கோடிகளைத் தொடுகிறது என்கிறது புள்ளிவிபரம். இவைகளே சீன எழுப்புதலுக்கு அஸ்திபாரமும் ஆதாரத் தூண்களுமான அந்தரங்க சபைகள்..

***அண்டர்கிரவுண்ட் சர்ச் (போதகர் லீ டெக்ஸியன்)***
***"நான் சாகும்வரை பிரசங்கித்துக் கொண்டே இருப்பேன்.."***

பாஸ்டர் லீ டெக்ஸியன் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது அந்த அந்தரங்க சபைக்குள் புயலாய் நுழைந்தது பப்ளிக் செயூரிட்டி போலீஸ். அவர்கள் அவரையும் அந்த சபையினரையும் அடித்து இழுத்துக் சென்றனர் போலீஸ் ஸ்டேஷனுக்கு. ஸ்டேஷனில் அவர் இரத்த வாந்தி எடுக்கும் வரை அவரை அடித்து மிதித்தது போலீஸ். அவர் மூர்ச்சித்து சுயநினைவின்றி விழும்வரை அவரது பைபிளை வைத்தே அவரது முகத்தில் அறைந்தனர் அவர்கள்.

ஆனாலும் ஏழு மணி நேரம் கழித்து ரிலீஸ் செய்யப்பட்ட அந்த மனிதர் மறுபடியும் பிரசங்கிக்க ஆரம்பித்தார். அடுத்த முறை அவரைப் பிரசங்கிக் கண்ட PSB ஆபீசர்கள் அவரோடு சில மேல்நாட்டு ஊழியர்களையும் கண்டு திரும்பிச் சென்று இன்னும் அதிமான போலீஸ் படையைத் தங்களுடன் அழைத்து வந்து அவரைக் கம்புகளாலும் இரும்புக் கம்பிகளாலும் அடித்து துவைத்தனர். ஆனாலும் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டிருந்த பைபிளை மட்டும் அவர் விடவே இல்லை.

“சீனாவில் மத சுதந்திரம் உண்டு என்று சொல்கிறீர்களே?" பின்னை ஏன் இவரை இப்படி அடிக்கிறீர்கள்?" என்று எதிர்ப்புத் தெரிவித்த அந்த மேலை நாட்டவர்களோடு வீட்டு ஓனரையும் சேர்த்து இழுத்துச் சென்றது போலீஸ். அந்த சம்பவத்துக்குப் பின் அந்தக் கிராமத்தில் பெரிய கூட்டங்கள் நிறுத்தப்பட்டுப்போனாலும் சபை கூடுதல் மட்டும் நிற்கவே இல்லை. இப்போதும் 40 க்கும் மேற்பட்ட சிறு குழுக்களாகக் கூடிவரும் அவர்களோடு புதியவர்கள் பலரும் கிறிஸ்துவைக் கண்டடைகிறார்கள்.

இன்னொரு இடத்தில் இதே பாஸ்டர் லீ பிரசங்கித்துக்கொண்டிருந்தார். இப்பொழுதும் கதவுகளை உடைத்துக்கொண்டு உள் நுழைந்து அவரை இழுத்துச் செல்கிறது போலீஸ்.

"கொஞ்சம் நில்லுங்கள், என் பையை எடுத்துக்கொள்கிறேன்.." என்று தைரியமாய்ச் சொன்ன லீ டெக்ஸியனின் தைரியத்தைக் கண்ட போலீஸ், "பையில் என்ன இருக்கிறது ?" என்று பிடுங்கி அதைத் திறந்து பார்த்தபோது ஒரு போர்வையும் ஒரு ஜோடி மாற்றுத் துணியும் மட்டும் இருந்தது. "நான் இன்று கைது செய்யப்படுவேன் என்று அறிந்திருந்தேன். அதனால்தான் ரெடியாக இருந்தேன்" என்று லீ சொன்னார்.

பாஸ்டர் லீ இதற்கு முன்னாலும் பலமுறை கைது செய்யப்பட்டிருந்தார். குறிப்பிட்ட அந்த கிராமத்துக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் அவர் வந்து போவது போலீஸுக்குத் தெரியவந்திருக்கிறது என்று அவர் எச்சரிக்கப்பட்டிருந்ததால், தான் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்று தன் பையை மாத்திரமல்ல தனது மனதையும் அவர் எப்போதும் ஆயத்தப்படுத்தியே வைத்திருந்தார்.

சுவிசேஷத்துக்காக எந்த விலையையும் செலுத்த அவர் ஆயத்தமாகவே இருந்தார்.

அவருக்கு நிச்சயமாகவே தெரியும் - தேவன் அவரைக் காத்துக்கொள்ள வல்லவர் என்று - ஆம் சிறையிலும் கூட !

## *"இந்திய சபைகளின் கனிவான கவனத்திற்கு .."*

■ *சீன அந்தரங்க சபை ஒன்றின் போதகர் ஒருவர்..கம்யூனிஸ்ட் அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார்..அவரை அடித்துத் துவைத்துத் தன் விசுவாசத்தை மறுதலிக்க வைக்க என்னென்னவோ செய்து பார்க்கிறார்கள். ஒன்றும் பலிக்காமல் போகவே, உக்கிரத்தின் உச்சிக்குச் சென்ற அவர்கள் ஒரு சவப்பெட்டியைக் கொண்டு வந்து அவரை தற்குள் படுக்க வைத்துவிட்டுச் சொன்னார்கள், "கடைசியாய்ச் சொல், இது தான் உன் இறுதி முடிவு. உன் இயேசுவை மறுத்துவிடு. உன்னை விட்டுவிடுகிறோம்.." அவரது ஒரே பதில், "நான் என் ஆண்டவரை ஒரு போதும் மறுதலிக்கமாட்டேன்.."*

*அவரை உள்ளே படுக்க வைத்துப் பெட்டியை மூடி ஆணி அடித்துவிட்டுச் சிறிது நேரம் காத்திருந்தார்கள் ஏதாவது சத்தம் வருமென்று.. சத்தமில்லை. இன்னும் கோபம் தலைக்கேற, கத்திக் கொண்டே பெட்டியை உதைத்து மிதித்தனர். ஆனாலும் உள்ளிருந்து மூச்சிழுத்து முனகும் குரல் மட்டுமே வர, கடைசியாய் அவர் மூச்சடைத்துத் துடிதுடித்துச் சாகும்படி அப்படியே உயிரோடு அந்தப் பெட்டியை மண்ணுக்குள் புதைத்தனர்.*

■ *சீன அந்தரங்க சபை என்பது எங்கு, எப்போது, எப்படிப்பட்ட சூழல்களில் கூடிவருகிறது என்பது அல்ல, அவர்களது வீட்டு சபை என்பது மக்களால் ஆனது மட்டுமே. ஒரு முறை வருபவர் அடுத்த முறை பங்குபெற வருவாரா என்பதே கேள்வியான சூழல் ஒன்று அங்கே உண்டு.அப்படி ஒரு வீட்டு சபையிலிருந்து ஒரு இளவயது சைன்ஸ் டீச்சர் ஒருவர் திடீரென்று காணாமல் போனாள். அவள் செய்தது, தன் பள்ளியில் டார்வின் தியரியை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்று மறுத்ததே.. சீனக் கலாச்சாரப் புரட்சிக்குப்பின் நல்ல விஞ்ஞான ஆசிரியர்கள் கிடைப்பதே அங்கு அரிதாகிப் போனதால் அவளை எப்படியாவது தங்கள் கொள்கைளுக்கு இணங்க வைக்கக் கம்யூனிஸ்ட்டுகள் படாதபாடுபட்டனர்.*

*"டார்வின் தியரி என்பது தேவனுக்கு விரோதமானது மட்டுமல்ல, அது பொய்யான ஒன்று.. நாம் ஒன்றும் குரங்குகள் அல்ல, தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள்.." என்பதை மட்டும், தான் சித்ரவதைப்பட்டு உடைந்த பற்களோடும் திரும்பிச் சரிந்த தாடையோடும், இரத்தம் வழிய வழிய திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.*

இன்று அந்தப் பள்ளியில் அவள் ஒரு ஆசிரியையாய் அல்ல, ஒரு வேலைக்காரியாய் வெளியில் போக முடியாதபடி சிறை வைக்கப்பட்டிருக்கிறாள்.

■ அருமையான டாக்டர் ஒருவர். "கிறிஸ்துவை விட சேர்மன் மாவோ சேதுங் தான் பெரியவர்" என்று சொல்லும்படியாய் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு மறுத்துவிட்டவர். செம்படையினர் அவரை அடித்து அவரது ஆஸ்பத்திரித் தரையிலேயே குற்றுயிராய் விட்டுச் சென்றனர். சில நாட்களுக்குப் பின் திரும்பி வந்தவர்களுக்கு அவர் சொன்ன பதில், "என்னுடைய கிறிஸ்து உண்மையிலே மாவோவை விட மிகப்பெரியவர். அவரே கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமானவர். வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா சிருஷ்டிக்கும் மேலான நாமமுள்ளவர் அவர் ஒருவரே! அவரே கிறிஸ்து !"

இன்னும் அடி, இன்னும் உதை..
கடைசியாக ஆடையெல்லாம் உரியப்பட்ட அந்த வயதான சீனியர் டாக்டரை, அவரது ஆஸ்பத்திரியிலேயே எல்லாருக்கும் முன்பாக ஆறு இஞ்ச் அகலமுள்ள பெஞ்ச் ஒன்றில் மாலை 7 மணி முதல் அடுத்த நாள் காலை 10 மணி வரை நிற்க வைத்திருந்தனர். "இப்பொழுது சொல், உன்னைக் காப்பாற்றும் அதிகாரம் மாவோவின் மக்களான எங்கள் கையிலிருக்கிறதா அல்லது உன் இயேசுவின் கையிலா? எங்கள் மாவோவை விட உன் இயேசு பெரியவராய் இருந்தால் எங்கள் கையிலிருந்து அவர் உன்னைக் காப்பாற்றட்டும்.." அவர் சொன்னார், "மூன்று நண்பர்களை அக்கினிச் சூளையில் போட்டபோது அக்கினியின் மணம் கூட அவர்கள் மேல் படாமல் அவர்களோடிருந்து காத்தவர் என்னோடும் இருக்கிறார்.."

நடந்தது என்ன?
அந்த நிலையிலும் ஆடாமல் அசையாமல் 15 மணிநேரம் அந்த ஆறு அங்குல பெஞ்ச்சில் நின்று கொண்டிருந்த அவரது உடலில் ஒரு தசை கூட அங்குமிங்கும் அசையாமல்

அப்படியே நின்றிருந்தது. நிர்வாணமாய் நிற்க வைக்கப்பட்ட அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு வேதனை ஒரு பக்கம். ஆனால் அவரைச் சித்ரவதை செய்தவர்களுக்கோ, "இந்த வயசான கிழவனுக்கு எங்கிருந்து வந்தது இத்தனை பெலன்?" என்று ஏமாற்றமும் கோபமும் கொப்பளிக்க, கடைசியாய் ஆஸ்பத்திரி நோயாளிகளின் முன்னிலையிலேயே அவரைத் தூக்கிலிட்டனர்.

*அவருக்கு இன்னும் உயிர் போகாமலிருக்கும்போது அந்தச் செம்படை வீரர்களுக்குள்ளேயே வாக்குவாதம். ஒருவன் அந்தக் கயிற்றை அறுத்து விட, தரையில் விழுந்த அவர், "நான் தொங்கிக் கொண்டிருக்கும்போது என் இருதயம் உங்களுக்காக உருகியது.." என்று அவர்களுக்குத் தன் கடைசிப் பிரசங்கத்தைச் செய்துகொண்டே, தன் முன்னோடியான ஸ்தேவானைப் போல உயிர்விட்டார்.*

■ ஒரு வீட்டு சபை எப்படியிருக்கும்? அதில் பங்குபெறுபவர்கள் யார் யார்?

*அப்படிப்பட்ட அந்தரங்க சபையிலிருந்து பிடிபட்டு இழுத்துவரப்பட்ட இளம்பெண் ஒருவர்.. 19 வயது தான்.. ஜெயிலின் டஞ்சன் அறை ஒன்றில் அடைத்துப் பூட்டினர். பூமிக்குக் கீழான ஒரு இருட்டறை. தரையெல்லாம் ஈரம். அறையின் வாடையே சொன்னது..அது ஒரு மனிதக் கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டும் இடமென்று.. பூச்சி புழுக்கள் அவளது உடலில் மேய, எலிகளுக்கும் பஞ்சமில்லாதிருந்தது அங்கு.. உட்காரவோ சாயவோ படுக்கவோ இடமில்லை. அப்படியே உட்கார்ந்தாலும் படுத்தாலும் அது அவளது, அல்லது மற்றவர்களின் கழிவுகள் மேலே தான் என்னும் நிலை. அப்படியே உட்கார்ந்த அவள் கையில் ஏதோ வெதுவெதுப்பாய் ஓடுவது போலிருந்தது. தொட்டுப்பார்த்தாள். இரத்தம்! அடிபட்ட போது வடிந்த இரத்தம் இன்னும் காயவில்லை. உடலெல்லாம் வீங்கிப் போயிருந்தது.*

*அப்படியே மூச்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவள், தான் கர்த்தருக்காகப் பாடு அனுபவிக்கப் பாத்திரமாய் எண்ணப்பட்டதற்காக அவரைத் துதிக்க ஆரம்பித்தாள். ஆண்டவரை மறுதலிக்க மறுத்திருந்த அவளுக்குக் கிடைத்த அடியும் வேதனையும் தனிமையும் நிறைந்த அந்த இருட்டறை அவளுக்கு சமாதானத்தின் வீடாய் மாறியது. ஆனாலும் பயங்கரமான அந்த இடத்திலிருந்து தன்னை விடுதலை செய்யும்படியாய் அல்ல, "இப்படிப்பட்ட இடத்திலும் கர்த்தாவே, உம்முடைய சுவிசேஷத்தை அறிவிக்கவும் உமக்கு சாட்சியாய் நிற்கவும், தேவரீர் எனக்கு வாய்ப்பையும் பெலனையும் ஞானத்தையும் கிருபையும் தாரும்.." என்று ஜெபித்தாள். நாட்கள் ஆக ஆக வடிந்து கொண்டிருந்த இரத்தம் காய்ந்து, வீக்கம் வற்றி அவளும் அந்த இடத்துக்குப் பழகிப் போய்விட்டாள். ஒரு நாள் அந்தக் கழிவுகள் மேலேயே உட்கார்ந்திருந்த அவள் பாடலொன்று பாடிக் கொண்டிநந்தபோது செய்தி ஒன்றை தேவன் அவளுக்குக் கொடுத்தார். "இது தான் உன் ஊழியம்!"*

"ஆண்டவரே, ஒரு மனித முகமும் பார்க்க முடியாத இந்தத் தனிமைச் சிறையிலே யாருக்குப் போய்ப் பிரசங்கிப்பது ?" என்று கேட்டாள் அவள். ஆனாலும் கர்த்தர் தன்னை உபயோகப்படுத்தும்படியாய் ஜெபித்துக்கொண்டே இருந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. தனக்குக் காவலுக்கு நின்று கொண்டிருந்த செக்யூரிட்டி கார்டிடம் சொன்னாள், "சார், எனக்கு ஏதாவது கடினமான வேலை கொடுங்கள், செய்கிறேன்.. என்ன வேலைனாலும் கொடுங்க.." என்று சொல்லிவிட்டு, "இங்கே உள்ள சிறை அறையெல்லாம் அழுக்கும் குப்பையும் நாற்றமும் மனிதக் கழிவுமாய் நிறைஞ்சு கிடக்குது..நான் போய் ஒவ்வொரு அறையா க்ளீன் பண்ணட்டுமா சார் ? கொஞ்சம் தண்ணியும் ப்ரஷ்ஷும் மட்டும் குடுங்க.." என்றாள்.

அவ்வளவு தான். அவன் சரியென்று சொல்லவே, ஒவ்வொரு செல்லிலும் போய், முழங்காலிலும் கையிலுமாக நின்று துடைத்தெடுத்தாள் - கூடவே அந்தந்த செல்லில் இருந்தவர்களுக்கு சுவிசேஷம் சொல்லிக்கொண்டே சென்றாள். அவர்களில் ஒருவராவது, தங்களை யாரும் ஏறெடுத்துப் பார்க்கக்கூட முடியாத அளவு முகமெல்லாம் உருக்குலைந்துபோயிருந்தவர்கள். தங்களையும் நேசிப்பவர் ஒருவர் உண்டு என்றும், தங்களுக்கும் ஒரு நித்திய ஜீவன் உண்டு என்றும் அவர்கள் கேட்டவுடன் அவர்களில் அநேகர் அங்கேயே அப்போதே மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

அங்கே அற்புதம் ஒன்று நடந்தது. கைதிகள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டதைக் கண்ட ஜெயிலர்கள், அவர்கள் மனதை மாற்ற எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே, இதற்குக் காரணமான அவளை உட்காரவைத்து, உன் குற்றங்களை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடு என்று கத்தை கத்தையாய்க் காகிதங்களை அவள் கையில் திணிக்க, தன் ஒப்புதல் வாக்குமூலம் போலவே, தான் அறிவித்த சுவிசேஷத்தைப் பக்கம் பக்கமாய் எழுதிக் கொடுத்தாள் அவள். தன் கீழ் வேலை செய்யும் அதிகாரிகள் யாவரையும் வரவழைத்து, வார்த்தை வார்த்தையாய் ஒவ்வொரு பக்கத்தையும் சத்தமாய் தெளிவாய் வாசித்துக் காட்டினான் அவளது வார்டன். மறைமுகமாய் சுவிசேஷம் அவர்கள் காதுகளுக்குச் சென்றடைய, அதினால் சிலர் தொடப்பட, தமது இரட்சிப்பின் திட்டமொன்றை அமைதியாய் அங்கே செயல்படுத்தினார் தேவன்

■ இரவே பகலோ, மழையோ காற்றோ, வெயிலோ குளிரோ, எந்த நேரத்திலும் வருடத்தின் எல்லா நாளும், இடத்துக்கும் நேரத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப சீனாவின் வீட்டு சபைகள் கூடுவது வழக்கமாயிருந்தது.

இவர்கள் அவரது ஜனமாயிருந்தனர்- பாடித் துதித்து ஜெபித்து அழுது தேவனை ஆராதிப்பவர்கள் இவர்கள். இவர்களில் ஒருவரிலாவது கசப்பின் சுவடு முதலாய்க் காணப்படாது. கசப்போ, காழ்ப்புணர்வோ, பழிவாங்குதலோ - அந்த எண்ணம் கூட அவர்களில் தோன்றுவதே இல்லை. "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று யாராவது அந்தரங்க சபை விசுவாசி ஒருவரைக் கேட்டால், "சில நேரங்களில் எங்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

ஆனால் இங்கே சீனாவிலே விசுவாசியாய் இருக்கவேண்டுமென்றால் இப்படித்தான் இருந்தாக வேண்டும்.. இப்படி ஒரு விலையைக் கொடுக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.." என்று சாதாரணமாகப் பதில் வரும்.

இப்படிக் கேட்கப்பட்ட ஒருவரிடம், "இன்னும் கொஞ்சம் இதைப் பற்றிச் சொல்லுங்களேன் !" என்று கேட்டபோது பேச ஆரம்பித்தார்..

"நான் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு சமயத்தில் ஒரு அறையின் மூலையில் 10 பேர் ஒருமிக்க நெருக்க இறுக்கமாய் அடைக்கப்பட்டிருந்தோம். ஒருவரோடொருவர் பேசவோ, பகலில் கண்ணை மூடவோ அனுமதியில்லை. அவ்வப்போது செயூரிட்டிகார்டு ஒருவன் கண்ணாடி துவாரம் வழியே பார்த்துக்கொண்டேயிருப்பான். அவர்களில் அநேகர் வியாதிப்பட்டனர். சிலருக்குப் பைத்தியம் பிடித்தது.

ஒரு நாள் என்னோடு அடைபட்டிருந்த சக கைதி ஒருவர் என் காதிலே கிசுகிசுத்தார், "உன் நம்பிக்கையும் விசுவாசமும்தான் உன்னை உயிரோடிருக்க பெலப்படுத்தி வைத்திருக்கிறது. "அன்றிலிருந்து புதிய ஊழியம் ஒன்று அங்கே பிறந்தது.

இன்னொரு நாள் அறைக்குள் புகுந்த கார்டு ஒருவன், "ஏண்டா சிரிக்கிற?" என்று என்னை அடிக்க வந்தான். "நான் சிரிக்கலையே" என்றேன். "இல்ல நீ சிரிக்கிற.."

அவன் போன பிறகு மற்றவர்கள் சொன்னார்கள், "உன் கண் எப்பவும் சிரிச்ச மாதிரியே இருக்குது.. நீ சிரிக்கலனாலும் உன் முகத்தில ஏதோ ஒரு சந்தோஷப் புன்முறுவல் வெளிச்சமா தெரியுது..!" நாளடைவில் உடனிருந்தவர்களும் இயேசுவைக் கண்டு கொண்டனர்.

***சீன இரகசிய வீட்டு சபைகளின் அனுபவங்களில் கடலில் ஒரு துளியே இது !***



# சீன இரகசிய சபைகளில் உயிரோடு எழுந்து வந்த அப்போஸ்தல நடபடிகள்...

## CHAPTER - 6

# சீன இரகசிய சபைகளில் உயிரோடு எழுந்து வந்த அப்போஸ்தல நடபடிகள்..

## Chapter - 6

*சீனாவின் இரகசிய சபைகளையும் வீட்டு சபைக் குழுக்களையும் பற்றி ஒருவர் ஆழமாய்ப் படிக்கப் படிக்க, அவரது மனம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நோக்கித் தானாகவே பின்னோக்கிச் செல்கிறது. அன்று சீனாவை அதின் ஐந்தாவது அரச குல சாம்ராஜ்யம் ஆண்டு வந்த காலத்திலே, சீனாவிலிருந்து எங்கோ தள்ளி, மனித கால்படாத மலைகளுக்கும் பாலைவனங்களுக்கும் அப்பால் எருசலேம் என்றொரு சிற்றூர் இருந்தது. அங்கும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்த ஆலயங்கள் இருந்தன. "ஜெப ஆலயங்கள்" என்று அழைக்கப்பட்ட அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து நடத்தி வந்தது, அன்றைய ரோம சர்வாதிகாரத்துக்கு அடிமைப்பட்டுப் போயிருந்த பரிசேயர் சதுசேயர் வேதபாரகர் என்றொரு மத அதிகார வர்க்கம்.. இப்படியொரு நெருக்கடியான சூழ்நிலையிலே, எந்த வசதியுமற்ற ஒரு மேல் வீட்டு அறையிலே இரகசியமாய் ஆண்களும் பெண்களும் அடங்கிய குழு ஒன்று வீட்டு சபையாய்க் கூடியிருந்தது..*

*அப்போஸ்தல நடபடிகள் 2ம் அதிகாரம் 42 முதல் 47 வரையுள்ள வசனங்களில் அதைப் பற்றி லூக்கா நமக்காக இப்படி எழுதி வைத்தார்.*

***“அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்..***

***எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்..***

**காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்..**

**அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்."**
*(அப் 2 : 42 - 47)*

*அன்றைய எருசலேமின் ஆதி சபைக்கும் இன்றைய சீனாவின் வீட்டு சபைகளுக்கும் உள்ள ஒற்றுமைகள் எவ்வளவு நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறதோ, அவ்வளவாய் அவைகள் நம்மை அலற வைப்பவைகளுமாயும் கூட இருக்கிறது !*

## *1. அது ஒரு கற்றுக்கொள்ளும் சபை :*

*“அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில்...உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப் 2:42).*

*"தங்கள் ஓட்டத்தைத் துவங்குதல்" மட்டுமே போதாது, ஒவ்வொரு நாளும் அந்த நல்ல ஓட்டத்தில் எப்படி ஓட வேண்டுமோ அப்படி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற கடுமையான எச்சரிக்கை உணர்வு சீனாவின் ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளும் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. எருசலேமின் மேல்வீட்டிலே பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல சத்தமொன்று கேட்கப்பட்டதைத் தொடர்ந்து அப்போஸ்தலர்கள் தங்கள் பலத்த கிரியைகளை செய்யத் தொடங்கியது போலவே, தாங்களும் தேவனிடத்திலிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பரிசுத்த ஆவியானவரின் அற்புத அடையாள அதிசயங்களைக் கண்ணால் கண்டு அனுபவித்திருந்தும், அவைகளோடு நின்றுவிடாமல், பூரணராகக் கடந்துபோயே ஆகவேண்டுமென்கிற ஒரு தீர்க்கமான முடிவோடு முன்னேறிக்கொண்டேயிருக்கிறார்கள் சீனாவின் வீட்டு சபைக் குழுவினர்.*

சத்தியத்திலிருந்து வழிவிலகி விழுந்துவிடக் கூடாதே என்றும், தவறான உபதேசங்களுக்குள் சிக்கிவிடக்கூடாதே என்ற பயமும் எப்போதும் அவர்களுக்குள் இருக்கிறது. ஆகவே ஆரோக்கிய உபதேசப் போதனைகளையும் ஆழமான சத்திய வசனங்களையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற கட்டுக்கடங்காத பசியும் தாகமும் அவர்களுக்குள் இருந்துகொண்டே இருக்கிறது.

"நான் கற்றுக்கொள்வது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டி நான் தகுதியாகும்படிக்கு வேத வசனத்தை இன்னும் ஆழமாய்த் தனிப்பட்ட முறையில் நான் கற்றுக்கொள்வேன்" என்னும் ஆவலே என் மிகப்பெரிய பாரமுமாய் இருக்கிறது" என்கிறார், எந்த பையின் காலேஜுக்கும் சென்றிராத, குறைவான வேத அறிவே உள்ளவரான வீட்டு சபைப் போதகர் ஒருவர். இது தலைமைத்துவத்தில் இருப்பவர்களுக்குள் மட்டுமல்ல, சீன சபை முழுவதுமே இப்படிப்பட்ட வேத வசனத் தாகத்தால் நிரம்பிக்கிடக்கிறது.

சீனாவிலிருந்து வந்த தகவல் ஒன்று இப்படிச் சொல்கிறது..

ஆங்காங்கே பயணம் செய்து, வீட்டு சபைகளைச் சந்தித்து திடப்படுத்தி வரும் யாரோ ஒரு போதகர் தங்கள் சபைக்கு வருகிறார் என்று தெரிந்தால் போதும், எத்தனையோ மைல்கள் கடந்து கூட வந்து கூட்டத்தில் கலந்துகொள்ளும் விசுவாசிகள் மணிக்கணக்காய் அந்த ஊழியர் களைத்து சோர்ந்துபோகும் அளவுக்கு அவரைப் பேச வைத்துக் கேட்டுக் கற்றுக் கொண்டேயிருப்பார்கள். சில நேரங்களில் அடுத்த இடத்துக்குப் போக வேண்டுமென்று அவர் புறப்படும்போது அவரது சூட்கேஸைப் பிடித்துக்கொண்டு அவரைப் போக விட மாட்டார்கள்.

ஒரு முறை ஊழியர் ஒருவர் ஒரு சிற்றூருக்கு வந்தார். அவர் வருகிறாரென்று கேள்விப்பட்டு 600 பேர் கூடிவிட்டனர். அவர்களில் பலர் அந்த வீட்டு ஹாலுக்கு வெளியே கடுங்குளிரையும் பாராமல் அதிகாலை முதல் பிந்திய இரவு வரை அசையாமல் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்த பின்னும் அந்த ஊழியரின் சட்டையைப் பிடித்துக்கொண்டு அவரைப் போகவிடவில்லை.

ஆங்காங்கே உள்ள சபைகளுக்குச் சென்று இரகசியமாய்ப் பிரசங்கிக்கும் ஒரு மனிதர்.. ஓரிடத்தில் கூடி வந்தவர்களுக்கு, "நான்

மத்தேயுவிலுள்ள இயேசு கிறிஸ்துவைப்பற்றி உங்களுக்குச் சொல்லித்தரப்போகிறேன்" என்றவரை, "ஓ! முழு மத்தேயுவின் புத்தகத்தையும் நமக்கு கற்றுத்தரப்போகிறார் இவர்.." என்று அவரை விடவே இல்லை அவர்கள். 28 அதிகாரத்தையும் ஒவ்வொரு வசனம் வசனமாய் விளக்கிக் காட்டினார் அவர். தொடர்ந்து 37 மணிநேரம் அவரைப் பிடித்துவைத்துக் கொண்டனர் அந்த வீட்டு சபை விசுவாசிகள். இரகசிய சபைகள் மேல் மட்டுமல்ல, அவ்வப்போது இப்படி வந்துபோகும் ஊழியர்கள் தலையிலும், தாங்கள் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்கிற கலக்கத்தின் கத்தி எப்போதும் தொங்கிக்கொண்டே இருந்தது.

இவைகளுக்கு மத்தியிலும் அவர்களது ஜெபங்கள், "கர்த்தாவே, உமது பரிசுத்தமான எழுப்புதலின் கிரியைகளிலே தேவரீர் எங்களோடு இருப்பீராக!" என்பதே.. அவர்களுக்கு வேண்டியிருந்ததெல்லாம் இரண்டே விதமான செய்திகளே! ஒன்று, வேதத்தின் அடிப்படை உபதேசங்கள் அவர்களுக்கு ஆழமாகவும் உறுதியாகவும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டியது. இரண்டாவது, அவர்கள் கடந்துபோகும் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு ஏற்ப சமயத்துக்கேற்ற ஊன்றக்கட்டி பெலப்படுத்தும் செய்திகள். இரண்டுமே வீட்டு சபைகளில் திரும்பத் திரும்பக் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது.

கற்றுக்கொள்ளக் கட்டுக்கடங்காத தாகத்தோடிருக்கும் அவர்களின் சபைக்குத் தேவையாய் இருந்தது போதகர்களும், ஊழியர்களும் சுவிசேஷகர்களும் மட்டுமல்ல, அவர்களுக்கு மிக மிகத் தேவையாயிருந்தது வேதாகமங்கள். உலகத்தின் மற்ற பகுதிகளில் வேத புத்தகங்கள் கிறிஸ்தவர்களால் ஏனோ தானோவென்று கையாளப்படுவது மட்டுமல்ல, எத்தனையோ வீடுகளில் அவைகள் தூசிபடிந்து கிடக்கும் நிலையில், சீன கிறிஸ்தவ சமுதாயத்துக்கோ ஒரு முழு வேதாகமம் என்பது விலைமதிக்க முடியாத முத்தாய்க் கருதப்படுகிறது.

1966ல் செம்படையினர் கிறிஸ்தவர்களை வேட்டையாடிய அந்தத் தேடுதல் வேட்டையில் அவர்கள் குவித்து எரித்த பைபிள்களுக்கும், பாடல் புத்தகங்களுக்கும், கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களுக்கும் தொகையில்லை. இன்று எத்தனையோ நூற்றுக்கணக்கான பேருக்கு இருப்பது ஒரே ஒரு பைபிள்.

சில வீட்டு சபைகளில் அவர்கள் கூடிவரும் நாளுக்கு முந்தின நாளே அடுத்த நாளின் செய்தி என்னவென்று சொல்லப்பட்டு,

குழுவிலுள்ளவர்கள், அந்த வசனக் கோர்வையை வெவ்வேறு நபர்கள் மூலம் வெவ்வேறு இடங்களிலிருந்து பெற்று ஒருவர் ஒவ்வொரு வசனமாக எழுதிக் கொண்டுவருவர். எல்லாவற்றையும் சேர்த்து வைத்து கோர்வையாக போதகர் அதை வாசிப்பார். ஒரு வேளை போலீஸ் வந்து அவர்களைப் பிடித்தாலும், முழு பைபிள் அவர்கள் கையில் சிக்காமல் இந்த வசனங்கள் எழுதப்பட்ட காகிதங்கள் மட்டுமே பறிமுதல் செய்யப்படுகின்றன.

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் இரகசியமாய் பைபிளை சீனாவுக்குள் கொண்டு வருவதும் சாதாரண காரியமல்ல. ஒரு போதகர் சொல்லுகிறார், "ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மாவட்டத்தில் மட்டும் நான் சென்று போதிக்கும் வெவ்வேறு வீட்டு சபைகளில் கிட்டத்தட்ட 3000 பேர் இருக்கிறார்கள்: இந்த 3000 பேரிடம் இருப்பதோ மூன்றே மூன்று முழு வேதாகமங்களும் இரண்டே இரண்டு புதிய ஏற்பாடுகளும் மட்டுமே..!"

## 2. அது ஒரு ஜெபிக்கும் சபை

**அவர்கள் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப் 2:42)**

ஆதி சபையின் குணாதிசயத்தைத் தமது புதிய ஏற்பாட்டு விளக்கவுரையில் சித்தரிக்கும் வில்லியம் பார்க்லே சொல்கிறார், "அவர்கள் அப்போஸ்தல உபதேசத்தில் மட்டுமல்ல, ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். இந்த ஆதி சபை கடந்துபோன பாதை கொடுமையானது. ஏனென்றால் அப்போது தான் பிறந்திருந்த சிசுவாய் இருந்த அந்தச் சபை, புறஜாதிகளின் கையினால் அடைந்த வெறுப்பும், துவேஷமும் உபத்திரவமும் கொஞ்சநஞ்சமல்ல. தேவனால் தங்களுக்குக் கிருபையும் பெலனும் உதவியும் கிடைக்காத பட்சத்தில் தங்களால் இதைப்போன்ற ஒரு காலகட்டத்தினூடே கடந்து செல்ல முடியவே முடியாது என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தபடியால், அந்த ஆதி சபை ஒரு ஜெபிக்கும் சபையாய், ஜெபத்தில் தீயாய் நின்றது! “

சீன சபைகளிலிருந்த அடிப்படைக் குணாதிசயமும் இதுவே. சீன சபையின் அதிவேக வளர்ச்சியைக் குறித்த ஆராய்ச்சியாளர் ஒருவர் சொல்கிறார், "சீன சபையின் தனித்துவமே அதிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும் ஜெபத்தில் அனலாய் நிற்பதுதான்!

**சீனக் கிறிஸ்தவர்களின் மிக முக்கியமான ஜெபக்குறிப்புகள்:**

*1. "கர்த்தாவே, நீர் எங்களை விழிப்பும் ஜாக்கிரதையுமுள்ள ஜெபஆவியினாலே நிரப்புவீராக!*

*2. தேவனே, மற்றவர்களுக்காக நாங்கள் ஜெபிக்கும் ஜெப பாரத்தை இன்னும் இன்னும் அதிகமாய் எங்களுக்குத் தருவீராக!*

*3. கர்த்தாவே, எங்களுக்கென்று குறிப்பிட்ட ஜெபவேளைகளையும் இடத்தையும் தேவரீர் கிருபையாய்த் தருவீராக!*

*4. நாங்கள் எங்கள் உடனிருக்கும் உடன் ஊழியர்களுக்காக ஜெபிக்கும் வல்லமை ஒன்றைத் தருவீராக!*

*5. ஜெபத்தில் நாங்கள் சரியான வாக்கு வல்லமையோடு ஜெபிக்க எங்களுக்கு உதவி செய்யும்..*

**சீனக் கிறிஸ்தவர்களின் சட்டவாக்கியம்:**

***"குறைந்த ஜெபம்! குறைவான வல்லமை !"***
***“ஜெபமற்ற வாழ்க்கை! சத்துவமற்ற வாழ்க்கை"!***

*குறிப்பிட்ட பெருநகர் ஒன்றின் மறைவிடம் ஒன்றில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை ஒரு ஜெபக்குழு ஜெபிக்கக் கூடுகிறது. அவர்கள் ஜெபத்தைப்பற்றிப் பேசுவதில்லை, பிரசங்கிப்பதில்லை - மாறாக ஜெபத்தில் அங்கே அவர்கள் போராடுகிறார்கள்.*

*இன்னொரு இடத்தில் இன்னொரு குழு கூடுகிறது. அதை நடத்துபவர் ஏற்கனவே சுவிசேஷத்திற்காக 17 வருடம் சிறையிலிருந்தவர். அங்கே அந்தக் குழுவிடம் வேத புத்தகமில்லை, பாடல் புத்தகங்கள் இல்லை. அவர்களில் அநேகர் தங்களுக்கு அன்பானவர்களையும் குடும்பத்தினரையும் இழந்தவர்கள். வீடு வாசல் இழந்தவர்கள். ஆனால் அங்கே ஜெபிக்கக் கூடுகிறார்கள். அவர்களது ஜெபத்தை சற்று கவனியுங்கள்..*

***“கர்த்தாவே, உமது சபையை உயிர்ப்பியும் என்று மனதார நாங்கள் பாடுகிறோம். ஆனால் தகப்பனே, சபையை உயிர்ப்பிக்கும் முன் தேவரீர், என்னை உயிர்ப்பியுமே! இப்படியாய் ஒவ்வொரு சீன***

**விசுவாசிகளுமான நாங்கள் உமக்காக அக்கினியாய்ப் பற்றியெரிவோமானால் உமது சுவிசேஷம் இருளிலே வெளிச்சமாய், கோடி கோடி ஆத்துமாக்கள் மத்தியிலே பற்றிப் பரவுமே !"**

*அவர்களது ஜெபத்தை இன்னும் சற்று உற்றுக் கேளுங்கள்! தேவனே, உமது அன்பின் ஆழத்தை நான் எல்லா வகையிலும் வெளிப்படுத்தும்படியாகவும், அதினாலே உமது வசனத்தைக் கேட்பவர்களும், என்னைக் காண்பவர்களும் உம்மால் தொடப்படும்படியாகவும் தேவரீர், உமது அன்பின் உறுதியினாலே என்னை நிரப்புவீராக !*

■ *தகப்பனே, உமது இரட்சிப்பின் செய்தியை அறிவிக்கும்படியாய் நான் உமது சிலுவையை உயர்த்தும்போது பரிசுத்த ஆவியானவர் உமது சிலுவையண்டை ஜனங்களை இழுக்கும்படியாய், தேவரீர் சிலுவையின் வல்லமையின் வசனத்தால் என்னை நிரப்புவீராக !*

■ *நான் பிரசங்கிக்கும்போதே ஜனங்கள் பாவ உணர்வடைந்து நீதி, நியாயத்தீர்ப்பைக் கண்டு அஞ்சி நடுங்கி உம்மிடம் வரும்படியாய் எனக்கு வாக்கு வல்லமையைத் தருவீராக!*

■ *நான் உமது ஞானத்திலும் அறிவிலும் அன்றாடம் வளரும்படியாய்த் தாழ்மையைத் தரித்துக்கொள்ளும்படி தேவரீர் பயபக்தியின் ஆவியை என் இருதயத்தில் வைப்பீராக!*

■ *உமது சித்தத்தின்படி மாத்திரம் நான் ஜெபிக்கத்தக்கதான ஜெப வரமொன்றை தேவரீர் எனக்குத் தருவீராக!*

■ *நான் என் சகோதரரைத் திடப்படுத்தும்படியாய் பரிசுத்த ஆவியானவருக்கு ஒவ்வொரு காரியத்திலும் அவ்வப்போது உடனடியாய்க் கீழ்ப்படியும் கிருபையைத் தருவீராக!*

■ *சத்தியவசனத்தை சரியாய்ப் பகுத்துப் போதிக்கும்படி, வசனத்தை வசனத்தோடு வசனத்தால் விளக்கி விவரிக்கும் வரத்தைத் தருவீராக!*

■ *சமயத்துக்கேற்ற வார்த்தையை சபைக்குச் சொல்லும் தூர தரிசனமும் தீர்க்க தரிசனமும் நிறைந்த ஒரு போதகராய் சபையை நான் நடத்தவும், புதிய சபைகளைத் தொடங்கவும் எனக்குக் கிருபை தருவீராக!*

■ *ஆவியானவரின் முழுமையில் நிறைந்திருக்க அடியேனுக்கு உதவி செய்வீராக!*

■ ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் உம்மோடு உயிரோட்டமும் முழுமையுமான நேரம் ஒன்றை நான் செலவழிக்கும்படி தேவரீர், தடைபடாத அதிகாலை ஜெபவேளை ஒன்றை அனுதினமும் எனக்குத் தருவீராக!

■ மிகுந்த ஆவியின் கனிகளைக் கொடுக்கும் கனியுள்ள சாட்சியின் வாழ்க்கையொன்று வாழ்ந்து ஜீவிக்க எனக்கு உதவி செய்யும்!

■ அன்பு, விசுவாசம், பொறுமை, பயபக்தி இவற்றின் மேல் முயற்சியும் பயிற்சியும் பெற்று முன்னேறிச்செல்ல எனக்கு உதவி செய்யும்.

■ ஜனத்தை ஆற்றித் தேற்றும் வரமொன்றை எனக்குத் தருவீராக!

■ உமக்காக முழுமனதோடு பாடனுபவிக்க உற்சாக மனதைத் தாரும் ஐயா !

■ தேவரீர் எனக்குள்ளே அன்பும் தாழ்மையும் பரிதபிக்கும் மனமும் கொண்ட, சுயநலமற்ற நேர்மையும் உண்மையுமுள்ள இருதயம் ஒன்றைத் தருவீராக !

■ மற்றவர்களை ஊன்றக்கட்டும் வார்த்தைகளையே நான் பேசும்படியாய் தேவரீர் என் நாவை உமது ஆளுகையிலும் அதிகாரத்திலும் வைத்திருப்பீராக!

■ பெருமையையும் பொறாமையையும் தேவ மகிமையை அபகரித்தலையும், எல்லாவிதமான பரிசுத்தக்குலைச்சல்களையும், பொய்யையும், வெறுத்து உண்மையையும் தாழ்மையையும் சாந்தத்தையும் பரிசுத்தத்தையும் இச்சையடக்கத்தையும் நேர்மையையும் நீதியையும் நன்மையையும் இரக்கத்தையுமே நேசிக்க எனக்கு உதவி செய்வீராக!4 இந்த உலகத்தையோ அதின் மாய மகிமையையோ நான் இச்சிக்காமல் என்னை முழுவதுமாய் தேவனுக்கு மாத்திரமே அர்ப்பணிக்கும் திடனையும் தைரியத்தையும் நீர் எனக்குத் தருவீராக!

■ தேவனைப் பாடித் துதித்து ஆவியில் ஆராதித்து மகிழும் வரத்தைத் தருவீராக!

**கிறிஸ்து மாத்திரமே தங்களது எல்லாவற்றுக்கும் எல்லாமுமானவர் என்றும், அவராலே அல்லாமல் இவைகள் ஒன்றும் சாத்தியமாவதில்லை என்றும் சீனக் கிறிஸ்தவ விசுவாசிகள் மிகத் தெளிவாகவே அறிந்திருக்கிறார்கள்.**

### *3. அது ஒரு பயபக்தியுள்ள சபை :*

*" எல்லாருக்கும் பயமுண்டாயிற்று.." (அப் 2:43)*
தங்கள் மத்தியில் தேவன் செய்த மகத்தான கிரியைகளைக் கண்டு புதிய ஏற்பாட்டு வீட்டு சபை விசுவாசிகளுக்குள் பரிசுத்த பயமொன்று பற்றிப்பிடித்ததில் ஆச்சரியமோ சந்தேகமோ ஒன்றுமில்லை. இன்றும் சீன சபையிலே இதைக் காணலாம். முக்கியமாகத் தங்கள் வாழ்க்கையில் தேவனால் செய்யப்பட்ட அற்புதங்களைத் தங்கள் சொந்தக் கண்களால் கண்டவர்கள் வாழ்க்கையில் இது உண்மையாயிருக்கிறது.

■ சீனாவின் மக்கள் விடுதலைப்படையின் வாலிப வீரன் ஒருவன் வியாதிப்பட்டு சாகும் தருவாயிலிருந்தான். அவனோடிருந்த இரகசியக் கிறிஸ்தவ இராணுவ வீரன் ஒருவன் அவனுக்காகப் பரிதபித்து கிறிஸ்துவைப் பற்றியும் நித்தியஜீவனைப் பற்றியும் பக்குவமாய்ச் சொல்லி அவனுக்காக ஜெபித்தாலும், அவனது நோய் இன்னும் தீவிரமானது. ஆனாலும் அவன் தன் பாவங்களுக்காக மனந்திரும்பி தன்னை ஒப்புக்கொடுத்தபோது கர்த்தர் அவனை அற்புதமாய் விடுதலையாக்கி சுகம் கொடுத்தார். இவை யாவற்றையும் அறிந்த இராணுவம் அவனது விசுவாசத்திலிருந்து அவனைத் திருப்ப எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் போகவே, இருவரையும் இராணுவத்திலிருந்து வெளியேற்றியது. ஆனாலும் தன்னை மரணவாயிலிருந்து தூக்கிவிட்ட கர்த்தருக்கு, அவர் தன்னை எப்படி சுகமாக்கினார் என்று பரிசுத்த பயத்தோடு இரகசிய சபைகளில் ஊழியம் செய்து வருகிறான் அவன். இந்தப் பரிசுத்த பயம் இரகசிய சபைகளின் சுவரையும் தாண்டி சீன மக்களின் பரதரப்பட்ட மட்டங்களையும் தொட்டு நிற்கிறது.

## *4. அது ஒரு அற்புத அடையாளங்களின் சபை :*

*"அற்புத அடையாளங்களும் செய்யப்பட்டது.." (அப் 2:43)*

*ஹுவாங் என்றொரு மனிதர். புத்த மதத்தைச் சார்ந்தவர். உடல்நிலை சரியின்றி சாப்பிட முடியாத நிலையிலிருந்த அவருக்குக் கல்லீரலில் புற்றுநோய் என்றும், அது அவரது கடைசி ஸ்டேஜ் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னொரு டாக்டரிடம் இன்னொருமுறை அதை உறுதிப்படுத்திக் கொள்ளச் சென்ற போது அந்த டாக்டர் ஒரு கிறிஸ்தவ விசுவாசி என்பது தெரியவந்தது. அவர் சொன்னார், "இது கேன்சர் என்பது உறுதிதான். உங்களை நீண்டநாள் வாழ வைக்கும் வைத்தியம் என்னிடமில்லை. ஆனால் நான் விசுவாசிக்கும் இயேசுவின் மேல் நீங்கள் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக் கொள்வீர்களேயானால், அவர் உங்களுக்கு மரணத்துக்கும் பின்னான ஒரு நீண்ட முடிவில்லாத, என்றென்றுமாய் வாழ்ந்து சுகிக்கும் நித்திய வாழ்வை நிச்சயமாய்த் தருவார்.." என்று சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்ட அந்த மனிதன் தன் வீடு திரும்பி, தன் காரியங்களைத் தன் மனைவியிடம் பகிர்ந்து கொண்டு புத்த விக்கிரகங்களையும் புத்தகங்களையும் படங்களையும் ஜெபமாலைகளையும் எறிந்துவிட்டான். சில நாட்களில் மறுபடியும் அவனது நிலை மோசமானது. நடந்தது இதுதான். அவன் தன் மரண விளிம்பில் நின்றபோது வெண் வஸ்திரம் தரித்த இருவர் அறுவை சிகிச்சை செய்யும் உபகரணங்களுடன் அவனிடம் வந்து நின்றதை அவன் தன்சிறிது நேரத்தில் எல்லாம் மறைந்தது. எழுந்து உட்கார்ந்து ஆகாரம் வாங்கிப் புசிக்கிறான். எல்லாம் முடிந்தது என்று அறிந்து கடைசியாக அவனைக் காணவந்த அவனது சகோதரன் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போகிறான்.*

■ *இங்கே இன்னொரு சம்பவம்.*

*ஒரு மனிதன் தன் விசுவாசத்துக்காகச் சிறை செல்கிறான். 4 வயது, 8 வயது, 10 வயது, 12 வயது என்று அவனுக்கு நான்கு பிள்ளைகள். தகப்பன் சிறை சென்றதால் பிள்ளைகள் அடைந்த வேதனை*

கொஞ்சமல்ல. மனைவியின் தலையில் கோமாளித் தொப்பி அணியப்பட்டு நாள் முழுவதும் தெருவில் அதோடேயே மற்றவர்கள் முன் வெட்கத்தோடு நடந்து திரியும் நிலை- தங்கள் விசுவாசத்திற்காக.. வீட்டில், உண்ணும் உணவுக்கும் வழியில்லாத சூழல்.

அந்த வீட்டு அருகில் ஒரு சின்ன நீரோடை. அதில் ஒரு போதும் மீன்கள் இருந்ததில்லை. பிள்ளைகள் ஒரு நாள் வலை ஒன்றைப் பின்னி மீன் பிடிக்க முயற்சிக்க, அதிலே சில மீன்கள் சிக்கியது. அதைக் கொண்டு அன்றைய நாளின் பாடு கழிந்தது. அடுத்த நாளும் அதைப் போலவே முயற்சிக்க, மறுநாளும் மீன்கள் கிடைத்தன. ஒரு போதும் மீனே கண்டிராத குளத்தில் இப்போது ஒவ்வொரு நாளும் மீன்கள் வந்த வண்ணமாய் இருந்தன. தங்கள் அன்றாடப் பசிக்கு மட்டுமல்ல, அதிகப்படியாய்க் கிடைத்த மீன்களை விற்று ஜீவனம் நடத்தத் தொடங்கியது அக்குடும்பம். ஒரு நாள் இரண்டு நாள், ஒரு மாதம் இரண்டு மாதமல்ல.. 13 வருடங்கள்.. பதிமூன்று வருடங்கள் கழித்து சிறையிலிருந்து வெளிவந்தார் தகப்பனார். மறுநாள் முதல் நீரோடையின் மீன் வரத்து நின்றுபோனது.

■ இரகசிய சபைகளின் ஒவ்வொரு நுணுக்கமான விபரம் மட்டுமல்ல, வேத புத்தகங்கள் எங்கெங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளன, சபைக்கு வந்து போவதில் நம்பகமானவர் யார்? யாரை நம்ப இயலாது என்ற விபரங்கள் யாவும் அறிந்தவர் அவர் ஒருவர் மட்டுமே. திடீரென்று ஒரு நாள் மாரடைப்பால் மரித்துப்போகிறார். மிக முக்கியமான விபரங்களை வேறு யாரோடும் பகிர்ந்து கொள்ளாமலே அவர் மரித்துப்போனதால் நொறுங்கிப் போன சபை, "ஆண்டவரே எங்கள் தாயாரை எங்களுக்கு உயிரோடு திருப்பித் தாரும்..." என்று ஊக்கமாய் ஜெபிக்கத் தொடங்குகிறது. இரண்டு நாட்கள் - இடைவிடாத ஜெபம். கர்த்தர் அவர்களது ஜெபத்தைக் கேட்டார்.உயிரோடு வந்த 70 வயதுத் தாயார், "ஏன் என்னை உயிரோடு எழுப்பினீர்கள்?" என்று கடிந்து கொள்ள, சபையார் நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். தாயார், தன்னிடமிருந்த விபரங்களையெல்லாம் பொறுப்பானவர்களுக்குச் சொல்லி, காரியங்களைச் சரிசெய்ய இரண்டு நாட்கள் அவகாசம் தேவைப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின் சபையில் ஜெபமும் ஆராதனையும் நடந்து கொண்டிருக்க, 70 வயது தாயார் தேவ சமூகத்தில் தனது நித்திய இளைப்பாறுதலுக்குள் கடந்து சென்றார்.

*இதைப் போலவே ஆங்காங்கே ஒன்றிரண்டு அல்ல, எத்தனையோ ஊர்களிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் அந்தந்தத் தேவைக்கு ஏற்ப நடந்துவரும் அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் தொகையில்லை..*

## *5. அது ஒரு துதிக்கும் சபை :*

*"அவர்கள் தேவனைத் துதித்து..." (அப் 2:47)*
*தன் விசுவாசத்திற்காக சிறையில் அடைக்கப்பட்ட சகோதரர் ஒருவர்.. தன் கைகளும் கால்களும் விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டப்பட்டிருந்தாலும், அந்தப் பளுவோடும் கூட தன் கைகளை உயர்த்திக் கர்த்தரைத் துதித்துக் கொண்டேயிருப்பார். நாளாக ஆகத் தொழுமரத்தில் கட்டப்பட்டிருந்த சங்கிலிகள் அவரது கால்களைத் தேய்த்துத் தேய்த்து எலும்புகள் வெளியே தெரிய ஆரம்பித்தது. ஒரு நாள் தன்னோடிருந்த மூத்த சகோதரர் ஒருவரைப் பார்த்து, "செக்யூரிட்டி கார்டுகள் ட்யூட்டி மாறும் நேரம் அல்லது அவர்கள் கண்ணயரும் நேரம் பார்த்து எப்படியாவது எனக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிடுங்கள்.." என்று சொல்ல, சிறைக்கம்பிகளுக்குப் பின்னே அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.*

■ *இன்னொரு இடத்தில் கூண்டு வண்டி நிறைய விசுவாசிகளை அடைத்துச் சிறைக்குக் கொண்டு செல்கின்றனர். தெரு வழியாய்க் கொண்டு செல்லப்படும் அவர்களைக் கண்டவர்கள், இவர்களெல்லாரும் கிரிமினல் குற்றவாளிகளோ என்று நினைத்துக்கொண்டிருக்கையில், வண்டிக்குள் கையில் விலங்கு மாட்டப்பட்ட நிலையிலும், முகங்களில் சந்தோஷம் நிறைய தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டே சிறை சென்றனர் அந்த இரகசிய சபை விசுவாசிகள்.*

## *6. ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்த சபை அது..*

*"அவர்கள்... ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.." (அப் 2:47)*
*அன்றைய பரிசேய சதுசேய, சமய சமுதாயத்தின் மத்தியில் வீட்டு சபையான ஆதிசபை ஏற்படுத்தி வைத்திருந்த பீதிக்குக் காரணம் பெருவாரியான பொது ஜனங்கள் ஆதிசபை விசுவாசிகளின் மேல் கொண்டிருந்த நன்மதிப்பும் மரியாதையுமே! சீன சபைகளின் உண்மை நிலவரமும் அதுவே!*

*அநேக வீட்டு சபைக் கூட்டங்களுக்கு முக்கியத் திறவுகோலாய் இருப்பது "CADRE" என்று சொல்லப்படும், அந்த சபைகளின் நடமாட்டங்களைக் கண்காணிக்க அரசினால் நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிகள். ஒவ்வொரு ஏரியாவையும் கண்கொத்திப் பாம்பாய்க் கண்காணிக்கும் கண்காணிகள் அங்கே உண்டு. இவர்கள் கண்களுக்குத் தப்புவது என்பது மிகக்கடினமான ஒன்று. ஆனாலும் பலவேளைகளில் இந்தக் கண்காணிகள், வீட்டுக்கூட்டங்கள் நடத்துவதைக் கண்டும் காணாமலும் விட்டு விடுவார்கள். காரணம் என்ன?*

*அரசுத் தரப்பிலிருந்து மேற்பார்வை செய்யும் ஒருவர் இதற்கு விடை தருகிறார்..*

*கண்காணி ஒருவரின் மேலாளார்கள், "நீங்கள் ஏன் அவர்களைக் கூட்டம் நடத்த அனுமதிக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவர் சொல்கிறார்,  "அவர்கள் மிகவும் நல்லவர்கள், ஒழுக்கமுள்ளவர்கள், கடின உழைப்பாளிகள்; அது போக அவர்களால் எங்களுக்கு எந்தப் பிரச்சனையுமில்லை."*

*இதில் முக்கியமான ஒரு வார்த்தை "கடின உழைப்பாளிகள்.." ஒரு கம்பெனியின் சூப்பர்வைசரோ அல்லது கட்சியின் கேடரோ, அவர்களுக்கென்று ஒரு டார்கெட் கொடுக்கப்படுகிறது. அதை நிறைவேற்றினால் மட்டுமே அவரது வேலையோ, பதவி நிலையோ நிலைக்கும். ஒரு கேடரின் வேலை நிலைத்திருப்பதும் பதவி உயர்வு கிடைப்பதும் அவர்களுக்குக் கீழுள்ள இந்த விசுவாசிகளின் கடின உழைப்பின் மூலம் நிறைவு செய்யப்படும் அன்றாட டார்கெட்டின் மூலமே!  இது ஒரு சங்கிலித்தொடராகக் கீழ் மட்டம் முதல் மேல் மட்டும் வரை செல்கிறது. விசுவாசிகளின் ஒழுக்கமும், முன்மாதிரியான சாட்சியின் ஜீவியமும், கடின உழைப்பும் சமுதாயத்தில் அவர்களுக்கு மிகப்பெரிய நன்மதிப்பைப் பெற்றுத் தந்திருக்கிறது.*

*கட்சியில் உயர்பதவியிலிருந்த மனிதன் ஒருவன் ஒரு முறை வீட்டு சபைகளை நசுக்கிக் கொண்டிருந்தான். நடந்தது இதுதான்.. செங்கல் சூளை ஒன்றை அவன் பார்வையிடச் சென்றிருந்தபோது அது இடிந்து விழுந்து அதின் இடிபாடுகளுக்குள்ளே சிக்கிக் கொண்டான் அவன். அவனை மிகப்பெரிய கற்குவியல் ஒன்று மூடிக்கிடந்தது. பெரிய கூட்டமொன்று சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, அங்கிருந்த கிறிஸ்தவர்களோ அவனுக்காகக் கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருந்தனர். கடைசியாக சாகவிருந்த அவன் உயிரோடு விடுவிக்கப்பட்டான். அப்பொழுது அவன் சுற்றியிருந்தவர்களைப் பார்த்து, "நீங்களெல்லாம் என் சாவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தீர்கள். ஆனால் இந்தக் கிறிஸ்தவர்கள் அல்லவா என் உயிருக்காகப் போராடி ஜெபித்தார்கள்?*
***இன்று முதல் இவர்களுடைய வீட்டு சபை என் வீட்டிலேயே நடக்கும்..." என்றான்.***

## *7. அது ஒரு சாட்சிபகரும் சபை :*

*"அவர்கள்.. எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்." (அப் 8:4)*
*மேல் வீட்டறையிலிருந்து வெளிவந்த முதல் சீஷர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ அக்கினியை உலகமெங்கும் பரவச்செய்தனர். அதற்கு ஒத்த சீன சபையின் சாட்சிகளும் அபாரமானவை!*

*சுவிசேஷத்துக்கு வாசல்கள் அடைக்கப்பட்ட நிலையிலும், சாட்சி பகர்வதிலும் சுவிசேஷம் அறிவிப்பதிலும் விதம்விதமான முறைகளைக் கையாள்வதில் சீனக் கிறிஸ்தவர்களுக்கு நிகர் அவர்களே! சீன மொழியில் அச்சிடப்பட்டு வெளிநாட்டிலிருந்து வந்த கைப்பிரதிகள் சில வயதான தாயார் ஒருவர் கைக்கு வந்துசேர்ந்தது. அவற்றை எடுத்துக் கொண்டு பஸ்ஸில் ஏறுவார் அவர். தனக்குத் தூரப்பார்வை போலக் காட்டிக்கொள்ளும் கண்ணாடி ஒன்று போட்டுக்கொண்டு, மற்றவர்கள் பார்வையில் படும்படியாய்க் கையை தூரத்தில் நீட்டி வைத்துக்கொண்டு வாசிப்பார். அருகில் உள்ளவர்களும் அதை ஆர்வமாய் வாசிப்பதுபோல் தெரிந்தால், "நீங்களும் வாசிக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டு அவர்கள் கையில் திணித்துவிட்டு பஸ்ஸை விட்டு இறங்கி அடுத்த பஸ் ஏறி, இப்படியே தொடர்வார்..*

இன்னொரு வயதான தாயார். பெயர் மதர் ஸாங்.. யாரோ ஒரு வெளிநாட்டு மிஷினரி வீட்டில் வேலை செய்தபோது இயேசுவை ஏற்றுக்கொண்டவர். இப்போது வயதாகிவிட்டது. மலைக்கிராமங்களுக்குள் தூரமாய் எங்கோ ஒரு மூலையில் வசிப்பவர். ஆனாலும் ஆண்டவருக்காக ஏதாவது செய்யவேண்டுமென்ற தாகம். அவர் வசித்து வந்த ஊருக்கு அருகிலிருந்த ஊரில் அடிக்கடி சந்தை கூடுவது வழக்கம்.. விவசாயிகள் அடிக்கடி வந்து போகும் ஒரு ஊர். தாயாருக்கு ஒரு யோசனை தோன்ற, தன் வீட்டுக் கீழ் தளத்தில் சின்ன டீ கடை ஒன்று திறந்தார். அதுவே நாளடைவில் ஒரு சிறிய ஹோட்டலாக மாறியது. வாடிக்கையாளர்களை நன்கு கவனிப்பதோடு, வந்து போகிறவர்களுக்குக் கரிசனையாய் சுவிசேஷமும் சொல்வார். அது அப்படியே வளர்ந்து வளர்ந்து கடைக்கு மேலிருந்த அறையில் அது ஒரு வீட்டு சபையாக மாறியது.

## சீன இரகசிய சபைகளின் பாடல்
## இரத்தசாட்சிகளாய் மடிவோம்

இரத்தசாட்சிகளாய் மடிவோம் - நல்
கோதுமை மணியாய் மடிவோம் - மடிவோம்
கல்லெறியப்பட்ட ஸ்தேவான் - நாடு
கடத்தப்பட்டானே யோவான்
கத்தியாலே குத்துண்ட மத்தேயு
கால்கள் கிழியுண்ட மாற்கு - மாற்கு

கழுமரம் ஏறிய லூக்கா
ஈட்டியால் குத்தப்பட்ட தோமா
பட்டயத்தால் வெட்டுண்ட யாக்கோபு
வாளால் அறுப்புண்ட ததேயு - லபேயு

தோல் உரியுண்ட பர்த்தலோமே
சிலுவையில் அறையுண்ட பிலிப்பே
தலைகீழாய் அறையுண்ட பேதுரு தலை
வெட்டப்பட்டானே பவுலே - சவுலே

ஜீவ பலியாய்த் தருவோம்
செத்தாலும் சாகிறோம் என்போம்...
இயேசுவின் பாதையில் செல்வோம்
அவருக்காய் ஜீவனைத் தருவோம் - மடிவோம்

## *Martyrs for the Lord*
## *A Chinese house-church Song*

*From the time the church was birthed on the day of Pentecost,*
*The followers of the Lord have willingly sacrificed themselves.*
*Tens of thousands have died that the gospel might prosper.*
*As such they have obtained the Crown of Life.*

**To Chorus:**

*Be a martyr for the Lord, To be a martyr for the Lord,*
*I am willing to die gloriously for the Lord.*
*Those apostles who loved the Lord to the end*
*Willingly followed the Lord down the path of suffering.*

*John was exiled to the lonely isle of Patmos,*
*Stephen was stoned to death by an angry crowd.*
*Matthew was stabbed to death in Persia by a mob.*
*Mark died as horses pulled his two legs apart.*

*Doctor Luke was cruelly hanged.*
*Peter, Philip and Simon were crucified on a cross.*
*Bartholomew was skinned alive by the heathen*

*Thomas died in India as five horses pulled his body apart.*
*The Apostle James was beheaded by King Herod.*
*Little James was cut in half by a sharp saw.*
*James the brother of the Lord was stoned to death*

*Judas was tied to a pillar and shot by arrows.*
*Matthias had his head cut off in Jerusalem.*
*Paul was a martyr under Emperor Nero.*

*I am willing to take up the cross and go forward*
*To follow the apostles down the road of sacrifice,*
*That tens of thousands of precious souls can be saved.*
*I am willing to leave all and be a martyr for the Lord.*

## இரத்தசாட்சி கிரீடம்

*Leonard Ravenhill*

அடிக்கப்பட்டு நெருக்கப்பட்டு நொறுக்கப்பட்டு..
கழுமரம் ஏறினர்
அந்நாள் பரிசுத்தர்..

நெருப்பின் நாவுகள்
பாதங்களைப் பதம்பார்த்தன..
ஆயினும் விடுதலை பெறச்
சம்மதியாத இவர்..
தம் சாட்சியோடு
தம்மை இரத்த சாட்சியாக்கினர்..

சாட்டையடியோ
காய்ச்சிய கம்பியோ..
முறுமுறுப்பின்றி
முதுகைத் தந்தனர்..
நம் முன்னோர்..

ஜீவன் ஒரு பொருட்டல்ல..
மனைவி மக்களும் ஒரு தடையல்ல..
எதற்கும் சமரசம் செய்யா
நம் சான்றோர் இவர்..
வெந்தீயில் வறுத்தெடுக்கப்பட்ட நேரம்..
தூதர் எழுதினார்..
அவரவர் பெயரை..
தேவனது சொந்த புத்தகத்தில்..
ஒரு நாள் சிங்காசனம் முன் திறந்து வாசிக்கப்பட..

முடிசூடும் நாளில் பெறுவர்
இவர்..
தம் விலையில்லா இரத்த சாட்சி கிரீடம்..
கூடவே நாம் காண்போம்
அவர்களோடே கூடச் சென்ற
அவர்கள் அன்பின் கிரியைதனை..

நசுக்கப்பட்ட
நொறுக்கப்பட்ட
பிளக்கப்பட்ட.. இவர்களின்
தலைகளில் சூடுவார் தேவன்..
தம் சொந்தக் கைகளால் பொற்கிரீடம்..

பெருமையோடும் பெருமிதத்தோடும்
சொல்வார்..

"நல்லது..
உண்மையும் உத்தமமுமானவனே !
நல்ல போராட்டத்தைப் போராடினாய்!
ஜெயமாய் ஓட்டத்தை முடித்தாய்!

உலக ஓட்டத்தில்..
மனிதப் பார்வையில்
நீ ஒரு பைத்தியம் தான்..
உலகத்தால் துடைத்துப் போடப்பட்ட குப்பை தான்!

ஆனால் நீ என் பார்வைக்கு
அருமையானபடியால்
கனம் பெற்றாய் !
நானும் உன்னை சிநேகித்தேன்!

எனக்கு உரியவனே!
என்னுடையவளே!

உலகத் தோற்றமுதல்
உனக்காகவே ஆயத்தம்
பண்ணப்பட்ட என்
உன்னத வீட்டில்
உன் ஆத்தும நேசரோடு
நித்திய நித்தியமாய்
வாழ்ந்து சுகிக்க
வரவேற்க வந்தேன்..

வா என் மகனே !!
வா என் மகளே !!

## *“THE MARTYR'S CROWN"*

*The saints of the old were beaten..tried..*
*Condemned and even Crucified..*

*These martyr men beat no retreat..*
*When flames were licking at their feet..*

*They saw the tyrant's brandished steel..*
*But still they offered no appeal..*

*They struck no bargain for their lives..*
*For their children or their wives..*

*All slowly roasted in the flames..*
*While angels wrote each of their names..*

*Within a book God calls His own..*
*To be proclaimed before His throne..*

*Then we shall know of these renown..*
*When each receives his martyr's crown..*

*When God shall say to these..*
*"Well done..you ran the race..pressed on..and won.."*

*"When in that race men said.."Insane"*
*But now I gladly own your name.."*

*"Now you are home !*
*Come dwell with Me..*
*In joy through all eternity.."*

# உடைத்தெறி...



## தேவனின் கடத்தல்காரன்

CHAPTER - 7

# தேவனின் கடத்தல்காரன்

## Chapter - 7

***"திருப்தியடைந்தவன் தேன்கூட்டையும் மிதிப்பான்; பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாயிருக்கும்... (நீதி 23:7)***

*திருப்தியடைந்தவனுக்கும் பசியுள்ளவனுக்கும் உள்ள வித்தியாசம் இந்த வசனத்தின் எழுத்தின்படி எவ்வளவு உண்மையோ, அவ்வளவு, கணக்கிலடங்கா வேத புத்தகங்களும் ஆவிக்குரிய நூல்களும், உபகரணங்களும் வாய்ப்பு வசதிகளும் அளவில்லாமல் பெற்ற தேசங்களுக்கும், இவைகளில் ஒன்றாகிலும் காணக்கிடைக்காத சுவிசேஷ வாசல்கள் அடைக்கப்பட்ட தேசங்களுக்கும் உள்ள வித்தியாசத்துக்கும், முற்றும் பொருந்தும் உண்மை.*

*■ "அரசாங்கம் வீடு புகுந்து வேட்டையாடி நடுத்தெருவில் குவித்து எரித்துப் போட்ட வேதாகமங்களில் ஒரே ஒரு பக்கத்தை மட்டும் போலீஸ் கண்ணுக்குத் தப்பி பாய்ந்து எடுத்துப் பாக்கெட்டுக்குள் ஒளித்து வைத்துக்கொள்கிறான் சபையின் வாலிபன் ஒருவன். அடுத்த ஐந்து வருடங்களுக்கு, அவன் சென்ற இரகசிய சபை உயிர்வாழ்ந்ததெல்லாம் அந்த ஒரே ஒரு பக்கத்தில் உள்ள வசனங்களை உட்கொண்டே!*

*"வேதத்தின் அப்படி என்ன ஒரு பக்கமாய் இருந்திருக்கும் அது? ஒருவேளை லேவியராகமத்தின் அடுக்கடுக்கான பலிகளைப் பற்றியதாயிருக்குமோ? அல்லது மத்தேயு முதல் அதிகாரத்தின் வம்சாவளிப் பட்டியலாய் இருந்திருக்குமோ? அல்லது ஏசாயா புத்தகத்தின் வாக்குத்தத்த அதிகாரங்களில் ஒன்றாய் இருந்திருக்குமோ?" போதகர் ஒருவரின் இரண்டு வருடத் தீவிரத் தேடலுக்குப் பின் விடை கிடைத்தது. "இந்தக் கல்லின் மேல் என்*

சபையைக் கட்டுவேன்..பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.." ஐந்து வருடங்கள் உயிரோடு வைத்திருக்கப் போதுமான வசனப் பகுதி தான் என்கிறார் அந்தப் போதகர்.

■ அங்கே ஒரு துப்புரவுத் தொழிலாளி..பாதி எரிந்துபோன வேதாகமங்களைக் குப்பைத்தொட்டியிலிருந்து பொறுக்கி எடுத்து அங்குமிங்கும் பார்த்துவிட்டு, தன் அழுக்கான கோட் பாக்கெட்டுகளில் திணித்து ஒளித்து வைத்து, இரகசிய சபைகளுக்குக் கொடுத்து உதவுகிறான். அதில் ஒரே ஒரு கிழிந்து எரிந்த பைபிள் பாஸ்டர் ஒருவரின் கைகளுக்குப் போய்ச் சேருகிறது. அதை ஆசை ஆவலோடு பார்த்த சபையின் வாலிப மகள் ஒவ்வொரு இரவும் பாஸ்டரிடம் அதை இரவல் வாங்கிச் சென்று பகல் முழுவதும் முடிந்த அளவு கையால் எழுதி பிரதி எடுத்து, அன்று இரவு கொண்டு கொடுத்து விடுவாள். இப்படியே பல பக்கங்கள் கைப்பிரதிப் பதிவாகிறது..

■ சிறை அறை ஒன்றில் புதிதாகக் கைதி ஒருவன் உள்ளே வருகிறான். கையிலே சின்னப்புத்தகம் ஒன்று. அதின் ஒவ்வொரு பக்கமாய்க் கிழித்து புகையிலை சுற்றி சிகரெட் ஊதுகிறான். அவனோடு அந்த அறையில் அடைக்கப்பட்டிருந்த போதகர் ஒருவர், அது என்னவென்று பார்க்க, அது ஒரு புதிய ஏற்பாடு. "நான் ஜெயில் உள்ளே வரும்போது அங்கே குப்பைத் தொட்டியில் கிடந்தது.. " என்றான். ஐந்து வருடமாக பைபிளின் ஒரு பக்கம் கூடப் பார்க்கக் கிடைக்காத போதகர் சொன்னார், "என் கையை வேணா வெட்டிக் கொடுக்கிறேன்.. அந்தப் புஸ்தகத்தை மட்டும் எங்கிட்ட குடுத்துரு..''

''நம்முடைய கிறிஸ்தவ வீடுகளில் படிக்காமல், உபயோகிக்காமல் தூசிபடிந்து கிடக்கும் வேதாகமங்களைச் சேகரித்தால் அடுத்த பல வருடங்களுக்கு நாம் வேதாகமங்களை அச்சடிக்க வேண்டிய அவசியமே இராது.." என்றார் அருமை அண்ணன் R. ஸ்டான்லி அவர்கள்.

நினிவேயில் தொடங்கி, யோனாவின் மீன் வயிற்றுச் சிறையிருப்பையும், வரப்போகும் நாட்களில் நமது சபைகளுக்கு வரப்போகும் நாட்களையும் ஒப்பிட்டு, சீன அந்தரங்க சபைகளின் உள்ளான நிலவரங்களையும், அதின் விசுவாசிகள் வேதத்தின் ஒரு பிரதிக்குப் படும் பாடு என்னென்னவென்றும் இதுவரை கடந்த அத்தியாயங்களில் சுருக்கமாய் விவரித்து வந்தோம்.

இந்த இமாலயத் தேவையைத் தங்களது பாரமாகவும், தேவன் தங்களுக்குப் பணித்த பணியாகவும் தங்கள் மேல் ஏற்றுக்கொண்ட மிகச்சிலர், தங்கள் உயிரையே பணயம் வைத்து மலை தாண்டி, கடல் தாண்டி, வனம் தாண்டி தூர இரும்புத்திரை நாடுகளுக்குள்ளும், மூங்கில் திரை நாடுகளுக்குள்ளும் வேதத்தைக் கடத்திச் சென்று தங்கள் முழு முயற்சியில் வெற்றியும் பெற்றனர்.

இதில் மிகப் பிரபலமானவர் "தேவனின் கடத்தல்காரன்" என்று அழைக்கப்படும் "ஓப்பன் டோர்" நிறுவனர் பிரதர் ஆண்ட்ரூ. இவரைப் போலவே சீனாவுக்குள் வேதத்தைப் பெட்டி பெட்டியாய்க் கடத்தியவர் தேவனின் சீனக் கடத்தல்காரரான பிரதர் டேவிட். *Voice of Martyrs* ன் *CEO* தலைவர் *Tom white*, கம்யூனிச க்யூபாவுக்குள் புதிய ஏற்பாடுகளை பாராசூட் மூலம் கடற்கரை ஓரங்களில் பாக்கெட் பாக்கெட்டாக இறக்கியவர். *Missiles over Cuba* என்னும் இவரது ப்ராஜக்ட் நம்மை மயிர்க்கூச்செரியச் செய்யும்.

இதே வகையில் சீனாவுக்குள் செல்ல கடும் முயற்சி செய்த ரூடி லேக்குக்குத் தகவல் கிடைக்கிறது.. ஆப்பிரிக்காவின் டான் ஸேம் பகுதியில் சீன செட்டில்மென்ட் காலனி ஒன்று புதிதாக வந்திருக்கிறது என்று..

"தேவன் உடனிருக்க அவன் காரியத்தை நடப்பித்தான்" என்ற வார்த்தையின்படி, சீன வேதப் பிரதிகளைக் கடத்திச் செல்லும் வேலையில் உயிரைப் பணயம் வைத்து இறங்கினான் *YWAM* ன் தலைவர் லாரிங் கன்னிங்காமின் வலது கரமாயிருந்த ரூடி லேக் என்ற வாலிபன்.

ஆப்பிரிக்காவின் சீனக் குடியிருப்புகளுக்குள் மட்டுமல்ல, அடைக்கப்பட்ட சீனாவுக்குள்ளேயும் தேவன் அவனை எப்படிக் கொண்டு போகிறார் என்பதே திகில் நிறைந்த "தேவனின் கடத்தல்காரன்.." என்னும் இந்த அத்தியாயம்.

## அடைக்கப்பட்ட சீனாவுக்குள்..

### நனவான ஒரு கனவு

ரூடி லேக் சொல்கிறார்..

பல வருடங்களாக சீன மெயின்லான்டைக் குறித்து நான் எவ்வளவு படித்துத் தெரிந்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவு படித்து வைத்திருந்தேன். சைனாவுக்கு ஒரு விசிட்டர் விசாவாவது கிடைக்காதா என்று பலமுறை சுவிட்சர்லாந்தின் சீனத் தூதரகத்துக்கு சென்றிருக்கிறேன்.

சுவிட்சர்லாந்து மட்டுமன்றி நான் சென்றிருந்த ஆப்பிரிக்கா, ஜப்பான், லாவோஸில் இருந்த சீன தூதரகத்துக்கும், வெளிநாட்டவர் உள்ளே வர சீனாவின் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டிருக்குமோ என்று அறிய பலமுறை சென்றேன். ஆனால் அந்த நாட்டின் மூங்கில் திரைக் கதவுகள் இரும்புத்திரைக் கதவுகளாகவே இறுக்கி மூடப்பட்டிருந்தன.

1976 ல் நடுவில் தேவன் என்னை பூமியின் கடையாந்திர பசிபிக் நாடான நியூசிலாந்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

நான் அங்கே சென்றிருந்தபோது அங்கு அநேக சீன மக்களைக் காண நேர்ந்தது. அவர்களில் சிலர் சீனக் கப்பல்களில் வந்த மீனவர்களாகவும், சிலர் வணிக ரீதியாகவும், சிலர் கலாச்சார உறவு மேம்பாட்டு அடிப்படையிலும் வந்தவர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர சீன தூதரக அதிகாரிகளும் அதிக அளவில் கண்ணில் பட்டனர்.
அந்த நாட்களில் ஒரு ஞாயிறு அன்று பாப்திஸ்து சபை ஒன்றில் பேச அழைக்கப்பட்டிருந்த நான், ஆப்பிரிக்க டான்ஸேனியாவுக்குள் வந்திருந்த சீனர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க முயற்சித்த விதத்தை விளக்கி,"நீங்கள் ஒருவேளை மெய்ன்லான்ட் சீனாவுக்குள் செல்ல இயலாமல் இருக்கலாம். ஆனால் தேவன் சீன மக்களை நியூசிலாந்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். சுவிசேஷ வெளிச்சம் அறியா அவர்களுக்கு நீங்கள் அந்த ஒளியைத் தந்தாலென்ன ?" என்று அறைகூவலிட்டு அழைத்தபோது, பல வருடங்களாக சீனாவுக்குள் செல்ல நான் படும் முயற்சிகளையும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அந்த ஆராதனை முடிந்து, வந்தவர்களை சந்தித்து நான் பேசிக் கொண்டிருந்தபோது, நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் என்னை சந்தித்து ராட்னி என்ற தனது மகன் மெயின்லேண்ட் சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் நியூசிலாந்து எம்பஸியில் மெயின்ட்டனன்ஸ் மெக்கானிக்காக இருப்பதாகச் சொல்லி சமீபத்தில் அவனிடமிருந்து வந்த டேப் ஒன்றை என்னிடம் கொடுத்தார். என் ஆச்சரியத்துக்கு அளவில்லை.

அடுத்த நாள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தபோது,
"அம்மா எப்போது என்னைப் பார்க்க இங்கு வருகிறீர்கள்?
நான் தூதரகத்தில் இருப்பதால் யாரை வேண்டுமானாலும் இங்கே பீக்கிங்கிற்கு வரவழைக்க எனக்கு அனுமதி உண்டு.." என்ற அவனது வார்த்தை எனக்கு எங்கோ பொறி தட்டியது உடனே அவனது அம்மாவுக்கு போன் செய்து அவனது முகவரியைப் பெற்றுக் கொண்டு நான் யார் என்றும், அவன் அதிகாரபூர்வமாக அங்கு சில நாட்களுக்கு என்னை அழைக்க முடியுமா என்றும் கடிதம் எழுதிக் கேட்டேன். என் கடிதம் எந்த அரசாங்கக் கண்களுக்கும் சிக்காவண்ணம் தூதரகக் கடிதங்களோடு அவன் கைகளைச் சென்றடைய, சில நாட்களிலேயே தன்னை வந்து சந்திக்க வரும்படி அவனிடமிருந்து பதிலும் வந்தது. அதுவும் சீனத் தூதரகத்தின் முத்திரையுடன்..

இதற்குள் நியூசிலாந்திலிருந்து என் தாய் நாடான சுவிட்சர்லாந்து திரும்பியிருந்த நான் சுவிட்சர்லாந்திலுள்ள சீனத் தூதரகத்துக்கு அந்தக் கடிதத்துடன் சென்று சீனா செல்ல விண்ணப்பித்தேன். ஒரு மாதத்துக்குள் என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சீனா செல்ல அனுமதி வந்தது. அப்போது என் பாஸ்போர்ட்டைப் புரட்டிப் பார்த்தபோது தான் தெரிந்தது, நான் சீனாவில் தங்கியிருக்க ஒரு மாதம் மட்டுமே அனுமதி என்றும் அது செப்டம்பர் 30 முடிவடையும் என்றும்.. ஏற்கனவே ஆகஸ்ட் மத்தியில் நான் இருந்தேன். இன்னும் இரண்டே வாரங்களுக்குள் புறப்பட வேண்டும்..

சீனாவுக்குச் செல்ல சுவிட்சர்லாந்திலிருந்து ஜப்பானின் டோக்கியோ சென்று அங்கிருந்து பீக்கிங் போவதே நேரடி வழியாய் இருந்தது. எனக்கு கிடைத்த ஒரு மாதத்தையும் சீனாவுக்குள் முழுமையாய் பயன்படுத்த என் மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், இந்தக் காரியத்தில் தேவனின் தெளிவான வழி நடத்துதலுக்காக நான் காத்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று என் உள்மனது சொன்னது.

ஆகவே சீனாவுக்குப் புறப்பட சில நாட்களே இருந்த நிலையில் ஒரு நாள் YWAM ரிட்ரீட் சென்ட்டரின் புல்வெளி வழியே நடந்து கொண்டே, "ஆண்டவரே எப்போது நான் புறப்பட நீர் சித்தமாயிருக்கிறீர்? இந்தக் கம்யூனிஸ்ட் கோட்டைக்குள் நான் எப்போது நுழைய வேண்டும் ?" என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்..

அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமின்றி 15 என்று நாள் ஒன்று என் மனதில் வர, ஆண்டவரே 15 ஆம் தேதி நான் புறப்பட்டால் அங்கு எனக்குக் கிடைக்கும் ஒரு மாதத்தில் பாதி போய்விடுமே என்று நான் கேட்கப் படபடக்கத் தோன்றினாலும், பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தத்தைத் தெளிவாய் கேட்ட பல அனுபவங்கள் இதற்கு முன் எனக்கு இருந்ததால் தேவனின் வழி என்னுடையதைக் காட்டிலும் உயர்ந்தது என்று அமைதியானேன்.

உடனே அங்கிருந்த போன் பூத்துக்குச் சென்று ஏர்லைன்ஸூடன் தொடர்பு கொண்டேன். என்னுடைய போனை எடுத்த பெண், "நான் உங்களுக்கு உதவட்டுமா ?" என்று கேட்க, "செப்டம்பர் 15 அன்று பீக்கிங்கிற்கு ஒரு டிக்கெட் வேண்டும்" என்று கேட்டேன். அன்றைய நாளில் ஃப்ளைட் எதுவுமில்லை என்று அவர் சொல்ல,
"தயவு செய்து மறுபடியும் செக் பண்ணுங்கள்.." என்றேன்.
வேறு யாரிடமோ கலந்து பேசியவர், "உங்களுக்கு டிக்கெட் நான் புக் பண்ணலாம் ஆனால் இது ஈரானிய ஏர்வேஸ் விமானம்..
டோக்கியோவிலிருந்து பீக்கிங் வழியாக டெஹ்ரான் செல்வது.. அதில் வேண்டுமானால் 15ஆம் தேதிக்கு ஒரு டிக்கெட் தருகிறோம்" என்று சொன்னார். நானும் பயணத்துக்கு ஆயத்தமானேன்.

*சரியாக செப்டம்பர் 15 மதியம் நான் பயணித்த விமானம் பீக்கிங் வானில் வட்டமடித்து கீழே இறங்கத் தயாரானது.*

*இதற்குச் சரியாக ஒரு வாரம் முன்பு செப்டம்பர் 8 ம் தேதி தான் சர்வாதிகாரியாக 30 ஆண்டுகள் தன் இரும்புக் கரங்களில் சீனாவைச் சிறை வைத்திருந்த சேர்மன் மா சே துங் மரணித்த செய்தி வெளி உலகுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இப்படி ஒரு சூழலில் விமானம் தரையிறங்க ஆரம்பித்ததும் என் கை கால்கள் வெடவெடத்தன. அடுத்த இரண்டு வாரங்கள் எப்படி இருக்கும் ?*

*என் பைகளுக்குள் நன்கு ஒளித்து வைக்கப்பட்ட சுவிசேஷ பிரசுரங்களைப் பற்றிய எண்ணத்தோடு சற்று நடுக்கத்துடன் கஸ்டம்ஸ் அதிகாரிகளை நோக்கி நகர்ந்தேன். தூதரக விருந்தாளியாக இந்த நாட்டுக்கு நான் வந்திருந்தாலும் எனக்கென்று விசேஷித்த சலுகைகள் ஒன்றையும் அந்த நாட்டில் என்னால் எதிர்பார்க்க முடியாது என்று நன்றாகவே நான் அறிந்திருந்தேன்.*

*அங்கே நின்றிருந்த இரண்டு அதிகாரிகளுக்கு முன் நான் கொண்டு வந்திருந்த பொருட்கள் பட்டியலிடப்பட்ட டிக்ளெரேஷன் ஃபார்முடன் என் பாஸ்போர்ட்டையும் வைத்தேன். என் ஃபார்மை படித்துக் கொண்டே வந்த அதிகாரிகளில் ஒருவன், நான் வைத்திருந்த 16mm வீடியோ கேமரா மற்றும் பிலிம் ரோல்கள் இருந்ததைக் கண்டு, "எங்கள் சீனாவுக்குள் இதைக் கொண்டு செல்ல தடை உண்டு.." என்று சொல்ல, நான் எவ்வளவோ பேசிப் பார்த்தும் அவன் மறுத்துவிட்டான். கடைசியாக உபயோகப்படுத்துவதற்கென்று வைத்திருந்த பிலிம் ரோல் கேன் முழுவதையும் சுற்றிக் கட்டி சீல் வைத்து விட்டான்.*

*"திரும்பி வரும்போது இந்த சீல் உடைக்கப்படாமல் இருக்க வேண்டும் அல்லது தண்டனைக்குள்ளாவாய்" என்று எச்சரித்து என்னிடம் அதைக் கொடுத்தான்.*

என்னை அழைத்துச் செல்ல வந்திருந்த ரோட்னியின் தூதரக வாகனத்தில் பீக்கிங் சாலைகளையும் தெருக்களையும் பார்த்துக்கொண்டே ரோட்னியின் அடுக்குமாடி குடியிருப்புக்கு வந்து சேர்ந்தேன். சீனாவின் தலைநகர் பீக்கிங் இன்னும் முன்னேற்றம் பெறாத ஒரு நகராக, மேற்கத்திய வாசனையே படாத ஒரு பின்தங்கிய பட்டணமாகவே காட்சியளித்தது.

ரோட்னியுடன் வீடு வந்து சேர்ந்த நான் அவன் செய்திருந்த சாதாரண உணவை உட்கொண்டபடியே மேற்கத்திய உலகத்தின் வாசல்களை அடைத்துக் கொண்ட நாட்டுக்கு அவன் எப்படி வந்தான் என்று விசாரித்தேன்..

ஏற்கனவே நியூசிலாந்தின் ஆர்மியிலிருந்த அவன், வெளிநாட்டு வேலை ஒன்றுக்கு ராணுவத்தின் மூலமே விண்ணப்பிக்க, தான் விரும்பாவிட்டாலும், விரும்பாத சீனாவைத் தவிர வேறு இடம் இல்லாததால் வேறு வழியின்றி இந்தத் தூதரக வேலைக்கு ஒப்புக் கொண்டிருந்தான். ஆனாலும் இதிலும் ஏதோ ஒரு தேவ திட்டம் இருந்தது என்று அவன் அறிந்திருந்தான்.

"உன் மூலம் தூதரக அழைப்பை நான் பெற்றிராத பட்சத்தில் நான் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்திருக்கவே இயலாது என்றும் ஒருவேளை இதற்காகவே தேவன் உன்னை இங்கு அழைத்து வந்து இருப்பார்" என்றும் என்னுடைய நன்றியை அவனுக்குத் தெரிவித்தேன். நான் பீக்கிங் வந்து சேர்ந்த மூன்றாம் நாள் சேர்மன் மா சே துங்கின் இறுதி ஊர்வலமும் அடக்கமும் ஏற்பாடாகியிருந்தது. இலட்சக்கணக்கான மக்கள் கடந்த 10 நாட்களாகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த தியானென்மென் சதுக்கத்தில் சாரை சாரையாய் வந்துகொண்டிருந்தனர்.

அப்போது தான் ஒரு காரியத்தை நான்  உணர்ந்தேன்... ஒருவேளை ஒரு வாரத்துக்கு முன்பாக நான் வந்திருந்தால் அப்போதிருந்த குழப்பத்திலும் நெருக்கடியிலும் என்னை சீனாவின் ஏதாவது வேறொரு மாநிலத்திலேயே நிறுத்தியிருப்பார்கள் என்றும் தேவன் சகலத்தையும் நன்மைக்காகவே செய்கிறார் என்றும்..

நாங்கள் இருந்த பத்தாவது மாடியிலிருந்து இந்த வரலாற்றுக் காட்சியைக் காண ஆவலும் ஆச்சரியமும் உடையவனாக நான் இருந்தாலும் இந்தக் காட்சிகளை வீடியோ எடுக்க இயலவில்லையே என்று ஆதங்கம் என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. அங்கு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் தடை செய்யப்பட்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் எப்படியாவது இதைப் பதிவு செய்தே ஆக வேண்டும் என்ற ஆவலில் சீல் பண்ணப்பட்டிருந்த அந்தக் கேனை எடுத்து சீலை உடைக்காமலே திறக்க முடியுமா என்று தீவிர முயற்சி செய்து கடைசியாக வெளியே தெரியாதவாறு அதைத் திறந்து விட்டேன். ரோட்னியும் இன்னும் சிலர் தூதரக அதிகாரிகளும் தங்கள் பைனாகுலர் மூலம் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்க, நானோ கேமரா லென்ஸ் மூலம் யாவற்றையும் பதிவு செய்து கொண்டிருந்தேன். முப்பது ஆண்டுகளாக கோலோச்சிக் கொண்டிருந்த கிறிஸ்தவ விரோத மாசேதுங் என்ற ஒற்றை மனிதனின் விரல் நுனிக்கு கண்மூடித்தனமாய் நாடே கட்டப்பட்டுக் கட்டுப்பட்டிருந்தது.. பயந்து நடுங்கிப்போய்..

இனி இந்த நாட்டின் எதிர்காலம் என்ன ? அன்று யாரும் அறியாத ரகசியமாய் இருந்தது அது..

அடுத்த வாரம் சீனாவின் பிற மாநிலங்களுக்குள்ளும் செல்லும்படி நாங்கள் திட்டமிட்டிருந்தோம். அது எங்கள் திட்டமாக இருந்தாலும் நாங்கள் எங்கெங்கே போக வேண்டுமென்று சீன அதிகாரிகள் அனுமதித்திருந்தார்களோ அங்கு மட்டுமே, அதுவும் அவர்கள் நியமித்த அரசாங்க guide களோடே மட்டுமே நாங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

முதலாவது நாங்கள் செல்ல வேண்டியது Nanking என்ற மாநிலம். நீண்ட நெடும் ரயில் பயணத்துக்கு பின் நாங்கள் வந்து இறங்கிய பிறகு தான் சொல்லப்பட்டது.. நாங்கள் அங்கே அன்றிரவு இராத்தங்க இயலாதென்றும், இப்போதே ஷாங்காய்க்குப் போக வேண்டுமென்றும்...

எவ்வளவோ போராடியும் இயலாமல் போகவே, அன்று நள்ளிரவு ஷாங்காய் வந்து சேர்ந்தோம். பிறகு தான் தெரிந்தது, அன்று Nanking

நகரில் மாசேதுங்கின் மனைவி உட்பட நால்வர் கூட்டணி ஒன்று ஆட்சிப் பறிப்பு வேலையில் மும்முரமாக இறங்கியிருந்தது என்றும் அதை வெளிநாட்டவர்களாகிய நாங்கள் அறிந்து விடக்கூடாது என்பதாலுமே அங்கு நாங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.. கடைசியாக நால்வர் அணி கவிழ்க்கப்பட்டு சேர்மன் பதவி டெங் ஷாவா பிங் என்பவருக்குச் சென்றது.

ஆனாலும் 1976 இல் சீனாவின் கதவுகள் சுவிசேஷத்திற்கு இறுக்க மூடப்பட்டே இருந்தது. ஷாங்காயைச் சுற்றியுள்ள துறைமுகத்தைப் பார்வையிட நாங்கள் சென்ற போது கப்பலிலிலிருந்து சரக்குகள் இறக்கப் படுவதை நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே, இதே போல ஒரு நாள் பெட்டி பெட்டியாகக் கன்ட்டெய்னர்களில் வேத புத்தகங்கள் வந்து இறங்கட்டும் என்று என் விசுவாசித்தில் நான் ஜெபித்தேன்.

ஆனால் இன்னும் சில வருடங்களிலேயே ஆப்ரேஷன் மொபிலைஸேஷனின் லோகோஸ் கப்பல்களிலிருந்து பிரதர் ஆண்ட்ரூவின் ஓப்பன் டோர் ஊழியங்கள் மூலம் லட்சக்கணக்கான வேத புத்தகங்கள் அங்கு வந்து இறங்கும் என்பதையும், சீன சபை, தானே மெய்ன்லாண்ட் சீனாவில் அரசு அனுமதியுடன் வேதம் அச்சிடப் போகிறது என்பதையும் அன்று நான் அறியாதிருந்தேன்.

ஆனாலும் இப்போது இருந்த சூழலில் விசுவாசத்தில் பெரிய அடி எடுத்து வைப்பதைக் காட்டிலும் மிக ஜாக்கிரதையாய்க் கடத்திக் கொண்டு வந்த சில புதிய ஏற்பாடுகளையும் சிவப்பு நிற வேத பகுதிகளையும் ஆங்காங்கே வைத்துப் போவதே மிகப்பெரிய சவாலாய் இருந்தது. பீக்கிங்கில் அவைகளை வினியோகிப்பது ஆபத்து என்று அறிந்திருந்ததால் நாட்டுப்புறப் பகுதிகளுக்குள் எப்படியாவது கொண்டு சென்று விட முனைப்பாய் இருந்தோம்.

ஷாங்காய் நகரில் நாங்கள் சென்றிருந்த மியூசியத்தின் அலமாரிகளின் பின்பகுதிகளிலும் புத்தகங்களுக்குள்ளும் அவைகளை ஒளித்து வைத்தோம். அந்த வேலையுமே கடினமாக இருந்தது, காரணம் எங்களோடு வந்த சீன *guide* கண்கொத்திப் பாம்பாக எங்கள் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் இரவு கண்ணயர்ந்த அவனது கண்களுக்குத் தப்பி ஷாங்காயின் தெருக்களில் நடப்பது போல அங்கிருந்த பார்க் பெஞ்சுகளில் மெல்லிய வெளிச்சத்தில் யாரும் பார்த்து விடாதபடி புதிய ஏற்பாடுகளை வைத்துவிட்டு நகர்ந்தோம்.

இதற்குள் ராட்னியின் ஒரு வார விடுமுறை முடிந்து அவன் பீக்கிங் திரும்பி விட, நான் மட்டும் என் கைடுடன் இன்னும் சில நாட்களுக்கு அந்த நாட்டின் மலைப் பிரதேசமான *Gwelin* ஐக் காணச் சென்றேன்.

என்ன தான் பல ஊர்களுக்கும் இடங்களுக்கும் நான் சென்று கொண்டிருந்தாலும், எங்காவது ஒரு ஆலயமோ சபைக் கட்டிடமோ கண்களில் தட்டுப்பட்டுவிடாதா என்பதே என் ஏக்கமாக இருந்தது. *1976* வரை நடந்த மாவோயிஸத்தின் கம்யூனிஸ்ட் கெடுபிடியின் மத்தியிலும் சீன ரகசிய சபைகள் ஆங்காங்கே செயல்படுவதாக மேற்கத்திய நாடுகளில் செய்திகள் கசிந்து கொண்டிருந்தபடியால் அவற்றில் ஏதாவது ஒன்றையாவது காண வாய்ப்பு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

என்னுடைய பயணங்களில் ஒன்றில் கடைசியாக நான் சென்றிருந்த *Guangzhon* என்ற நகரின் மலை முகட்டிலிருந்து அந்த நகரைக் கேமரா மூலம் பார்த்துக் கொண்டிருந்தபோது அங்கே தூரத்திலே ஒரு ஆலய கோபுரம் தென்பட்டது. அந்த இடத்தை ஞாபகத்தில் இருத்திக்கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பிய நான் அன்று மதியம் செல்லவேண்டிய இடத்தை ஸ்கிப் பண்ணிவிட்டு மதியவேளை கண்ணயர்ந்திருந்த *guide* ன் கண்களுக்குத் தப்பி அந்த ஊரின் சந்து பொந்துகளுக்குள் புகுந்து,"ஆண்டவரே அந்த ஆலயத்துக்கு வழிகாட்டுமே !" என்று அந்த ஆலயத்தைத் தேடிப் போனேன்.

கடைசியாக அதைக் கண்டுபிடித்து, மூடப்பட்டிருந்த அதின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல முயன்ற எனக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. ஆலய இருக்கைகள் அகற்றப்பட்டு, அது காணப்பட்ட உட்புறத் தோற்றமே அங்கு ஆராதனைகள் நிறுத்தப்பட்டு பல

*காலமாகியிருந்தது என்பதைக் காட்டியது. இதற்குள் அங்கே காணப்பட்ட சீன மனிதன் ஒருவன் வேக வேகமாக ஓடி வந்து மாண்டரின் மொழியில் என்னை வெளியே போகும்படி சைகை காட்டினான். கனத்த இதயத்தோடு வெளியே வந்தேன்.*

*நான் சீனாவிலிருந்த 15 நாட்களில் பெரிய அளவில் என்னால் எதுவும் செய்ய இயலாவிட்டாலும் தேவன் எனக்கு ஒரு மிகப்பெரிய காரியத்தைச் செய்திருந்தார்.*

*இந்த அடைக்கப்பட்ட மூங்கில்திரை தேசம் சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட வேண்டுமானால்,*

*இந்த தேசத்தின் சட்டதிட்டங்களையும், உள்ளான நிலையையும் அறிந்து ஜெபிக்க ஜெப வீரர்களை எழுப்பியாக வேண்டும். அதற்கு என்னிடத்தில் முக்கியத் துருப்பாக இருப்பது நான் பதிவு செய்திருந்த 16mm வீடியோ ஃபிலிம். மாசேதுங்கின் இறுதி ஊர்வலம் முதல் பீக்கிங்கின் சந்து பொந்துகளில் காணப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கை அல்லாது, அடுத்து வந்த பத்து நாட்களில் நான் போய் வந்த ஊர்கள் கிராமங்கள் வரை சகலமும் படமாக்கப்பட்டிருந்தது. இது ஒன்றே இப்போதைக்குப் போதும், எங்கள் மேற்கத்திய ஜனங்கள் இந்த தேசத்தைக் குறித்து பாரப்படவும் கதறி ஜெபிக்கவும்..*

*பீக்கிங் வழியாக சீனாவுக்குள் வந்திருந்த நான் இப்போது ஹாங்க்காங் வழியாக வெளியேறும் ரூட்டில் இருந்தேன். இப்போது எனக்கு முன்னிருந்த பெரிய சவாலே இந்த 16mm ஃபிலிமை எப்படி கஸ்டம்ஸ் அதிகாரிகள் கண்களுக்கு மறைத்து வெளியே கொண்டு செல்வது என்பது தான்.*

*ஹாங்காங்கை விட்டுப் புறப்படும் முன் தினம் இரவு என்னுடைய டூத் பேஸ்ட் ட்யூபின் பின்புறத்தை வெட்டிவிட்டு அதிலிருந்த பேஸ்ட்டை வெளியே தள்ளி உட்புறமாக நன்கு சுத்தம் செய்துவிட்டு, ரப்பர் போன்று அமுக்கும் தன்மையுடைய அந்த ட்யூபுக்குள் மிக முக்கியமான பிலிம் ரோல்களை உள்ளே தள்ளி மறுபடியும் அதின்*

முனையை கவனமாக மடித்து மூடினேன். மற்ற ரோல்களை ஏற்கனவே நான் கவனமாய்த் திறந்திருந்த 16mm கேனுக்குள் போட்டு மிகக் கவனமாக மூடிவிட்டேன். வெளியில் பார்க்க சீல் உடைக்கப்படாதது போலவே அது காணப்பட்டது.

வழக்கமாகவே ஒரு கம்யூனிஸ்ட் தேசத்துக்குள் நுழையும்போது ஒரு அசாதாரண டென்ஷன் என்னைச் சூழ்ந்திருக்கும். சைனாவைப் பொறுத்த மட்டில் எனக்குள் அப்படி ஒன்று இல்லாவிட்டாலும், ஹாங்காங் கஸ்டம்ஸ் ஆபீஸில் அந்தத் தொளதொள நீல நிற யூனிபார்மில் இருந்த கஸ்டம்ஸ் ஆபீஸரைக் கண்டதும் ஏதோ ஒரு வித பயம் தொற்றிக்கொண்டது. ஆனாலும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் என் பொருட்கள் எல்லாவற்றையும் அவனுக்கு முன் பரப்பி வைக்க, எல்லாவற்றையும் மேலோட்டமாய்ப் பார்த்த அவன், என் பேப்பரில் சீல் போட்டு அனுப்பிவிட்டான். இப்படியாக ஹாங்காங் வழியே ஸ்விட்ஸர்லாந்து வந்து சேர்ந்தேன்.

அடுத்து வந்த பல மாதங்களை என்ன சொல்வேன் ?
அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல இடங்களில் கிறிஸ்தவ டிவி சேனல்களிலும் நான் ஒளிப்பதிவு செய்து வந்தவைகள் ஒளிபரப்பப்பட்டு, பல சபைகளுக்கு நான் பேச அழைக்கப்பட்டேன். சென்ற இடங்களிலெல்லாம் நசுக்கப்பட்ட சீன சபைகளுக்காகக் குரல் கொடுக்கவும், ஜெப வீரர்களை எழுப்பவும் நான் பதிவு செய்து வந்த குறும்படங்கள் மிகவும் கைகொடுத்தது. அதனால் பாரப்பட்டவர்களும் ஜெபிக்க எழுப்பப்பட்ட வர்களும் ஏராளம் ஏராளம் !

ஓ ! தேவனின் அளவற்ற நன்மையை என்னவென்று சொல்வது ! இன்றும் சுவிசேஷத்திற்கு வாசல்கள் அடைக்கப்பட்ட அநேக தேசங்களுக்குள் சுவிசேஷ ஒளியை ஊடுருவிக் கொண்டு செல்ல சேனை ஒன்று எழும்பாதோ என்பதே என் ஜெபமும் இப்புத்தகத்தின் நோக்கமுமாம் !

தேவன் அதை வாய்க்கச் செய்வாராக !

# அந்தரங்க தலைமறை சபைகளின் காலம் ஒன்றுக்கு ஆயத்தமாகும் காலம் இது !

CHAPTER - 8



# அந்தரங்க தலைமறை சபைகளின் காலம் ஒன்றுக்கு ஆயத்தமாகும் காலம் இது !

## Chapter - 8

**ஆயத்தமாவது எப்படி ?**

*Preparing For The Underground Church*

*Article By*

***Rev. Richard Wurmbrand***

*"அந்தரங்க சபையின் காலம்" என்ற ஒரு காலத்துக்கு எப்படி எப்படியெல்லாம் முன்கூட்டியே ஆயத்தப்பட்டுக்கொள்ள வேண்டும், அல்லது அந்த நேரம் ஒன்று வரும்போது எப்படி தயாராக இருக்க வேண்டுமென்ற இந்தக் கட்டுரையை இவ்வளவு விலாவாரியாக போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட் எழுதிய நோக்கம், தனது நாட்டு சபைகளையும் மற்றவர்களையும் அப்படிப்பட்ட நாட்களுக்கு ஆயத்தப்படுத்துவதற்காகவே !*

*இங்கே இதை மொழியாக்கம் செய்து பதிவு செய்வதன் நோக்கம், இப்படிப்பட்ட காரியங்களைக் கொஞ்சம் கூட அறியாத இன்றைய கிறிஸ்தவத் தலைமுறைக்கு இப்படிப்பட்ட காலங்கள் மற்ற தேசங்களின் விசுவாசிகளின் மேல் கடந்து சென்றிருக்கிறது என்று அறியப்படுத்தவும், நமது இந்திய சபைகளும் இதிலிருந்து விதிவிலக்கல்ல என்ற உண்மையை உரக்கச் சொல்லவுமே !*

*இப்படிப்பட்ட பதிவுகள் அவசியமா என்ற கேள்வி எழுவது இயற்கை. ஆனால் இவைகள் இக்காலத்துக்கு உதவும்படி பதிவிடப்படுபவைகள் மட்டுமல்ல, இவைகள் காலத்தின் கட்டாயம் என்பதைச் சொல்வதும் கட்டாயமே !*

*[ போதகர் ரிச்சர்ட் உம்பிராண்டும் அவரது மனைவி சபீனாவும், தங்கள் தேசமாகிய ருமேனியாவின் மேல் கார்மேகமாய், போர்மேகமாய் இறங்கிய கம்யூனிசத்தின் ஆபத்தையும், அது தேசத்தை எப்படி விழுங்கப்போகிறது என்பதையும் முன் கண்டு ருமேனிய சபைகளை மிக வேகமாக ஆயத்தப்படுத்தினர். கம்யூனிசக் கிறிஸ்தவ மாநாடு ஒன்றில் கிறிஸ்துவுக்காகத் துணிந்து நின்று சுவிசேஷத்தைப் பறைசாற்றியதற்காக 14 வருடங்களை சிறையில் கழித்தார் உம்பிராண்ட். அவரது மனைவியும் 3 ஆண்டுகள் கான்ஸென்ட்ரேஷன் கேம்ப் எனப்படும் டிட்டென்ஷன் கேம்ப்பில் அடைக்கப்பட்டார். அவரால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை நம்மை ஆவிக்குரிய வகையிலும், உணர்ச்சிபூர்வமான மனோநிலையிலும், , சரீரப்பிரகாரமாகவும் அப்படிப்பட்ட காலங்களுக்கு ஆயத்தப்பட அறைகூவி அழைக்கிறது.]*

ஏற்கனவே சுவிசேஷத்துக்குத் தங்கள் கதவுகளை இறுக மூடிக்கொண்ட நாடுகளிலுள்ள விசுவாசிகள் தலைமறைவாகும்படி தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஏற்கனவே கடும் உபத்திரவத்தின் மத்தியில் வேட்டையாடப்பட்டு உளவுத்துறையின் கண்கொத்திப் பாம்புக் கண்களிலிருந்து தலைமறைவு வாழ்வு ஒன்றையே வாழ்ந்து தான் வருகிறார்கள். மேலை நாடுகளைப் போன்ற மற்ற நாடுகளின் மதக் கலாச்சாரத்தில் அந்தரங்க சபைகளைப் பற்றிய அறிதலோ, அவர்கள் படும் கடும் உபத்திரவங்களைப் பற்றிய புரிந்து கொள்தலோ பெரும்பாலும் இருப்பதே இல்லை. அவ்வப்போது அப்படிப்பட்ட நாடுகளிலிருந்து கிடைக்கும் அரிதான வீடியோ க்ளிப்பிங்களோ, அல்லது புத்தகங்களோ, செய்திகளோ அல்லது அந்தரங்க சபைகள் உள்ள நாடுகளுக்குச் சென்று வரும் பயணங்களோ சில விபரங்கள் தரலாம். இவற்றை, தமது வருகைக்கு முன்னான உபத்திரவ காலக்கட்டத்தைக் குறித்து நமது ஆண்டவர் சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகளோடு இணைத்துப் பார்த்து, அப்படிப்பட்ட காலக்கட்டத்துக்கு நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வது நமக்கு அவசியம்.

## 1. உபத்திரவம் அனுபவிக்க ஆயத்தப்பட்டுக் கொள்ளுங்கள்:

**1:1 - உபத்திரவம் திடீரென்று கட்டவிழ்த்து விடப்படும் அந்த நாள் :**
திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு தடையுத்தரவின் மூலம் மிகப்பெரிய உபத்திரவம் ஒன்று தேசத்தின் மேல் கட்டவிழ்த்துவிடப்படும்.

**1:2 - ஒருவரும் அறியாதவண்ணம்:**
ஒருவர் கைது செய்யப்படுவதை மற்றவர் அறியாதவண்ணம் கைது நடவடிக்கைகளை மிக இரகசியாய் நடத்தியது சோவியத் உளவுத்துறை. இதைப் போன்ற நடவடிக்கைகளே மற்ற நாடுகளிலும் நடக்கும்.

**1:3 - பயப்பட வேண்டியதில்லை :**
தான் சிறையில் அடைக்கப்படுவதால் உண்மைக் கிறிஸ்தவன் ஒருவன் பயந்து விடுவதில்லை.

**1:4 - சிறைச்சாலை சாட்சிகள்:**
கிறிஸ்துவுக்காக சாட்சி சொல்ல சிறை என்பது ஒரு புது இடமும் புது அனுபவமுமாய் இருக்கும்

**1:5 - கடிகாரம் காணமுடியா காலம்:**
கைக்கடிகாரங்கள் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டு, நாளும் நேரமும் தெரியாமல் போகும் ஒரு இருண்ட காலம் அது!

**1:6 - மனரீதியான, உடல்ரீதியான, ஆவிக்குரிய அளவிலான ஆயத்தங்கள்**
எப்படிப்பட்ட நிகழ்வுகளுக்கும், உபத்திரவ சித்ரவதைகளுக்கும் மனதளவிலும் உடலளவிலும் ஆவிக்குரிய அளவிலும் முன்னதாகவே ஆயத்தப்பட்டுக்கொள்ளுதல் அவசியம்.

## 2. வாஸ்தவத்தைப் பற்றிய உண்மை:

**2:1 - சபையின் எந்தவொரு நபரும் காட்டிக்கொடுப்பவராய் மாறலாம்:**
எப்படிப்பட்ட வரம்பெற்ற ஆவிக்குரிய ஊழியரோ,
ஆராதனை வீரரோ கூட காட்டிக் கொடுப்பவராய் மாறுவர்.
ருமேனியாவின் மிகச்சிறந்த ஆவிக்குரிய பாடலாசிரியர் ஒருவர் கம்யூனிசப் பாடலாசிரியராய் மாறினார்.

*2:2 - சிறையில் சிலுவையில் அறையப்பட்டவர்கள்:*
*விசுவாசிகள் சிலுவையில் கட்டப்பட்டு நான்கு நாட்களாகத் தரையில் கிடத்தப்பட்டு, அவர்களது முகத்தின் மேலும் உடலின் மேலும் மலமும் நீரும் மற்ற கைதிகளால் கழிக்கப்பட அடித்து வற்புறுத்தப்பட்டனர்.*

*2:3 - வேத புத்தகம் அல்ல, வேதத்தின் கர்த்தரே !*
*வேத வசனங்கள் கூட சிலவேளைகளில் சிறைகளில் உதவிக்கு வருவதில்லை. நீங்கள் படித்திருக்கும் சங்கீதம் அல்ல, உங்களை பெலப்படுத்த கர்த்தரே அங்கு இறங்கி வருவார். சங்கீதம் யாரைப் பற்றிப் பேசுகிறதோ அவரையே நீங்கள் உங்களோடு வைத்திருக்க வேண்டும்.*

## *3. ஆவிக்குரிய பயிற்சிகள்:*

*3:1 - மிருகக்காட்சி சாலையும் சிங்கங்களும் உபத்திரவங்களும் :*
*உங்கள் பிள்ளைகளை மிருகக்காட்சி சாலைகளுக்கு அழைத்துச் சென்று அங்கே கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் சிங்கங்களைக் காட்டி, "பிள்ளைகளே, நமது விசுவாச முற்பிதாக்கள் தங்கள் விசுவாசத்துக்காக இப்படிப்பட்ட வனவிலங்குகளுக்கு முன்பாகத்தான் தூக்கியெறியப்பட்டனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்களும் கூட உபத்திரவப்படுத்தப்படுவீர்கள். ஆனால் சிங்கங்களுக்கு இரையாக அல்ல, சிங்கங்களை விடக் கொடூரமான மனிதரின் கரங்களில் சித்ரவதைப் படுத்தப்படுவீர்கள்.*
*கிறிஸ்துவின் பட்சத்தில் நிற்க விரும்புவீர்களானால் இங்கு இப்பொழுதே உங்களை அர்ப்பணிக்கத் தீர்மானித்து விடுங்கள்.." என்று உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்து இப்பொழுதே அவர்களை மனதளவில் ஆயத்தப்படுத்திவிடுங்கள்.*

*3:2 - சிறையிலே உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது :*

*சிறையில் நீங்கள் சகலத்தையும் இழந்து, உரியப்பட்ட நிலையில் நிற்பீர்கள். உங்கள் ஆடைகள் களையப்பட்டு, கைதிகளின் ஆடைகள் கொடுக்கப்படும்.*

**3:3 - உலக வசதிகளையும் ஆடம்பரங்களையும் இன்றே மறந்து துறந்துவிடுங்கள்:**

முன்கூட்டியே உலக ஆசைகளையும் இச்சைகளையும் மகிழ்ச்சி விருப்பங்களையும் வசதிகளையும் துறந்துவிடாத ஒருவரை யாரும் எதிர்ப்பதே இல்லை. இவைகளையெல்லாம் இப்பொழுதே துறந்து மறந்துவிட தன்னையே தயார்படுத்திக்கொள்ளும் ஒரு விசுவாசி, சிறையில் இவைகளில் ஒன்றாவது கிடைக்காதபோது, அது இல்லையே என்ற எந்தவொரு வித்தியாசமுமின்றி, எப்போதும் போலிருப்பார். உணர்ச்சிபூர்வமான எந்தவொரு பிடிப்பும் இல்லாமலேயே இவ்வுலகப் பொருட்களைக் கையாள இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள்.

**3:4 - சூப்பர் மார்க்கெட்டின் பொருட்கள் எதுவும் இல்லாமல் வாழ்வது:**

நீங்கள் ஒரு மாலுக்கோ சூப்பர் மார்க்கெட்டுக்கோ சென்று ஒவ்வொன்றாய்ப் பார்வையிட்டு, "இந்தப் பொருள் இல்லாமல் என்னால் இருக்க முடியாதா என்ன?" என்று ஒரு பைசா கூட செலவழிக்காமல் திரும்பி வந்து பாருங்கள்.
அப்போது மிக அழகான பொருட்களைப் பார்த்த சந்தோஷம் மட்டுமல்ல, "இவைகளெல்லாம் இல்லாமல் கூட என்னால் சந்தோஷமாய் இருக்க முடியும்" என்ற அதிலும் மேலான ஒரு சந்தோஷமும் உங்களுக்குள் தொற்றிக்கொள்வதைப் பார்ப்பீர்கள்.

## 4. சந்தேகங்கள் காட்டிக்கொடுக்கும் துரோகிகளை உருவாக்குகிறது :

**4:1 - தேவனைப் பற்றிய சந்தேகங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள்:**

நம் ஒவ்வொருவருக்கும் சந்தேகங்கள் வருவது இயல்பு. ஆனால் தேவன் ஒருவர் உண்டென்பதும், கிறிஸ்துவின்

உயிர்த்தெழுதல் உண்மையாய் நடந்த ஒன்று என்பதும், நித்திய வாழ்வு என்ற ஒன்று நிச்சயமாய் உண்டு என்பதுமான வேதத்தின் அடிப்படை உண்மைகளை, உபதேசங்களைக் குறித்த சந்தேகங்களை மனதில் வரவிடவே வேண்டாம். அவைகள் உங்கள் சிந்தனைக்குள் கூடு கட்ட விட்டுவிடாதீர்கள்.

**4:2 - எல்லா சந்தேகங்களுக்கும் ஒரு தீர்வு உண்டு :**

சந்தேகங்களோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டாம்.

அவைகளுக்குத் தீர்வைத் தேடுங்கள் என்பதே சந்தேகங்களுக்கான தீர்வு.

## 5. சித்ரவதைகளின் சோதனை :

### 5:1 - சித்ரவதைகள் உங்களை பெலப்படுத்தக்கூடும் :

அது பழுக்கக் காய்ச்சிய கம்பிகளோ, சாதாரண பிரம்பு அடிகளோ எதுவாயிருந்தாலும் சித்ரவதை - அது வலியும் வதையும் தான். அநேக சித்ரவதைகள் வகை வகையானவை. அவைகள் இரண்டு வகையிலும் கிரியை செய்ய முடியும். ஒன்று உங்களைக் கல்லாக்கி போலீசுக்கு எந்த உண்மையையும் வெளிப்படுத்தக் கூடாதென்கிற உங்கள் தீர்மானத்தில் உங்களை உறுதியாக்கிவிடும் அல்லது சகலத்தையும் உங்கள் வாயிலிருந்து கொட்ட வைத்துவிடும்.

### 5:2 - சிந்தையைச் சிதைக்கும் மின்சாரக் கதிர்கள் :

ஒரு சிறை அறைக்குள் பாய்ச்சப்படும் மின்சாரக் காந்தக் கதிர்களும் அதிர்வலைகளும் உங்கள் சிந்தையைச் சிதைக்கும் ஆற்றலுள்ளவைகள். "உன் பெயர் ஜோசப் தானே?" "நீ ஜோசப் இல்லையா?" என்று இரவும் பகலும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டேயிருக்கும் ஒலிப்பெருக்கிகள் உங்கள் செவிகளைச் செவிடாக்கி ஆளைப் பைத்தியமாக்கி விடக்கூடும்.

### 5:3 - கொல்லும் சித்ரவதைகளைக் காட்டிலும் தேவன் மகா பெலமும் வல்லமையும் உள்ளவர் :

அவர்கள் போரிடுவது உங்களுக்குள்ளே உள்ள கிறிஸ்துவுக்கு எதிராகவும் தேவனுக்கு எதிராகவுமே ! பிசாசு தேவனைப் போல சர்வ வல்லவனுமல்ல, சர்வ ஞானியுமல்ல, சர்வ வியாபியுமல்ல. அவன் தனது காரியங்களில் தவறு செய்யத்தான் செய்கிறான். கொல்லும் கொடிய சித்ரவதைகள் அளவு மீறிப்போனாலும் அவைகளை ஆவிக்குரிய பிரகாரமாய் மிக அழகாய்ப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

## 6. நெருக்கத்தின் நேரங்கள் :

### 6:1 - நெருக்கங்களின் ஒரு விநாடி :

சித்ரவதையின் உச்சத்தினால் மன உறுதியை இழந்து, விட்டுக்கொடுத்து உடைந்து விடும் கடைசி விநாடி நேரம்

ஒன்று உண்டு. வதைப்பவன் அந்த விநாடி நேரத்துக்காகவே காத்து நிற்பான். உங்கள் சந்தேக எண்ணங்கள் மேல் வெற்றி கொண்டு, முழுவதும் சிந்திக்கக் கூடிய மனநிலையில் உங்களை வைத்துக் கொள்ளுங்கள். அடியும் வலியும் தாளாமல் சபைகளைக் குறித்தோ, நீங்கள் தெரிந்து வைத்திருக்கும் அதின் நடவடிக்கைகள் குறித்தோ விபரம் சொல்லவோ, எழுதிக் கொடுத்து விடவோ நீங்கள் உங்களுக்குள்ளே ஆயத்தமாகிவிடும் ஒரு கடைசிக் கட்டத்தை எப்போதும் உங்களுக்குள் நீங்கள் உணருவீர்கள். மற்ற எதுவும் ஒன்றுமே இல்லை என்று நீங்கள் நினைக்கும் அளவுக்கு அணுஅணுவாய் சித்ரவதை செய்யப்பட்டிருப்பீர்கள்.

### 6:2 - அந்த விநாடி நேரத்தின் வலியிலே கிறிஸ்து உங்களோடு இருக்கிறார் :

எனக்கு வலிக்கவே கூடாது என்று நினைப்பது இயலாத ஒன்று. மேற்சொன்ன அந்தக் கடைசி நொடி நேரத்தில், கர்த்தர் இந்த விநாடியிலும் என்னோடு இருக்கிறார் என்பதை உங்களுக்குள் அசையாத நினைவாய் நீங்கள் வைத்திருக்கும் போது, அந்தக் கடைசி விநாடியையும் கூட தாண்டி விடுவீர்கள் - உங்களுக்குள்ளே சொல்ல முடியாத ஒரு மகிழ்ச்சியோடு ! அப்படி ஒரு இக்கட்டான கட்டத்திலும் கிறிஸ்து உங்களோடிருப்பதை உணருவீர்கள். உங்களது அந்த உடையும் நேரத்திலும் உங்களை அவர்கள் என்ன செய்தாலும், உங்களிடமிருந்து தோண்டியெடுக்க எந்தவொரு உபயோகமான விபரமும் தங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை என்ற நிலை அவர்களுக்கு வரும் போது, இனிமேல் அடித்து உதைப்பதால் அந்த பயனுமில்லை என்ற முடிவுக்கு அவர்கள் தானாகவே வந்து அதைக் கைவிட்டு விடுவார்கள்.

### 6:3 - உங்கள் பிள்ளைகளுக்கு இரத்த சாட்சிகளின் வரலாறுகள் பற்றின புத்தகங்களை வாசித்துக்காட்டுங்கள்:

“Foxe's Book of martyrs, மற்றும் "Jesus Freaks" போன்ற புத்தகங்களை வாசித்துக் காட்டுங்கள். நெருக்கத்தின் நேரங்களை இரத்த சாட்சிகள் எப்படி மேற்கொண்டார்கள் என்பதை அவர்களுக்கு விளக்கிக் காட்டுங்கள்.

**6:4 - அந்தந்த நேரம் அவ்வப்போது உள்ள வலியையும் வேதனையையும் தாங்கிக்கொள்ளப் போதுமானதாக இருக்கும் :**

நாளையோ, வரும் நாளிலோ வாங்கப்போகும் அடியையும் அவஸ்தையையும் இப்பொழுது இந்த நிமிடமே மொத்தமாய் நீங்கள் அனுபவிக்கப்போவதில்லை. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" என்பது போல, "ஐயோ நாளைக்கும் இந்த வலியைத் தாங்க வேண்டுமே!" என்று இப்போதிருந்தே கவலைப்படத் தொடங்கி விடாதிருங்கள். என்ன தான் சொல்ல முடியாத பாடாய் இருந்தாலும் ஒரு மணி நேர வலியைத் தாங்கக்கூடிய சக்தி இயற்கையாகவே மனிதனுக்கு உண்டு. இப்பொழுது உள்ள ஒரு நிமிட வலிக்கு மேலான வலியை நீங்கள் தாங்க வேண்டியதில்லை. அந்தந்த நேரங்களில் உங்களுக்குக் கிருபையும் பெலனும் தானாகவே டைத்துக்கொண்டே இருக்கும்.

**6:5 - இன்றைய வலியின் நேரம் இன்றைக்காக மாத்திரமே! :**

கடந்த நாட்களின் அடியையும் சித்ரவதையையும் நினைக்கும்போதே வலி பெரிதாகத் தோன்றும். ஆனால் "நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்" என்ற நமது ஆண்டவரின் வார்த்தைகளின்படி நாளைக்குக் கதை நாளைக்கு. நாளைக்கு நாம் இருப்போமோ, நம்மை வதைப்பவன் இருப்பானோ யாருக்குத் தெரியும்?

**6:6 - கசையடிபட்டு, பரியாசம் பண்ணப்பட்டு முகத்தில் துப்பப்பட்ட கிறிஸ்துவோடு இணைந்த நமது சரீரம் :**

2000 வருடங்களாக சாட்டையால் அடிபட்டுக் கிடக்கும் ஒரு சரீரத்தோடு தாங்களும் இணைக்கப்பட்டவர்கள் என்று ஒவ்வொரு அந்தரங்க சபையில் உள்ளவர்களும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். நாம் மனந்திரும்பிய நாள் முதலே, நாம் ஒரு வாரினால் அடிக்கப்பட்ட, பரியாசம் பண்ணப்பட்ட, துப்பப்பட்ட, முள்முடி சூட்டப்பட்ட,

கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்ட ஒரு சரீரத்தின் அங்கமாகிவிட்டோம் என்பதை உணர்ந்தே நாம் அதில் அங்கமாகியிருக்கிறோம். இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில் பட்ட பாடுகளை நான் எனக்குள் உண்மையாய் உணர வேண்டும்.

## *7. அன்பே தலையான ஒன்று:*

### *7:1 - உங்கள் குடும்பத்தைக் காட்டிலும் கிறிஸ்துவை மேலாக நேசிப்பது:*

*" ஒருவன் தன் தாயையாகிலும் தகப்பனையாகிலும் வெறுக்காவிட்டால்" - போன்ற மிகக் கடுமையான வார்த்தைகளை வேதம் நமக்குக் கற்பிக்கிறது. சுதந்திர நாடுகளில் இது போன்ற வார்த்தைகள் பெரிதாய் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. கிறிஸ்துவைப்பற்றிப் போதிக்கப்பட்டார்கள் என்னும் ஒரே காரணத்தினால் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாய்ப் பிரித்துக்கொண்டு போகப்பட்டனர். நீங்கள் உங்கள் பிள்ளைகளை விட கிறிஸ்துவை நேசித்தாக வேண்டும். "நீங்கள் கிறிஸ்துவை மறுதலித்தாலொழிய உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஒருக்காலும் மீண்டும் பார்க்கப்போவதே இல்லை" என்று கோர்ட் உங்களுக்கு விரோதமாய்த் தீர்ப்பளிக்கும். உங்கள் இருதயம் நொறுங்கிப்போகும். ஆனாலும் உங்கள் பதில், "நான் தேவனையே நேசிக்கிறேன்.." என்பதாகவே இருக்க வேண்டும்.*

### *7:2 - உங்கள் பிள்ளைகள் உங்கள் உண்மையான விசுவாசத்தைத் தங்கள் கண்களால் கண்டு தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்வர்.*

*தன் வீட்டிலிருந்து பாடிக்கொண்டே தனது 4 வருட சிறைத் தண்டனைக்குக் கடந்து சென்றார் நாடியா ஸ்லோபோடா. "எங்களைப் பற்றிக் கவலைப்படாதீங்க அம்மா, அவங்க எங்களை எங்க போட்டாலும் எங்கள் விசுவாசத்தை விட்டுவிடமாட்டோம்" என்று, பாடிக்கொண்டே விடைபெற்ற தங்கள் தாயைப் பார்த்துச் சொன்னார்கள் அந்தப் பிள்ளைகள். அப்படியே அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் செய்தனர்.*

***7:3 - ஒன்று இயேசுவுக்காக மரிக்க வேண்டும் அல்லது காட்டிக் கொடுக்கும் ஒரு துரோகியாய் மாறியாக வேண்டும்:***

இயேசுவுக்காக மரித்தல் அல்லது காட்டிக் கொடுப்பவர்களாக மாறுதல் - இந்த இரண்டில் ஒன்றை நீங்கள் தெரிந்துகொண்டாக வேண்டிய கட்டாயத்துக் குள்ளாக்கப்படுவீர்கள். உங்கள் முகத்தை நீங்களே கண்ணாடியில் காணும்போது, "நீ ஒரு துரோகி!" என்று உங்கள் முகமே உங்களுக்கு விரோதமாய் சாட்சியிட்டு நிற்கும் போது, அந்த வெட்கம் தோய்ந்த முகத்தோடு வாழும் வாழ்வினால் என்ன லாபமுண்டு?

## ***8. மௌனமாய் வாய் திறவாமலிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்:***

***8:1- நீங்கள் பேசுவதையும் சொல்வதையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.***

பெரும்பாலான தலைவர்கள் பேசுபவர்களாகவே இருப்பார்கள். ஆனால் நன்கு கவனிக்காத, காது கொடுக்காத ஒருவரால் நன்கு பேசவும் இயலாது. தங்கள் உள்ளத்தில் மிகுந்த பாரத்தைச் சுமந்து திரிபவர்கள் அநேகர். ஆனால் வெகு சிலரே உற்றுக் கவனிக்கும் பொறுமையுள்ளவர்கள். ஆகவே நீங்கள் பேசுவதைக் குறித்துக் கவனமாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் முன்பின் யோசிக்காமல் பேசினால் ஒரு வார்த்தை கூட சிலரை சிறையில் சிக்க வைக்கலாம், அல்லது உங்களது அந்த வார்த்தையால் அவர் கொல்லவும் படலாம்.

***8:2 - அவர்கள் உங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமுன்னேயே மௌனமாயிருக்கப் பழகிக்கொள்ளுங்கள்:***

உங்கள் தேசம் அவர்கள் கையில் விழும் முன்பாகவே நலமானதையும் பேசாமல் நீங்கள் மௌனம் சாதிக்கும் கலை ஒன்றைக் கற்றுக்கொண்டே ஆக வேண்டும். நோபல் பரிசு வென்ற ஸோல்ஸெட்ஸியின் முன்னாள் மனைவி அவரைப் படுத்திய சித்ரவதை சொல்லி முடியாது. அவர், தான் அறிந்திருந்த காரியங்கள் எல்லாவற்றையும் அவளுக்கு வெளிப்படுத்த, அவரது காரியதரிசியையும் அவள் அவள் சித்ரவதைப்படுத்தினாள். கடைசியாக உபத்திரவம் தாளாமல் அந்தக் காரியதரிசி தன் வாழ்க்கையையே முடித்துக்கொண்டாள்.

### 8:3 - எளிமையான சிறிய ஜெபம் ஒன்றே போதுமானது:

உங்களை போதை மருந்தின் மயக்கத்தில் வைத்திருக்கும்போதோ, அடி மேல் அடியாய் அடிக்கும் போதோ, உங்கள் இறையியலிலிருந்து உங்களுக்கு தெரிந்த எல்லாவற்றையும், ஏன், ஜெபத்தையும் கூட மறந்து போவீர்கள். ஆவியானவர் எல்லாவற்றையும் உங்களுக்கு நினைவூட்டித்தரும்படி கூட நீங்கள் ஜெபிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில் நீங்கள் ஜெபிக்கக் கூடிய ஒரே ஜெபம், "இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்" என்பதாக மட்டுமே இருக்கட்டும். அதைக் கூடச் சொல்ல பெலனற்ற நேரங்களில் அவரை நேசிக்கும் உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்புமே மேலான ஒரு ஜெபமாக மேலெழுந்து செல்லும்.

*8:4* - உங்களால் பேச முடியாத ஒரு நிலையிலிருந்து நீங்கள் பேச ஆரம்பிக்கும் நிலைக்குத் திரும்பும்போது, உங்கள் பேச்சினால் ஒரு லாபமும் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள். அப்போதும் நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதைத் குறித்து கவனமாயிருங்கள். கடினமான காலகட்டத்தில் வாயை இறுக்க மூடிக்கொள்ளும் மௌனவிரதக் கலையை இப்போதிருந்தே கற்றுக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட கடுமையான நேரங்களில் வாயை இறுக மூடிக்கொள்ளுங்கள். அதைப் பிறகு அல்ல, இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள்.

### 8:5 - இரகசியத்தை உங்கள் மட்டாக வைத்துக்கொள்ளுங்கள்:

ஒரு வாலிபன் இன்னொரு பெண்ணுக்காகத் தன் முந்திய காதலியைக் கைகழுவி விட்டான். அவர்கள் இருவரும் ஒன்றாயிருந்த நாட்களில் பல இரகசியங்களை அவன் அவளுக்குச் சொல்லியிருந்தான். பிறகு அவள் அவற்றை இரகசிய போலீசுக்குச் சொல்லித் துப்புக்கொடுக்க, அவன் கைது செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்று, சிறையில் பைத்தியமாகவே போய் விட்டான்.

## 9. அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள்:

### 9:1 - அவர்கள் எப்படிப்பட்டவைகளைக் கேட்க விரும்புகிறார்களோ அதையே சொல்லுங்கள்:

எதை எப்படிச் செய்ய வேண்டுமென்கிற வழிமுறைகள் அறியாமல் நீங்கள் அந்தரங்க சபைகளின் வேலைகளை இரகசியமாய் செய்யவே முடியாது. எடுத்துக்காட்டாக, யாரோ ஒருவர் இப்படிப்பட்ட இரகசிய சபைகளுக்கு வேலை செய்கிறார் என்று அவர்கள் சந்தேகப்பட்டு, "நீங்கள் இன்னும் கூட்டங்களில் கூடுகிறீர்களா?" என்று வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டால், "சார், ஜெபக் கூட்டங்களெல்லாம் தடை செய்யப்பட்டுள்ளதே?" என்று சொல்ல வேண்டும். "பரவாயில்லையே? உனக்குத் தெரிந்திருக்கிறதே! நல்லது.." என்று சொல்வான். நீங்கள் ஏற்கனவே தலைமறைவாய் கூட்டங்களில் பங்கு பெற்றுக் கொண்டிருந்தாலும் உங்கள் பதில் இப்படிப்பட்டவைகளாய்த் தான் இருக்க வேண்டும்.

### 9:2 - பாம்பைப் போல வினாவுள்ளவர்களாய் இருங்கள்:

நாம் சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவர்களாகவும், புறாவைப் போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டும். " நீ ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதால் நீ எங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும்" என்று உங்களை வற்புறுத்துவார்கள். இயேசுவும் கூட சில இடங்களில் உண்மையை மறைத்தே பேசினார். மோசேயைப் போன்ற ஆண் பிள்ளைகளைத் தப்புவிக்கும்படியாக எபிரேய தாதிகள் பார்வோனிடம் உண்மையை மறைக்கவே செய்தனர். இப்படிப்பட்ட நேரங்களில் இப்படிச் செய்வதில் தவறில்லை.

### 9:3 - நமது மரணம் எப்போது வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதால் யாரைப் பற்றிய விபரங்களையும் ஒரு போதும் சொல்லிவிடாதிருங்கள்:

கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களை எந்தச் சூழ்நிலையிலும் காட்டிக்கொடுத்து விடாதிருங்கள் அல்லது அவர்களைப் பற்றிய விபரங்களைக் கக்கிவிடாதிருங்கள். சித்ரவதையின் உச்சக்கட்டத்தில்

உங்களுக்கு மரணம் ஏற்படுவது ஒன்று தான் கொடுமையானது. ஆனால் மரணம் என்பது உலகத்தில் நிகழும் இயற்கையானது. ஆகவே எப்படியிருந்தாலும் மரணம் என்ற ஒன்று இன்றோ நாளையோ சகஜம் தானே என்ற எண்ணத்தோடு, எப்படியிருந்தாலும் என்றோ ஒரு நாள் சாகத்தானே வேண்டும், அப்படிச் சாகுமுன் என் சகோதரரைக் காட்டிக் கொடுத்த பழியோடும், குத்திக் கிழிக்கும் குற்ற மனசாட்சியோடும் ஏன் சாக வேண்டும் என்ற எண்ணத்தை எப்போதும் மனதில் பதித்து வைத்துக்கொள்ளுங்கள்.

## *10. மூளைச்சலவைக்கு எதிர்த்து நில்லுங்கள்:*

உடல் ரீதியான உபத்திரவம் ஒன்றே மிகப்பெரிய ஒன்று அல்ல - அதைவிடப் பெரியது மூளைச்சலவை. எங்கள் ருமேனிய சிறைச்சாலையிலே இங்கே அங்கே சாய முடியாத பெஞ்ச் ஒன்றில் நாள் ஒன்றுக்கு 17 மணி நேரம் கண்ணிமைக்காமல் உட்கார வைக்கப்பட்டோம். அந்தப் பதினேழு மணிநேரமும் எங்கள் காதுகளில் ஒரே ஒரு சத்தத்தை மட்டுமே நாங்கள் திரும்பத் திரும்பக் கேட்க வேண்டியதாயிருக்கும். "கம்யூனிஸம் நல்லது, கம்யூனிசம் நல்லது...கிறிஸ்தவம் செத்தது..கிறிஸ்தவம் செத்தது.."

ஒரு நிமிடத்தில் அது உங்களுக்குப் போரடித்துவிடும். ஆனால் இதே சத்தத்தையே நீங்கள் மணிக்கணக்காக, நாட்கணக்காக, வாரக்கணக்காக, மாதக்கணக்காக, வருடக்கணக்காக எவ்விதத் தடங்கலுமின்றி இடைவிடாமல் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். உடல் வதையை விட மிகக் கொடுமையான இந்த டார்ச்சரைத் தாங்குவது அவ்வளவு எளிதல்ல என்று என்னால் அடித்துச் சொல்ல முடியும்.

## *11. இதயச் சலவை :*

கம்யூனிஸ்ட்டுகள் கண்டுபிடித்த மூளைச்சலவைக்கு எதிராக கிறிஸ்து நமக்குச் சொல்லித்தந்தது, இதயச்சலவை. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத்

தரிசிப்பார்கள்" என்றார் இயேசு. "கிறிஸ்தவம் செத்தது, கிறிஸ்தவம் செத்தது.." என்று கம்யூனிஸ்ட்டுகள் இடைவிடாமல் ஓதிக்கொண்டிருக்க, நாங்களும் அதே பல்லவியில் "கிறிஸ்து மரித்தார், ஆனாலும் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.." என்று அதற்கு மாற்றாகவும் எதிராகவும் சொல்லிக் கொண்டேயிருந்தோம். எங்கள் இதயச் சலவை, இப்படியாக அவர்களது மூளைச் சலவையை மேற்கொண்டு நின்றது.

### 11:1 - அவசியப்பட்டால் "கடந்த காலத்தில்" வாழுங்கள்:

“விசுவாசித்தவளே பாக்கியவதி" என்று எலிசபெத்து மரியாளுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள். “விசுவாசித்தவளே" என்பது கடந்தகாலச் சொல். நீங்கள் உங்கள் கடந்தகால அனுபவங்களில் வாழ்ந்தால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அப்படிப்பட்ட பாக்கியத்தில் வாழுங்கள். ஆத்துமாவின் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நீங்கள் நடந்து போகும்போது கடந்த கால ஞாபகங்களில் நீங்கள் வாழ்வதே ஒரு ஆசீர்வாதமான அனுபவமாயிருக்கும். மூளைச்சலவையை எதிர்க்க உங்களுக்குக் கைகொடுத்து நிற்பது உங்கள் விசுவாசத்தின் அசையா உறுதியும் சீஷர்களைப் போன்ற ஆழமான அன்புமே! எந்த எல்லை வரைக்கும் அதற்கு எதிர்த்து நின்றுவிடுங்கள்.

## 12. தனிமையை மேற்கொள்ளுதல் :

### 12:1 - தனிமையின் வெறுமையை எப்படி மேற்கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்:

தன்னுடைய தனிமையின் வெறுமையை எப்படி மேற்கொள்வது என்பதே தனிமைச் சிறையில் தள்ளப்பட்ட ஒருவனின் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்று. அந்த நாட்களில் எங்களுக்கு எந்தப் புத்தகங்களோ, வேதாகமமோ, ஒரு பென்சிலோ, ஒரு துண்டு பேப்பரோ கூட எங்கள் கையில் இருந்தில்லை. எவ்வித சத்தமோ, உங்கள் கவனத்தை ஈர்க்கும் எதுவொன்றும் கேட்கப்படாத நிசப்தமான இடமாயிருக்கும் அது. இரவு பகலாய் அந்தச் சுவர்களையே வெறித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க

வேண்டும். இப்பொழுதே சிறை அனுபவங்களைக் குறித்த புத்தகங்களைப் படித்துப் படித்து உங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

### *12:2 - இரவில் தூங்காதிருங்கள்:*

*பைத்தியமாகிப் போவதிலிருந்து என்னை நானே இப்படித்தான் காத்துக்கொண்டேன். ஆனாலும் ஆவிக்குரிய பயிற்சி முறை நிறைந்த வாழ்க்கை ஒன்றினால் உங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக்கொள்வது மிக மிக அவசியம். இரவெல்லாம் விழித்திருக்கும், விழித்து ஜெபித்திருக்கும் பழக்கம் ஒன்றை சிறை செல்லும் முன்பாகவே நாங்கள் உண்டாக்கிக்கொண்டோம். மிகப்பெரிய பாவங்களும் குற்றங்களும் இரவிலேயே செய்யப்படுகின்றன. அந்தகாரத்தின் சக்திகளும் அசுத்த ஆவிகளின் தாக்கங்களும் இரவிலேயே மும்முரமாய்க் கிரியை செய்கின்றன. ஆகவே இரவு முழுவதும் விழித்திருக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக்கொண்டோம்.*

*12:2 - எங்கள் இரவு ஜெப வேளைகளில் முழு உலகத்துக்காகவும் ஜெபித்தோம். முழு இரவையும் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளால் நிறைத்திருந்தோம். ஒவ்வொரு தேசத்துக்காகவும், நகரத்துக்காகவும், தேவ மனிதர்கள், கடல் யாத்திரையில் உள்ளவர்கள், ஆகாய விமானிகள் மற்றும் சிறைச்சாலையில் உள்ளவர்கள் என்று எங்கள் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். ஜெபம் முடிய இரண்டு மணி நேரமாகும். இப்படி ஜெபித்தபின், நான் என் ஞாபகத்திலிருந்து வேதத்தின் ஒரு பகுதியை, நேரில் வாசிப்பது போலவே வாசிப்பேன். இரகசிய சபையில் இருப்பவர்களும், அங்கு ஊழியம் செய்பவர்களும் வேதத்தை மனப்பாடம் செய்து வைத்திருப்பது மிக மிக அவசியம். இவர்கள் அல்லாது மற்றவர்களும் கூட இப்படிப்பட்ட நாட்களுக்கென்று அப்படியே தங்களைப் பயிற்சித்துக்கொள்வது அவசியம்.*

இப்படி நான் என் ஞாபகத்திலிருந்து வேத பகுதியை வாசித்து முடித்தபின் என்னுடைய செய்தி, "அன்பின் சகோதரரே.. என்று ஆரம்பித்து .. ஆமென்" என்று முடியும். இப்படியே நாங்கள் பழகியிருந்ததால் அதுவே தனிமைச் சிறையில் எனக்குக் கைகொடுத்தது. இப்படியாக நான் கொடுத்த 350 செய்திகளை நான் மனப்பாடமும் செய்து வைத்திருந்தேன். இப்படி சில பிரசங்கங்களை தனிமைச் சிறையில் நான் தேவனுக்கும் தேவதூதர்களுக்கும் முன்பாகக் கூடச் செய்ததுண்டு.

### 12:3 - பயிற்றுவிக்கப்பட்ட சிந்தையோடு எப்போதும் விழிப்போடிருங்கள்:

சிந்தனையில் சோர்வுக்கு மட்டும் இடம் கொடுத்து விடாதிருங்கள். இடம் கொடுத்துவிட்டால் அப்புறம் நீங்கள் நீங்கள் சத்துருவின் கையில் தான் என்பதை மறந்து விட வேண்டாம். உங்கள் சிந்தை தொடர்ச்சியாய்ப் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். உங்கள் சக்திக்கு ஏற்றபடி வித்தியாசமான நேர்மறையான காரியங்களால் உங்கள் சிந்தனை ஆவிக்குரிய விதத்திலும் கண்ணோட்டத்திலும் ஆவியானவரின் நடத்துதலுக்கு ஏற்ப விழிப்போடு பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும்.

## 13. உண்மையான அடையாளம்:

அந்தரங்க சபை என்பது புதிதான ஒன்று அல்ல. அங்கே நீங்கள் புதிய ஏற்பாட்டைப் புதிய கண்ணோட்டத்தோடு காண்பீர்கள். உலகமும் அதின் வழிகளும் அல்ல, இது தான் விசுவாசிகளாகிய நமது உண்மையான அடையாளம். அரசாங்கம் நல்லதும் கெட்டதும் செய்யும். ஆனால் நாமோ எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.

## 14. போதகர் ரிச்சர்ட் உம்பிராண்டின் மேற்கண்ட இந்தச் செய்தியைக் குறித்து போதகர் மார்க் ஒயிட் சொல்கிறார்..

### 14:1 - காலத்துக்கு முன்பாகவே ஆயத்தப்படுங்கள்:

அந்தரங்க சபைக்கென்று நாமும் ஆயத்தப்பட்டு, சகோ. ரிச்சர்ட் உம்பிராண்டு இந்தச் செய்தியில் மிகத்தெளிவாகச்

சொல்லியிருக்கிறார். கூரையைப் பழுதுபார்ப்பது என்பது மழைக்கு முன்பாகவே செய்யப்பட வேண்டிய காரியம். அது இந்தக் காலம் தான். ஆகவே காலம் தாழ்த்தாதிருங்கள்.

### *14:2 - வேதத்தை நீங்கள் வாசிப்பது அல்ல, நீங்களே வேத புத்தகமாக இருக்க வேண்டும்:*

வேதத்தை வாசிப்பது மட்டும் போதாது. இருப்பவராகவே இருக்கும் தேவனோடு நீங்கள் நடக்க வேண்டும். வேதத்தின் பகுதிகளே உங்கள் மனதின், ஞாபகத்தின் மிகப்பெரிய ஒரு பகுதியாய் மாறுமளவுக்கு அவைகளின் பெரிய பெரிய பகுதிகளை நீங்கள் மனப்பாடம் செய்துகொண்டே இருக்க வேண்டும். வேதம் தேவனல்ல, ஆனால் அது தேவனின் இருதயத்தையும் அவரது கட்டளைகளையும் வெளிப்படுத்துகிறது. வேதத்தை வாசிக்கும்போதே எந்தெந்த வசனம், எந்தெந்தப் பகுதி, எந்தப் பக்கத்தில், இடது பக்கமோ வலது பக்கமோ, கீழேயோ மேலேயோ நடுவிலோ எங்கே இருக்கிறது என்பதை மனதில் படம்பிடித்து வைத்து படித்துக் கொண்டே போங்கள். எடுத்துக்காட்டாக, "பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்" என்ற மத்தேயு 6ம் அதிகாரத்தின் பகுதி, என் ஆங்கில வேதாகமத்தில் வலது புறத்தின் மேல் பகுதியில் தொடங்கி கீழே 34ம் வசனம் வரை முடிகிறது என்பதை என் கண்களுக்கு முன்னே நான் வைத்திருக்கிறேன். அந்த வசனத்தை யோசிக்கும்போதே ஆவியானவரின் உதவியால் என்னால் அதை நினைவுகூர முடிகிறது.

### *14:3 - நமக்கு முன் இந்தப் பாதையில் கடந்து சென்ற நம் சகோதரர்களின் வளமையான வரலாறுகள்:*

நமக்கு முன்பாக இந்தப் பாதையில் கடந்து சென்ற நமது சக உதிரங்களின் ஆழமும் அகலமுமான அனுபவங்களின் வரலாறுகளால் நாம் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சரித்திரங்களுக்காய்க் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

***14:4 - ஒரு மேன்மையான உயிர்த்தெழுதல் :***

*தங்கள் விசுவாசத்துக்காகக் கொல்லப்பட்ட பரிசுத்தவான்களைப் பற்றி எபிரேயரின் புத்தகம் சொல்லும்போது, "அவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி.." (எபி 11:35) என்று சொல்கிறது. இது அவர்களது வெகுமதியின் ஒரு பகுதியோ? வெளிப்படுத்தல் 6ல் இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்ட ஆத்துமாக்களின் கூக்குரல் தேவனின் பலிபீடத்தின் கீழிருந்து கூப்பிடுகிறது என்று சொல்லப்படுகிறது. நமது நித்தியத்தின் நாட்களை இப்படிப்பட்ட ஸ்தலத்தில் செலவிடுவது என்பது எத்தனை பெரிய காரியம்! நாமும் ஒரு வேளை அந்த எண்ணிக்கையை நிறைவு செய்யும் சிலரில் ஒருவராய் இருக்கலாம். ஆகவே எல்லாக் காரியத்திலும் தேவன் ஒருவரையே நாம் பிரியப்படுத்துவோமாக! (கொலோ 1:10)*

# செந்நீர் தேசம்

[ முதல் நூற்றாண்டு முதல் இன்று வரை எழுப்புதலுக்காகச் செலுத்தப்பட்டு வரும் விலைக்கிரயங்கள் ]

## CHAPTER - 9














# செந்நீர் தேசம்

## Chapter - 9

**"எழுப்புதலுக்கு என்ன விலையானால் தான் என்ன? தலையையே தந்தாலும் தகும்.." என்றார் லியோனார்ட் ரேவன்ஹில்.**

**"ஒரு மாபெரும் மாற்றத்துக்கு நேரம் வந்து விட்டது.. தனிப்பட்ட வாழ்வில்..சபைகளில்..சமுதாயத்தில்.. தேசத்தில்.. ரிக்டர் அளவுகளால் அளவிட முடியாத ஒரு ஆவிக்குரிய பூகம்பம் வெடித்தே ஆக வேண்டும். அதின் காரணகர்த்தா நீயாக ஏன் இருக்கக் கூடாது? ஆனால் அதின் விலைக்கிரயம் நீ நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று!" என்று அவரே சொன்னார்..**

*"அப்போஸ்தல சபை," "அப்போஸ்தல கிறிஸ்தவ சபை," "அப்போஸ்தல எழுப்புதல் சபை," "கடைசி கால அப்போஸ்தல சபை" என்று இன்னும் எத்தனையோ "அப்போஸ்தல" பெயர் தாங்கிய சபைகள் நம் மத்தியிலே உண்டு. இந்தப் பெயர்கள் யாவுமே, அப்போஸ்தலர் காலத்துக் கிரியைகளையும், வெடித்துச் சிதறிய எழுப்புதலையும், சுவிசேஷப் பரம்புதல்களையும், ஆவியானவரின் அருள் மாரியையும் மீண்டும் ஒருமுறை நாமும் கண்டுவிட மாட்டோமோ என்ற பாரத்திலும் தரிசனத்திலும் வைக்கப்பட்டவைகளே!*

**ரேவன்ஹில் சொல்கிறார்..**

*"ஆதி கிறிஸ்தவம் பிறந்தது..அன்றைய அதிநவீன சர்வாதிகார சமுதாயத்தில்.."*

*“ஆதிசபையின் ஒருபக்கம் மதிலாய் பயமுறுத்தி நின்றது.. வரலாற்றிலேயே சர்வ வல்லமை பொருந்திய இராணுவ பலம் நிறைந்த ரோம சாம்ராஜ்யம்.."*

"இன்னொரு பக்கம் அவர்களைக் கலவரப்படுத்தியது...கிரேக்க அறிவு ஜீவிகளின் வானளாவிய மதில்.."

"சபை முன்னுக்கு நகர முடியாதபடி முட்டுக்கட்டையாய் தடைச்சுவராய் நின்றது..

" கடவுள் தங்களுக்கே தங்களுக்கு சொந்தம் என்று ஏகபோகமாய் உரிமை கொண்டாடி நின்ற யூதவர்க்கம்.."

இவைகளுக்கு மத்தியிலும் "உலகத்தைக் கலக்கிய " அந்த சபையில் பெரிய பேச்சாளர்களோ அறிவாளிகளோ இல்லை..அவர்களுக்கு பணபலமோ, படைபலமோ, சமூக அந்தஸ்தோ இல்லை..

எருசலேமிலே , புறக்கணிக்கப்பட்டு, புறம்பாக்கப்பட்டவர்களின் பட்டியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அவர்கள்..

அவர்களைக் குறித்தே பிறகு குறிப்பாய் சொல்லப்பட்டது.." உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்.." என்று..

"Philips புதிய ஏற்பாட்டை நமக்குத் தந்த Dr.J.B.Philips, அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் சில அதிகாரங்களைப் பற்றி சொன்ன அறிமுக வார்த்தைகளை, வாரம் ஒருமுறையோ அல்லது ஒரு நாளில் ஒரு முறையாவது நான் நினைத்துப் பார்ப்பதுண்டு..

அவர் சொல்கிறார்..

"இன்று ஆசீர்வாதங்களில் செழுத்து கொழுத்து மூச்சுமுட்டி நிற்குமுன், அந்த முன் நாட்களில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சபை இதுவே..!"

"இன்றைய ஸ்தாபன, நிறுவன பெருமையில், பணப்புழக்கத்தில், மாம்ச சுய பெலத்தில் சிக்கிச் சீரழியுமுன், அந்த முன் நாட்களில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சபை இதுவே..!"

" இன்றைய இறையியல் அறிவிலிகள் வேத ஆராய்ச்சி என்ற பெயரில் கூடி "உளவியல் மருத்துவ" ஆராய்ச்சிகளோ, பைபிள் சைன்ஸ் ரிசர்ச் - களோ செய்து கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை அன்றைய இயேசுவின் சபை...

*மாறாக வியாதியஸ்தர்களை அங்கங்கேயே அவ்வப்போது அந்நேரமே குணமாக்கி, செத்தவர்களை உடனுக்குடன் உயிரோடு எழுப்பித் தந்தனர் - சர்வ சாதாரணமாக..*

*" அன்றைய இயேசு கிறிஸ்துவின் சபை,*
***ஜெபம் சொல்லவில்லை.."*** *மாறாக* ***பரிசுத்த ஆவியில் ஜெபித்தது.." ஜெபிப்பதற்கும் "ஜெபம் சொல்வதற்கும்" பாரதூர வித்தியாசம் உண்டு.."***

*ஆனால் இதுவரை சபை சரித்திரம் கண்டிராத அந்த முதல் 300 வருட எழுப்புதலுக்கு, பெந்தேகோஸ்தே என்னும் ஆவியானவரின் அருள்மாரி, தேவ தரப்பின் பங்காளிப்பேயானாலும், அந்த எழுப்புதலுக்காக ஆதிசபை செலுத்திய மிகப்பெரிய விலைக்கிரயம் ஒன்று மனிதப் பங்களிப்பின் மறுக்க முடியாத உண்மையாய் இன்றுவரை இருந்து வருகிறது. இவைகளுக்கு முன்னோடியாக 400 வருட இருளை ஆறே மாதத்தில் விரட்டியடித்து, செத்துக் கிடந்த தேசத்தையே அனாயாசமாகத் தூக்கி நிறுத்திய யோவான் ஸ்நானகன் என்ற காட்டுத்தீர்க்கன் தன் நாட்களின் எழுப்புதலின் விலைக்கிரயமாகத் தன் தலையையே தட்டில் வைத்துத் தந்தான்.*

■ ***பவுல்*** *என்ற எழுப்புதல் எழுந்தது, ஸ்தேவான் என்ற இரத்தக் கிரயத்தின் கற்குவியல் மேலேயே..*

■ ***யாக்கோபு :***
*கிறிஸ்து இயேசு என்னும் நிகரில்லாத எழுப்புதலைக் கண்ணாரக் கண்டவர்களும், அந்த எழுப்புதலில் தங்களை இணைத்துக் கொண்டவர்களுமான இணைபிரியா சகோதரர்கள் யாக்கோபு - யோவான். அந்த எழுப்புதலின் அழைப்புக்குக் கீழ்ப்படிய அவர்கள் தந்த முதல் விலைக்கிரயம், தங்கள் தகப்பனையும் தாயையும் படகுகளையும் வலையையும் தொழிலையும் விட்டது.*
*அதன் பின் வந்த அப்போஸ்தல எழுப்புதலுக்கு யோவானின் சகோதரன் யாக்கோபு விலையாய்த் தந்தது, தன் தலையை - ஏரோதின் பட்டயத்துக்கு இரையாக! தான் மரிக்கும் முன்பு தன்னைக் கொலைக்களத்துக்கு இட்டுச் சென்றவனையும் கிறிஸ்துவுக்குள் நடத்திவிட்டு, இருவருமே தங்கள் தலையைத் தானமாய்த் தந்தனர் - அதைத் தொடர்ந்த எழுப்புதலுக்கு விலையாக !*

## ■ பர்த்தலோமேயு:

சீஷர்கள் மிஷினரிகளாய் உலகமெங்கும் வெவ்வேறு பிரதேசங்களுக்கு அனுப்பப்பட, ஆவியானரால் இவர் அனுப்பப்பட்டது முதலாவது துருக்கி, பிறகு இந்தியா, அதின் பின் அர்மீனியா..

கிபி 60ம் ஆண்டின் நாட்கள்..

இந்த மனிதர் பகலில் நூறு முறையும், இரவில் நூறு முறையும் ஜெபிப்பாராம். இவரது ஜெபம் கேட்க தேவதூதர்களும் காத்து நிற்பார்களாம். அந்நாட்களில் இவர் சென்ற இடமெல்லாம் எழுப்புதலின் அற்புத அடையாளங்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, இவர் தன்னில் தானேயும் நடமாடும் அற்புதமாய் வாழ்ந்தாராம். இவரது அங்கியும் காலணிகளும் 26 வருடங்கள் பழமையாய்ப் போகவே இல்லை என்கிறது சரித்திரம்.

கிபி 68.. தன் நாட்களின் எழுப்புதலுக்கு விலையாய் இவர் தந்தது, தோலுரிக்கத் தன் உடலையே ! உயிரோடு தோலுரிக்கப்பட்டுத் தலைகீழாய் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார் பர்த்தலோமேயு.

## ■ நீதிமான் யாக்கோபு :

யாக்கோபு நிருப ஆக்கியோனும் இயேசு கிறிஸ்துவின் சகோதரருமான இவர் ஒரு நாளில் பல முறை எருசலேம் தேவாலயத்துக்குள் தனி மனிதனாய்ப் பிரவேசித்து, ஜனங்களின் பாவ மன்னிப்புக்காக முழங்காலில் விழுந்து கிடப்பார். தமது பரிசுத்த வாழ்க்கையாலும் சாட்சியாலும் "நீதிமான் யாக்கோபு" என்று பெயர் பெற்றிருந்த இவரது முகத்துக்காகவே யூதர்கள் பலர் சபையில் சேர்ந்தனர்.

ஆதிசபை ஆங்காங்கே சிதறடிக்கப்பட்டு வீடுகளில் கூடிக் கூடி இரகசிய சபை நடத்திக் கொண்டிருந்த காலத்தில், பிரதான ஆசாரியனாகிய அன்னாவினால் கைது செய்யப்பட்டு, எருசலேம் தேவாலய உப்பரிகையிலிருந்து தள்ளிவிடப்பட்டு கட்டையால் அடிக்கப்பட்டு உயிர் ஊசலாடிய நிலையிலும், "பிதாவே இவர்களை மன்னியும்.." என்று சொல்லி தன்னையே நிலத்தில் விழுந்து மடிய கோதுமை மணியாய், விலையாய்த் தந்தார் இந்த நீதிமானாகிய யாக்கோபு.

■ **பிலிப்பு :**

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் இவர் மிஷினரியாக அனுப்பப்பட்டது கிரீஸ், பிரிகியா மற்றும் சிரியா நாடுகளுக்கு. தன் சகோதரி மரியம் மற்றும் சக அப்போஸ்தலர் பர்த்தலோமேயுவுடன்.. அங்குள்ள ஹீரோப்போலிஸ் நகரத்தின் கவர்னரின் மனைவி பிலிப்புவின் ஊழியத்தின் மூலம் சுகம்பெற்று இரட்சிக்கப்பட, எழுப்புதலோடு கலவரமும் கைகோர்த்துக்கொண்டது. மிஷினரிகள் மூவரும் சித்ரவதைப்படுத்தப்பட்டாலும் பிலிப்பு மட்டுமே சிலுவையில் தலைகீழாய் அறையப்பட்டார்.

■ **அந்திரேயா :**

ஆரம்பத்தில் இம்மனிதன் செய்தது தன் சகோதரன் பேதுருவை இயேசுவிடம் வழிநடத்தியது மாத்திரமே! ஒரு நாளில் தன் சகோதரன் ஆயிரக்கணக்கானவர்களை நடத்தும் எழுப்புதல் ஒன்றைத் தன் கண்களால் காண்பேன் என்று அறிந்தாரோ? கிறிஸ்துவுக்காகத் தன் தொழிலையும் குடும்பத்தையும் மட்டுமல்ல, கிறிஸ்துவின் அந்தக் கடைசிக் கட்டளை ஒன்றுக்காக இந்த மனிதன் கடந்து சென்றது எத்தியோப்பியா மற்றும் மேற்கு கிரீஸின் பத்ரோயாவுக்கு.. ரோம சாம்ராஜ்யம் பரந்து விரிந்திருந்த அந்நாட்களில் நீரோவின் நீசக் கை பத்ரோயா வரை நீண்டிருந்தது.

நவம்பர் 30, கிபி 70ம் ஆண்டு..

அகேயாஸ் என்ற கவர்னரால் பிடிக்கப்பட்டு, "X" வடிவ சிலுவையில் அதின் வடிவத்துக்கு ஏற்றபடி கால்கள் வலுக்கட்டாயமாய் விரிக்கப்பட்டு, முதுகெலும்பு முறிந்து, கைகள் இரண்டும் தோள்பட்டையிலிருந்து கழன்று, ஆணியடித்தால் உடனடி மரணம் என்பதால் சிலுவையில் கட்டப்பட்ட நிலையில் கதறக் கதற நீண்ட மணி நேரங்கள் அகோர வேதனையில் தன்னையே எழுப்புதலுக்கு விலையாய்த் தந்த அந்திரேயா!

■ **செலோத்தே எனப்பட்ட சீமோன் :**

ஆப்பிரிக்காவுக்குச் சென்ற இவர் பிறகு சிரேனே - லிபியா மற்றும் பெர்சியாவுக்குச் சென்றார். ஆதிசபை நாட்களில் யாராவது சுவிசேஷத்துக்கு செவிசாய்ப்பதில் தயக்கம் காட்டுவது போலிருந்தால், அப்போஸ்தலர்கள் முதலாவது அழைப்பது இவரைத்தான். 15 நிமிடத்தில் யாரையும் கிறிஸ்துவிடம் நடத்தி

விடுவார். ஆப்பிரிக்க மண்ணில் மரம் அறுக்கும் நீண்ட வாளால் இவரை நீள்வாக்கில் அறுத்துக் கொன்றனர்.

**"பாடுகளில்லா பெந்தேகோஸ்தே" என்னும் ஒரு எழுப்புதலையே நாம் கேட்கிறோம்..**
**நமக்கு வேண்டியது, நமது அன்றாட வசதி வாழ்க்கையைத் தொட்டுத் தொந்தரவே செய்யாத ஒரு ஈஸியான எழுப்புதல்..**
**சத்தியமாய் அப்படி ஒன்று சாத்தியமே இல்லை!" என்றார் ரேவன்ஹில்..**
**"இன்றைய தலைமுறை கிறிஸ்தவம் கூட்டத்தை எழுப்புதல் என்றும், கூச்சலை அபிஷேகம் என்றும், கட்டுக்கதைகளைக் கர்த்தருடைய வார்த்தை என்றும் தவறாக எடைபோட்டு அதிலேயே நடைபோடுகிறது.." என்னும் அவரது வார்த்தை உண்மையிலும் உண்மை அல்லவோ?**

**இன்றைய நமது கிறிஸ்தவ சமுதாயம் "எழுப்புதல் எழுப்புதல்" என்று திரும்புமிடமெல்லாம் காட்டுக் கூச்சலிட்டு வந்தாலும், உண்மையான எழுப்புதல் என்றால் என்ன? எழுப்புதல் வரலாறுகளில் ஆங்காங்கே அதற்காக செலுத்தப்பட்ட விலைக்கிரயங்கள் என்னென்ன என்பது இன்று நம்மில் அநேகர் அறியாததே!**

**முதல் நூற்றாண்டு முதல் முந்தாநாள் வரையில் எழுப்புதலுக்காகச் செலுத்தப்பட்ட கிரயங்களை அழுத்தமாய்ப் பதிவு செய்வதே "செந்நீர் தேசம்" என்ற இந்த அத்தியாயத்தின் நமது நோக்கம்..**

**இனி...**

## யூதா ததேயு :

அப்போஸ்தலனாக அழைக்கப்படுமுன் இவர் ஒரு விவசாயியாய் இருந்தார் என்கின்றன நாட்குறிப்புகள். 14ம் நூற்றாண்டின் வரலாற்று ஆசிரியர் நிக்கபோரஸ்,கானாவூர் கல்யாணத்தின் மாப்பிள்ளை இவர் தான் என்கிறார்.

யூதேயா, சமாரியா, இதுமேயா, சிரியா, மெசொப்பொத்தோமியா மற்றும் லிபியாவில் சுவிசேஷம் அறிவித்துக்கொண்டே சென்ற இவர், இறுதியாக எடிஸ்ஸாவிலும் பெய்ரூட்டிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பலமான சாட்சியாய் நிரூபித்து நின்ற போது தடியால் அடிக்கப்பட்டு கோடரியால் வெட்டிக்கொல்லப்படுகிறார் - வருடம் கிபி 65..

### மத்தேயு :

இயேசுவுக்காகத் தனது சுங்க வரித்துறை வேலையை ராஜினாமா செய்தவர், பின்னாட்களில் சென்றது எத்தியோப்பியாவுக்கு ..

ஆரம்பத்தில் பிலிப்பு மூலம் சுவிசேஷமும் ஞானஸ்நானமும் பெற்ற எத்தியோப்பிய மந்திரி தன் தேசத்து ராஜஸ்திரீ கந்தா கேவுக்கு இயேசுவை அறிமுகப்படுத்த, சில ஆண்டுகளுக்குப் பின் மத்தேயுவும் எத்தியோப்பியாவில் அவர்களோடு அந்த ஊழியத்தில் இணைகிறார். தன் கடைசிக்காலத்தில் எத்தியோப்பியாவிலுள்ள நாதயார் என்ற இடத்தில் ஹரிட்டிக்கஸ் என்ற ஆட்சியாளனால் கோவில் கோபுரத்திலிருந்து தள்ளிவிடப்பட்டு தலை வெட்டப்பட்டு, தன்னையே எழுப்புதலின் விலையாய்த் தருகிறார் மத்தேயு.

### மாற்கு :

புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறபடியே..
மாற்கு சுவிசேஷம் எழுதிய மாற்கு..
மாற்கு என்ற யோவான்..பர்னபாவுக்கு இனத்தானான மாற்கு..
ஊழியத்தில் பவுலுக்கு மிகவும் பிரயோஜனமுள்ள மாற்கு..

**பிறந்த இடம் :**
மேற்கு எகிப்திலுள்ள லிபியாவின் பென்ட்டோபோலிஸில் உள்ள சீரேனே..

**பெற்றோர் :**
தகப்பன்-அரிஸ்டோபுலஸ்தாய்-பர்னபாவின் சகோதரி மரியாள் (பேதுருவின் மனைவிக்கு ஒன்று விட்ட சகோதரி)

**படிப்பு :**
தகப்பனின் மரணத்துக்குப்பின் பேதுரு தன் பராமரிப்பில் நல்ல கல்வி(சட்டம்) கொடுத்ததாக வரலாறு.

**மனமாற்ற அனுபவம் :**
தாய் மரியாள், இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக மாற..
தாயின் சாட்சியால் தொடப்பட்டு..பின்னாட்களில் பேதுருவோடு மொழிபெயர்ப்பு ஊழியத்தில் வசனம் கற்று மனம் திரும்பியவன்..

### வரலாற்றுத் துணுக்குகள்:

*பிறந்த இடத்திலிருந்து பெரிய கலவரம் காரணமாக யூதேயாவுக்கு இடம் பெயர்ந்த மாற்குவின் யூத குடும்பம் settle ஆனது கலிலேயாவிலுள்ள கானாவூரில்..*

*தகப்பன் அரிஸ்டோபுலாஸும் மாற்குவும் ஒரு நாள் யோர்தான் நதிக்கரையில் நின்று கொண்டிருந்த போது 2 சிங்கங்கள் கர்ஜித்து ஓடிவர, மாற்கு சிங்கங்களை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்ள..இரண்டும் அதே இடத்தில் செத்து விழ..மகன் மாற்கு மூலம் மனம் திரும்பினார் தகப்பனார்..*

*காலங்கள் கடந்தது..*
*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் படி.. அவரவர் மிஷினரியாய் அனுப்பப்பட  வேண்டிய இடங்களுக்கு சீட்டுப் போட்ட போது.. மாற்கு பேரில் விழுந்தது சீட்டு..ஆப்பிரிக்கா மற்றும் எகிப்துக்குச் செல்ல..*

*தன் முதல் மிஷினரி பயணமாக ஆப்பிரிக்கா மற்றும் எகிப்துக்கு சென்ற மாற்குவின் கைகளால் நடந்தன பலத்த அற்புதங்கள்..*

*வியாதியஸ்தர் குணமாக..குஷ்டரேகிகள் சுத்தமாக..அசுத்த ஆவிகள் விலகிஓட புறஜாதிகள் தங்கள் விக்கிரகங்களை உடைத்தெறிந்து இயேசுவை ஏற்றுக் கொண்டனர்..*

*அங்கிருந்து அலெக்ஸாண்ட்ரியாவுக்கு வந்தார் மாற்கு..*

*நகர வாசலில் காலணிகள் அறுந்து போக.. அதைத் தைக்க அங்கிருந்த செருப்பு தைக்கும் தொழிலாளியிடம் செல்ல..காலணி தைக்கும் போது அது அவன் கையைக் குத்தி இரணமாக்கி விட்டது..கீழே கிடந்த களிமண்ணால் காயத்தைக் குணமாக்கினார் மாற்கு..*
*அலெக்ஸாண்ட்ரியாவின் முதல் கனி அந்த செருப்பு தைப்பவர்..*
*இரண்டு வருஷத்துக்குள் பட்டணத்தில் அநேகர் மனம் திரும்ப..*

அங்குள்ள பெரிய அத்திமரத்தின் கீழே சந்திரனை வணங்கிக் கொண்டிருந்த ஜனங்கள் பிடித்தார்கள் மாற்குவை..

நிரூபி உன் இயேசுவை..

சரித்திரம் சொல்கிறது..
மாற்கு ஜெபித்தார்..
பகல் இரவானது..நிலவு நடுவானில் நின்று ஜனங்களிடம் பேசியது..நான் ஒரு சிருஷ்டி..தேவனல்ல..
இந்த மாற்குவின் இயேசுவே சிருஷ்டிகர்..
அவரையே தொழுது கொள்ளுங்கள்..
மிகப் புகழ்பெற்ற அந்த அத்திமரம் வேரோடு சாய்ந்தது..

ஆனால் தேவனிடம் திரும்ப வேண்டிய கூட்டம்.. மாற்குவைப் பிடித்து குதிரை வாலோடு இறுகக் கட்டி குதிரையை அடித்து ஓட விட்டது..நாள்முழுவதும் அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தில்..

இரவானது..
சிறையில் அடைபட்ட மாற்குவை சந்திக்க இயேசு வந்தார்..
திடப்படுத்தினார்..

அடுத்த நாள் அதே போல குதிரை வாலில் கட்டப்பட்ட மாற்கு தெருத்தெருவாய் உடல் கந்தல் கந்தலாய்ப் போகுமட்டும் இழுத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்..

எஞ்சியிருந்த சரீரத்தின் பகுதிகளை எடுத்துப் புதைத்தனர் அங்குள்ள சீஷர்கள்.

## தோமா :

இந்தியக் கிறிஸ்தவர்கள் மறக்க முடியா தோமா. முதலில் பார்த்தியர், பெரிசியர் மத்தியில் ஊழியம் செய்த தோமா, பின்பு வந்தது இந்தியாவின் பஞ்சாபுக்கு. பிறகு மறுபடியும் பாலஸ்தீனா போய்விட்டுத் திரும்பியது தென்னிந்தியாவின் கேரளத்துக்கும் தமிழகத்துக்கும். மற்ற வரலாறு தென்னிந்தியக் கிறிஸ்தவர்கள் அறிந்ததே! தாமஸ் மவுண்ட் என்ற பரங்கிமலையில் ஈட்டியால்

குத்தப்பட்டு, பிறகு எரியும் சூளையில் தூக்கியெறியப்பட்டு இந்திய எழுப்புதலுக்கு ஆரம்ப வித்தும் விலையுமானார் அப்போஸ்தலன் தோமா.

## பேதுரு :

நீரோ காலத்தின் ரோம் நகர்..
“சீமோனே, நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் " என்ற இரட்சகரின் தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேற, தலைகீழாய் சிலுவையில் அறையப்படுகிறார் பேதுரு.

**லூக்கா :** லூக்கா சுவிசேஷத்தையும் அப்போஸ்தல நடபடிகளையும் எழுதிய வேதத்திலுள்ள ஒரே புறஜாதி எழுத்தாளர்..
**பிறப்பிடம் :** சிரியாவிலுள்ள அந்தியோக்கியா
**இனம் :** கிரேக்கன்
**படிப்பு :** மருத்துவம்
**பொழுதுபோக்கு :** ஓவியம் வரைதல்
**குடும்பம் :** மணமாகாதவர்
**இரட்சிப்பு :** அப்.பவுல் மூலம் மனம் மாறியவர் என்று கருத்து
**ஆரம்ப ஊழியம் :** மக்கெதோனியாவில் 7ஆண்டுகள்
**மிஷினரி ஊழியம் :** பவுலின் மிஷினரி பயணங்களில் உடன் சென்றது
**இறுதி வருடங்கள் :** பவுல் கைது செய்யப்பட்டு ரோமாபுரிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது பவுலின் மரணம் வரை உடனிருந்து பராமரித்தவர் பவுலின் வழிநடத்துதலின் பேரில் அவருடன் இருந்த நாட்களில் லூக்கா சுவிசேஷமும் அப்போஸ்தல நடபடிகளும் எழுதியதாக வரலாறு..

பிறகு இத்தாலி,தல்மாத்தியா, மற்றும் அகாயாவில் ஊழியம்

**மரணம் :** கடைசியாக கிரீஸுக்குத் திரும்பியவர் அகாயாவில் விக்கிரக ஆராதனை பூசாரிகளால் 84 வயதில் ஒரு ஒலிவ மரத்தில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார்.

### பர்னபா :

ஆறுதலின் மகனாகிய பர்னபாவின் மேல் ஆண்டவர் வைத்த நம்பிக்கை மட்டுமல்ல, அப்போஸ்தலர்கள் வைத்த நம்பிக்கையும் பொய்த்துப் போகவில்லை. தன் நிலபுல உடைமைகள் எல்லாவற்றையும் விற்று அவர்கள் பாதத்தில் கொண்டு வந்து வைத்தான் சீப்புருவாசியாகிய லேவியனான பர்னபா. பர்னபாவும் பவுலும் கமாலியேலின் பல்கலைக்கழகத்தில் ஒன்றாய்ப் படித்தார்கள் என்று ஈஸ்டன் என்பவர் தன் வேதாகம அகராதியில் சொல்கிறார்.

இரண்டாம் மிஷினரிப் பயணத்தில் பவுலிடமிருந்து பிரிந்து மாற்குவை அழைத்துக்கொண்டு சீப்புருதீவு வந்த பர்னபா, தன் பின்னாட்களில் ஊழியங்களை சைப்ரஸ் தீவு மற்றும் சீரியா பகுதிகளில் தொடர்ந்ததாக வரலாறு. கடைசியாக சிரியா மற்றும் சியில் அவருடைய ஊழியத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட பொறாமை, கைகலப்பாய் மாற, யூதர்கள் பர்னபாவை ஜெப ஆலயத்துக்கு வெளியில் இழுத்துச் சென்று கடும் சித்ரவதைக்கு உள்ளாக்கிக் கல்லெறிந்து கொல்கின்றனர்.

### பவுல் :

"மரணத்துக்குக் குறிக்கப்பட்டவனும், உலகத்துக்கு வேடிக்கையானவனும், கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரனும், பசியுள்ளவனும், தாகமுள்ளவனும், நிர்வாணியும், குட்டுண்டவனும், தங்க இடமில்லாதவனும், உலகத்தின் குப்பையும், துடைத்துப் போடப்படும் அழுக்கைப் போன்றவனும், அதிகமாய்ப் பிரயாசப்பட்டவனும், அதிகமாய் அடிபட்டவனும், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவனும், அநேகந்தரம் மரண அவஸ்தையில் அகப்பட்டவனும், 39 அடியாக ஐந்து முறை அடிபட்டவனும், மூன்று முறை மிலாறுகளால் அடிபட்டவனும், ஒரு முறை கல்லெறியப்பட்டவனும், மூன்று முறை கப்பல் சேதத்தில் அகப்பட்டவனும், அநேகந்தரம் பிரயாணம் பண்ணியவனும், ஆறுகளாலும், சுய ஜனங்களாலும், அந்நிய ஜனங்களாலும், கள்ளச் சகோதரராலும் என்னென்ன மோசங்கள் உண்டோ அத்தனையையும்

அனுபவித்துத் தீர்த்த அப்போஸ்தலனாகிய பவுல், எருசலேமில் கைது செய்யப்பட்டுக் கொண்டுபோகப்பட்டது ரோம் நகருக்கு, ராயனுக்கு முன்பாக நிற்க..

ஆரம்பத்தில் சிறைக் கைதியாக இல்லாவிட்டாலும்..
விசாரணைக் கைதியாக வீட்டுக் காவலில் 2 வருடம் ஒரு ரோம சிப்பாயுடன் கட்டப்பட்டு 24×7 காவலில் இருந்த பவுல்..மற்றவர்களை சந்தித்துப் பேச அனுமதிக்கப் படுகிறார்..

விசாரணை முடிந்து விடுவிக்கப்பட்டவர்..
சென்றது..தான் மிகவும் விரும்பிய ஸ்பெயின் நாட்டுக்கு..நான்காவது மிஷினரிப் பயணமாக..

அங்கிருந்து துரோவாவுக்கு சென்று தீத்துவை சந்தித்தவர்..பிலமோன் மற்றும் ஒநேசிமுவுடன் சில நாட்கள் சந்தோஷமாய் இருந்துவிட்டு..எபேசுவுக்குச் சென்று தீமோத்தேயுவுடன் தங்குகிறார்..

இந்த விடுதலை அதிக நாட்கள் நீடிக்கவில்லை..

நீரோ காலத்தில் மறுபடியும் கைதுசெய்யப்பட்டு துரோவாவிலிருந்து ரோமுக்கு சங்கிலிகளால் கட்டி இழுத்து வரப்படுகிறார் பவுல்..

ரோமுக்குக் கொண்டு வரப்பட்ட பவுல் அடைக்கப்பட்டது மேமரின்ட்டைன் ஜெயில் என்ற பாதாளக் கிடங்கில்..

இன்று நம் காலத்து ஜெயில்களைப் போல் அல்ல அன்றைய ரோம சிறைச்சாலைகள்..

கேப்பிட்டோலின் குன்றுகள் என்ற மலை அடிவாரத்தில் கிமு 640-616ல் அர்க்குஸ் மர்ஷியஸ் என்ற ரோம மன்னனால் கட்டப்பட்ட பாதாளக் கிடங்கு இது..

தரைக்குக் கீழே 12 அடி ஆழத்தில் தலைக்கு மேல் க்லோவா மேக்ஸிமா என்ற ரோம் நகரின் பாதாளச் சாக்கடை ஓட..அந்தப் பாதாளச் சாக்கடைக் குழாய்க்குக் கீழே 6.5 அடி உயரமும் 30×22 அடி அளவில்

கட்டப்பட்ட இருண்ட..நாற்றம் எடுத்த..எப்போதும் ஈரமாகவே வைக்கப்பட்டிருக்கும் கோணல் மாணலான போனால் திரும்பி வர முடியாத மரணக் கிடங்கு..

தரையில் உள்ள சிறு துவாரம் மூலமாகக் கைதிகள் பாதாளச் சிறையில் தள்ளப்படுவார்கள்..

இங்கிருக்கும் இரும்புக் கதவு வழியாக டைபர் நதியில் செத்த கைதிகள் எறிந்து விடப்படுவதுண்டு..

பேதுருவும் பவுலும் இங்கே தான் வைக்கப்பட்டிருந்ததாக வரலாறு.. இங்கிருந்து தான் தன் கடைசி நிருபங்களை எழுதுகிறார் பவுல்.. கடைசியாக எழுதியது தீமோத்தேயுவுக்கு எழுதிய மிக அருமையான இரண்டாம் நிருபம்..

"நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்..நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.."  (4:6)

மரணத்துக்கு சில மாதங்களுக்கு முன் எழுதப்பட்ட வரிகள் இவை.. டஞ்சன் ஜெயிலில் நாட்கள் நகர்கின்றன..

ஒரு நாள்..
ஜூன் மாத ஆரம்பமாய் இருக்கலாம் என்று சொல்கிறார்கள்..
சிறைக்கதவு திறக்கப் படுகிறது..
வெளியே கொண்டு வரப்படுகிறார் பவுல்..

கொலையாளிகள் முன் செல்ல..வயதான தேவ மனிதன்..நகரத்துக்கு வெளியே சங்கிலிகள் பிணைக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப் படுகிறார்..கொலைக் களத்துக்கு..

நகரத்துக்கு பல மைல்கள் தள்ளி..ஆஸ்ட்டியன் ரோடு என்ற இடம்..
கழுத்துப் பலகை வைக்கப் படுகிறது..
"என் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்க விரும்புகிறேன்"என்றாரே..

பலகையில் தலையை சந்தோஷமாய் நீட்டிக் கொடுக்க..கோடரியோ.. வாளோ ஓங்கப் படுகிறது..

“அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதைக் காட்டுவேன்"என்று தமஸ்கு வீதியில் பிடிபட்ட போது சொன்னாரே..

இதோ..இந்த ஆஸ்டியன் வீதியில்.. தலை தரையில் உருண்டு விழ.. அப்போஸ்தலனின் போராட்டம் ஜெயமாய் முடிகிறது..

சரித்திரம் சொல்கிறது..
லூசினா என்ற ரோம விசுவாசி ஆஸ்டியன் ரோட்டுக்கு அருகிலுள்ள தன் நிலத்தில் அப்போஸ்தலனின் உடலை அடக்கம் பண்ணுகிறார்..

## தீமோத்தேயு

எபேசுவிலே சபையைக் கண்காணிக்கும் முதல் மூப்பராக நியமிக்கப்படுகிறார். இளம் ஊழியனான தீமோத்தேயு. தேவனுடைய வீட்டில் நடக்க வேண்டிய வழியை அவனுக்குக் கற்றுத்தரும்படி இரண்டு நிருபங்களை, முதல் கடிதத்தை மக்கெதோனியாவிலிருந்தும், இரண்டாவது கடிதத்தைத் தன் கடைசி நாட்களில் ரோம் நகர் சிறையிலிருந்தும் எழுதிய பவுல், தன் மரணத்துக்கு முன்பு எப்படியாவது தன் உத்தம குமாரனைப் பார்க்க விரும்புகிறார். பவுலின் மரணத்துக்கு முன் தீமோத்தேயு அவரைச் சந்தித்திருப்பார் என்று குறிப்புகள் சொல்கின்றன.

பவுலின் மரணத்துக்குப் பின் பல வருடங்கள் எபேசுவிலே ஊழியம் செய்த அவர், எபேசுவின் தேவியாகிய தியானாளின் திருவிழாவில் பெரிய கூட்டத்தின் நடுவே நின்று இயேசுவே மெய்யான தேவன் என்று வைராக்கியமாய் முழங்க, கூட்டம் அவரைக் கட்டையால் அடித்தே கொன்றுவிடுகிறது.

## ஒநேசிமு:

ரோம ராயன் டொமிஷியனின் காலம்.. எபேசுவிலிருந்து ரோமுக்கு இழுத்து வரப்பட்டு இரண்டு தொடை எலும்புகளும் முறிக்கப்பட்டு, நெஞ்சு கல்லால் நசுக்கப்பட்டு தன்னையே விலையாய்த் தருகிறார் ஒநேசிமு..பின்னும் நான் என்ன சொல்லுவேன்? எப்பாப்பிரா, அன்றோனிக்கு.. யூனியா..சீலா என்ற சில்வானு.. யூதா என்ற பர்சபா.. மற்றும் ஒநேசிப்போரு என்பவர்களையும் இன்னும் எழுப்புதல் சரித்திரத்தைத் தங்கள் இரத்தத்தால் எழுதிய சாட்சிகளையும் குறித்து நான் விவரம் சொல்லவேண்டுமானால் காலம் போதாது (எபி 11:32).

### "எப்பாப்பிரா"

சபைகளுக்காய் மிகுந்த ஜக்கிரதையாய் இருந்து தன் ஜெபங்களில் எப்போதும் போராடும் இந்த கொலோசேயின் ஜெபவீரன்..
நீரோ காலத்தில் கொடூரமான முறையில் கொல்லப்பட்டான்..

### அன்றோனீக்கு & யூனியா :

பவுலுடன் காவலில் இருந்த இவர்கள் இருவரும் கற்பனைக்கு எட்டாத முறையில் வதைக்கப்பட்டு கொல்லப்பட்டவர்கள்..

### சில்வானு என்ற சீலா :

பவுல் மற்றும் பர்னபாவுடன் ஊழியத்தில் தோளோடு தோள் நின்ற பிலிப்பி நகரைச் சேர்ந்த இவன்..
கசையால் அடிக்கப்பட்டு நீரோ மன்னன் காலத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவன்..

### யூதா என்ற பர்சபா :

சிறையில் கால்கள் தொழுவத்தில் மாட்டப்பட்டு அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டவன்..

### ஒநேசிப்போரு :

எபேசுவைச் சேர்ந்த இவன் ரோம் நகருக்குச் செல்லும் போது வெகு ஜாக்கிரதையாய் பவுலைத் தேடிக் கண்டுபிடித்தவன்..
தானும் பிடிபடுகிறான்..

அட்ரியன் என்ற கவர்னரின் காலத்தில் ஒநேசிப்போரும் அவன் உடன் ஊழியன் போர்ப்பிரி என்பவனும் வாரினால் அடிக்கப்பட்டு..

அடங்காக் குதிரைகள் வாலில் கட்டப்பட்டு உடல் நார் நாராய்க் கிழிந்து போகுமட்டும் தெருவெல்லாம் இழுத்துச் செல்லப்பட்டு..
கொல்லப்பட்டான்..
தகப்பனே..
எங்கள் அன்பையும் கிரியைகளையும் மறவாத நீதியுள்ளவராய் நீர் இருக்கும் போது..
ஊழியத்தில் தன்னுடன் பிரயாசப்பட்ட ஒவ்வொருவரையும் பேர் பேராக நினைவில் வைத்து மறவாமல் வாழ்த்த ஒரு முழு அதிகாரமும் (ரோமர் 16) எழுதி வைத்த பவுல் இருக்கும்போது..

நாங்கள் மட்டும் இந்த இரத்த சாட்சிகளான விசுவாச வீரர்களை மறப்பது எப்படி நியாயம் ஐயா ?

தகப்பனே..
அவர்கள் வரிசையில் நாங்களும் எண்ணப்பட எங்களையும் தகுதி உள்ளவர்களாக்கும்!
ஆமென்..

அப்போஸ்தலர்களும் அவர்களுக்கு அடுத்த தலைமுறையினரும் தவிர, அதற்கு அடுத்த இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவம் கண்டிருந்த எழுப்புதலுக்குக் கிரயமாய்த் தங்கள் கண்ணீரையும் வியர்வையையும் இரத்தத்தையும் ஊற்றிக்கொடுத்தவர்களின் பட்டியலில் முக்கிய இடம் பெறுபவர்கள் பெர்ப்பெச்சுவா-பெலிசிட்டாஸ், தியோடரா - திதிமு, தீமோத்தி - மௌரா, பெஸில்-பொட்டாமியானா மற்றும் பிஷப் போலிகார்ப், அந்தியோகியா இக்னேஷியஸ், தத்துவஞானி ஜஸ்டின், ஸேச்சுரேனியஸ் போன்றவர்கள்..

**மூன்றாம் நூற்றாண்டில் கான்ஸ்ட்டான்ட்டைன் மன்னனின் காலத்திற்குப் பின் கிறிஸ்தவம் ரோம சபையாகி அதன் பின் போப்பாண்டவர்களின் கைக்குச் செல்கிறது.**

**இப்போது நான்காம் நூற்றாண்டு..**

## கலேரியஸ்

டயோக்ளீஷியனின் நாட்களில் நடந்து கொண்டிருந்த வன்முறை ஒருபக்கம் இருக்க..

அவனது வளர்ப்பு மகனும் பட்டத்து இளவரசனுமான கலேரியஸ்..தன் தாயின் தூண்டுதலின் பேரில் கிறிஸ்தவர்களைத் தேசத்திலிருந்து துடைத்துப் போட தன் தகப்பனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டான்..

நாள் குறிக்கப்பட்டது- கிபி 303 பிப்ரவரி 23..

டயக்ளீஷியனின் கிழக்கு ராஜ்யத்தின் தலைநகர் நிக்கோமீதியா..
அதிகாலை நேரம்..

போலீஸ் IGயும் அவனுக்குக் கீழிருந்த போலீஸ் படையும் நுழைந்தது..அங்கிருந்த பெரிய கிறிஸ்தவ ஆலயத்துக்குள்..

கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கி..
வேத புத்தகங்களையும் அங்கிருந்த லைப்ரரியையும்
தீ வைத்தனர்..

கிறிஸ்தவத்தின் முடிவை ஆரம்பித்து வைக்கும் அந்த முதல் நாள்
சம்பவங்களை தாங்களே நேரில் பார்வையிடச் செல்கின்றனர்..
டயக்ளீஷியனும் கலேரியசும்..

வெறும் புத்தகங்களைக் கொளுத்துவதைக் கண்டு வெறுப்பேறிய
டயக்ளீஷியன்..
"நாட்டிலுள்ள ஆலயங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கி
கிறிஸ்தவன் ஒருவன் விடாமல் கைது செய்" என்று
கட்டளையிடுகிறான்.

அவனது கட்டளையின் நகல் பொது இடத்தில்
ஒட்டப்படுகிறது..இதைக் கண்ட துணிச்சலான ஒரு கிறிஸ்தவர்..
அதைக் கிழித்தெறிய..
அவர் கைது செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்படுகிறார்..

நிக்கோதேமியாவில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் கைது
செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான்..

கலேரியஸ் தானே அரண்மனையைத் தீக்கொளுத்தப்
பண்ணி..பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் போட்டு..
கலவரத் தீயை இன்னும் ஊதிவிட..

அந்த நகரில் ஆரம்பித்த கலவரம்..தேசம் முழுவதும் பற்றி
எரிய..அடுத்த பத்து வருடங்கள் அந்த உபத்திரவத் தீயை
அணைக்கவே முடியவில்லை..

ஆணென்றும் பெண்ணென்றும் வயதொன்றும் பாராமல்..
ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அந்தப் பத்து ஆண்டுகளில் கொன்று
குவிக்கப்பட்டனர்..

"கிறிஸ்தவன்" என்ற பெயரே ரோமப் பேரரசில் வெறுப்பைக் கக்கும் பேராயிற்று..அவர்களுக்கு இரங்க ஆளில்லை..

புயலோ பூகம்பமோ கொள்ளை நோயோ..
எது நடந்தாலும் பலிகடா கிறிஸ்தவன் தான்..
அவர்கள் பட்ட வதையும் வேதனையும் கற்பனை கடந்தது..

வீடுகளோடு முழுக்குடும்பங்கள் சாம்பலாக்கப்பட்டன..
நான்கைந்து பேராய் சேர்த்து சேர்த்துக் கட்டப்பட்டு அவர்கள் உடலில் பாராங்கல் கட்டப்பட்டு மர்மரா கடலில் மூழ்கடிக்கப் பட்டனர்..

தொழுமரம்..முள்சாட்டைகள்..தீவைத்தல்..
பட்டயம்..குறுவாள்..சிலுவைகள்..விஷம்..பட்டினி போடுதல்-இவை எல்லாம் கிறிஸ்தவர்களைத் தனித்தனியாகவும் மொத்த மொத்தமாகவும் கொல்ல உபயோகப்படுத்தப்பட்ட உபகரணங்கள்..

பிரிகியா என்ற கிறிஸ்தவர்கள் நிறைந்த பட்டணம் முழுவதும் தீக்கொளுத்தப்பட்டது..
அங்கு கொல்லப்படாத கிறிஸ்தவர்களே இல்லை..

"இதற்கு முடிவே இல்லையா?"
என்று அந்தந்த மாநில கவர்னர்கள் ராயனுக்கு எழுத..
ரோம சாம்ராஜ்யத்தின் உபத்திரவக் காலம் முடிவு பெறும் காலம் நெருங்கியது..

ஆனாலும் மீந்தவர்கள் நிலை உயிரோடு செத்த நிலை..

சிலர் காது வெட்டப்பட்டு..சிலர் மூக்கு அறுபட்டு..சிலர் கண் பிடுங்கப்பட்டு.. பலர் எலும்பு முறிக்கப்பட்டு..

கிறிஸ்தவன் என்று அடையாளம் காணப்படும்படி உடலின் தீக்காயங்களோடு..

சொல்லப்பட்ட இவை அனைத்தும்..நடந்து முடிந்த கோர தாண்டவத்தின் ஒரு சிறு பகுதி தான்..

ஆனால் வெளிவராத..
எழுதப்படாத..
சொல்லப்படாத இரத்தக் கதைகளுக்கும் அவல மரணங்களுக்கும் அளவே இல்லை..

அவைகள் பரலோகத்தின் நாளாகமப் புத்தகத்தில் அல்லவோ இருக்கிறது!

## வில்லியம் லித்கோ

1580 ல் பிறந்த வில்லியம் லித்கோ ஒரு ஆங்கிலேயர்..

பயணம் செய்வதில் அதிக நாட்டம் கொண்டிருந்த லித்கோ..எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியாவுக்குச் செல்லும் வழியில் 9 பேர் வழிமறித்து அவர் மேல் ஒரு கறுப்பு அங்கியை வீசி அவரை ஸ்பெயினில் உள்ள மலகாவுக்கு இழுத்துச் செல்கின்றனர்..

"நீ ஒரு ஆங்கிலேய உளவாளி" என்பது அவர் மேல் சாட்டப்பட்ட குற்றம்..

அந்நாட்களில் ஸ்பெயின் ஒரு ரோமன் கத்தோலிக்க நாடாக இருந்தது..

"நான் ஒரு டூரிஸ்ட் தான்" என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும்..தான் ஒரு உளவாளி தான் என்பதை ஒப்புக் கொள்ள வைக்க கடுமையான டார்ச்சருக்கு உள்ளாக்கப்பட்டார் வில்லியம் லித்கோ..

கடைசியாக..
"போப்பாண்டவரின் ஆளுகையை நீ ஏற்றுக் கொள்கிறாயா?" என்று கேட்கப்பட்ட போது..லித்கோ சொன்னார்..

"நான் செய்யாத குற்றத்துக்காக என்னை உளவாளி என்று சொல்லும் நீங்கள்..என்னை என் வேதத்தையும் மறுதலிக்க வைப்பீர்களோ?
நான் செத்தாலும் சாகிறேன்"
என்று ஒப்புக்கொடுத்தார்..

*“நாங்கள் உன்னை உளவாளி என்று தான் நினைத்தோம்..ஆனால் உன் புத்தகங்களும் உன் வேதமும் உன்னை போப்பாண்டவரின் விரோதி என்றே காட்டுகிறது..*

*நீ உளவாளியைக் காட்டிலும் மிக மோசமான தேச துரோகி" என்று சொன்ன கோர்ட்..*

*"இன்னும் எட்டு நாட்கள் தவணை தருகிறோம்..உன் முடிவை மாற்றிக் கொண்டு  ரோம சபையின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படி அல்லது உன் முடிவை நீயே நிர்ணயிப்பாய்" என்று சொல்லியது..*

*8 நாட்கள் முடிந்தன..*
*கடைசியாக ஒரு தவணை கொடுக்கப்படுகிறது..*
*"உன் முடிவை மாற்றிக் கொள் லித்கோ..நீ ஏன் சாக வேண்டும்?"*

*லித்கோ சொன்னார்..*
*"சாவோ நெருப்போ..*
*எதற்கும் எனக்குப் பயமில்லை..நான் எதற்கும் தயார்.."*

*அன்று இரவு 11 வகையான வித்தியாச வித்தியாசமான டார்ச்சர்களுக்கு உட்படுத்தப்படவும்.. அதையும் மீறி உயிரோடிருந்தால்..*
*வரும் ஈஸ்டருக்குப்பின் கிரனடா என்ற இடத்தில் எரித்துக் கொல்லப்படவும் தீர்ப்பாகியது..*

*அன்றிரவு இரத்தத்தை உறைய வைக்கும் கடுமையான சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார் லித்கோ..*

*லித்கோ ஸ்பெயின் நாட்டினராய் இல்லாமல் ஒரு ஆங்கிலேயராய் இருந்தபடியால்..அவருக்கு நடந்தவை யாவும் மிக ரகசியமாகவே நடத்தப்பட்டன..*

*ஆனால் அந்த நகர மேயரின் வீட்டில் இரவு விருந்தில் லித்கோவைப் பற்றிப் பேசிக்கொள்ளப்பட்ட காரியங்கள்..ஒரு வேலைக்காரப் பையன் மூலம் வெளியே கசிந்து..*

*விஷயம் ஆங்கிலத் தூதரகம் வரை சென்று பெரிதாக..சர்.வால்ட்டர் ஆஸ்ட்டன் என்ற ஆங்கிலத் தூதரக உயரதிகாரி..*

*ஸ்பெயின் மன்னனிடம் பேசி..லித்கோ விடுதலை செய்யப்பட்டார்..*

*இரண்டு மாதங்களுக்குப்பின் லித்கோ பாதுகாப்பாக இங்கிலாந்தில் உள்ள டெட்போர்டு துறைமுகம் வந்து சேர்ந்தாலும்..*

*அவரது இடதுகை அவர் வாழ்நாள் முழுவதும் செயல்பட முடியாததாகவே ஆகிப்போனது..*

## வால்டென்செஸ்

*கிபி 1173..*

*பிரான்ஸ் நாட்டு லியோன் நகரைச் சேர்ந்த "பீட்டர் வால்டோ" என்ற செல்வந்தரான வியாபாரி கர்த்தரிடத்தில் மனந்திரும்பி தன் சொத்து சுகங்களை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு..வேதத்தை வாசிக்கவும் வேதத்தை பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துத் தன் நாட்டு ஜனங்களுக்குப் போதிக்கவும் ஆரம்பிக்கிறார்..*

*அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்கின்றனர்..*
*இவருக்குப் பின்சென்றவர்கள்*
*"வால்டென்செஸ்"என்று அழைக்கப்பட்டனர்..*

*முதலில் தன் முயற்சிகளுக்கு போப்பாண்டவர் மற்றும் ரோமத் திருச்சபையின் அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்த வால்டோ..*

*அவரது தீவிர போதனை காரணமாக துரோகி என்று முத்திரை குத்தப்பட்டு சபையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்..*

போப்பாண்டவரின் தண்டனையைப் வால்டோ பெரிதாக பொருட்படுத்திக் கொள்ளாவிட்டாலும் அவரது ஆதரவாளர்கள் கடுமையாய்த் தாக்கப்பட்டதால் அவர்கள் ஊரைவிட்டு வெளியேற வேண்டிய நிலையானது..

வெளியேறிவர்கள் பொகேமியா..லொம்பார்டி போன்ற பிரான்ஸின் பல பகுதிகளில் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது..

சிதறப்பட்ட அவர்கள் தேவனுடைய வார்த்தையில் எவ்வளவு தேறியிருந்தார்கள் என்றால்..அவர்களில் படிப்பறிவு இல்லாத கிராமவாசிகள் கூட யோபுவின் புத்தகம் முழுவதையும் மனப்பாடமாய்ச் சொல்வார்களாம்..

மற்றவர்கள் முழு புதிய ஏற்பாட்டையும் பாராமல் சொல்லும் அளவுக்கு தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு இனிமையாய் இருந்தது..

கிபி 1211..
"வால்டென்செஸ்" சபையின் 80 பேர் பிடிக்கப்பட்டு போப்பாண்டவரின் நீதிமன்றத்தில் மரணதண்டனை பெற்று ஸ்ட்ராஸ்போர்க் என்ற இடத்தில் எரித்துக் கொல்லப்படுகிறார்கள்..

அவர்களை மிக மோசமாக சித்ரவதைப்படுத்திய காவலன் ஒருவன் அவர்களைப் பற்றி சாட்சி கொடுக்கிறான்..

"நிச்சயமாகவே பரிசுத்தத்திலும் நீதியிலும் உண்மையிலும் இந்த "வால்டென்சஸ்" போன்றவர்கள் யாருமில்லை.."

பீட்டர் வால்டோ கடைசிவரை கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஊழியம் செய்து 1218ல் மரிக்கிறார்..

அவரைப்பின்பற்றியவர்கள் அடுத்த 400 ஆண்டுகள் போப்பாண்டவர்களால் பட்ட உபத்திரவங்களுக்கு அளவே இல்லை..

முக்கியமாக 1545ல் நடந்த பயங்கர உபத்திரவம் சொற்களுக்கு அப்பாற்பட்டது..

கடைசியாக..1559ல் ட்யூக் சவாய் காலத்தில் பெரிய விடுதலையை தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார் -

ஆனால் அதுவரை அவர்கள் பொறுமையாய் சகித்து வந்தது.. தலைமுறை தலைமுறையாகக் கட்டுகளும் சித்ரவதைகளும் கொடுமைகளுமே..

## ஸேச்சுர்னியஸ்

ஸேச்சுர்னியஸ் -பரி.பேதுருவுடன் ரோம் நகருக்குச் சென்றவர்..

அந்த நாட்களில் பேதுரு அநேகரை சுவிசேஷகர்களாக மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்புகிறார்..

ஸேச்சுர்னியஸ் பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியான தௌலோஸ் என்ற இடத்துக்கு தன் உதவியாளர்கள் இருவருடன் அனுப்பப் படுகின்றார்..

விக்கிரகங்கள் நிறைந்த அந்தப் பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கித்தபோது அங்கிருந்த ஊமையான விக்கிரகங்கள் செயலிழந்து போகின்றன..

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அநேக அற்புதங்கள் நடக்கின்றன..

அவற்றுள் மிக முக்கியமாக..குஷ்டரோகம் முற்றிப் போன ஒரு வயதான பெண் முற்றிலும் குணமாக்கப்படுகிறாள்..

அநேகர் விடுதலையாக்கப் படுகின்றனர்..சிலர் தாமாக முன்வந்து ஞானஸ்நானம் பெறுகின்றனர்..

பட்டணம் கிறிஸ்துவின் பக்கம் திரும்புவதைக் கண்ட ஒரு கூட்டம் இவர்களுக்கு விரோதமாய் எழும்ப..

ஒரு திருவிழா நாளில் நகரின் நடுவே மலையின் மேல்..
விக்கிரகக் கோயில் வளாகத்தில் மக்கள் கூடுகின்றர்..

கோயில் நடுவே பெரிய பலிபீடம்..ஒரு காளை பலியிடப்பட
காத்திருக்கிறது..

இதற்குள் யாரோ ஸேச்சுர்னியஸைக் கண்டுபிடித்துவிட..
மலைக்கு மேலே இழுத்து வரப்படுகிறார் ஸேச்சுர்னியஸ்..

பலியிடக் கட்டப்பட்டிருந்த அதே காளையின் வாலில் அவரது இரு
கால்களும் கட்டப்பட்டு..மலை உச்சியிலிருந்து காளை அடித்து
விரட்டப்படுகிறது..

மலை உச்சியிலிருந்து கோயில் படிக்கட்டுகள் வழியே
காட்டுத்தனமாய் ஓடிய காளையின் வாலோடு கட்டப்பட்டிருந்த
ஸேச்சுர்னியஸின் உடல் கீழே வருவதற்குள் சின்னாபின்னமாகிறது..

சரித்திரம் சொல்கிறது..
அவரது தலை பிளந்து மூளை சிதறியது என்று..

இறுதியாக..
இறந்த அவரது உடலை எடுத்துச் செல்ல யாருக்கும் துணிவில்லாமல்
போன நிலையில்..

இரண்டு விசுவாசி பெண்கள் தைரியமாய் முன்வந்து அவரது சரீரத்தின்
எஞ்சிய பாகங்களை ஒரு குழியில் புதைக்கின்றனர்..

**ஸேச்சுர்னியஸ்-தௌலோஸ் நகரின் பிஷப்..**

## ஜாண் விக்ளிஃப்

கிபி 1371..

மூன்றாம் எட்வர்ட் மன்னரின் காலத்தில் இங்கிலாந்தின்
யார்க்கைஷயரில் பிறந்த ஜாண் விக்ளிஃப்..

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் இறையியல் வல்லுநர்..

படித்தவர்கள் மிகக்குறைந்தவர்கள் இருந்த தன் காலத்தில் தத்துவத்திலும் மதம் சார்ந்த துறையிலும் மிகவும் கற்றுத் தேர்ந்த ஜாண் விக்ளிஃப்..

அந்த நாட்களின் கிறிஸ்தவ நிலை பரிதாபம்..
கிறிஸ்துவின் பெயரை அறிந்திருந்தனர் கிறிஸ்தவர்கள்..

ஆனால் அவரது உபதேசத்தை அறிந்தவர்கள் மிகச்சிலரே..

விசுவாசம்..
வாக்குத்தத்தம்..
தேவ கற்பனைகள்..
கிறிஸ்து தரும் இரட்சிப்பு..
மனிதனின் பலவீனம்..

பரிசுத்த ஆவி..
விசுவாசத்தால் வரும் நீதி..கிறிஸ்துவுக்குள் வாழும் கிறிஸ்தவன் அனுபவிக்கும் விடுதலை..

இவைகளில் ஒன்றாகிலும்
சபைகளில் சொல்லித்தரப்படவில்லை..

ஆனால் அவைகளுக்கு மாறாக..நடந்ததெல்லாம் வெளிப்பிரகாரமான பக்தி ஆராதனையும் மனிதப் பாரம்பரியங்களுமே..

தன் பாவ மன்னிப்பு..
உண்மையான மனசமாதானம் சந்தோஷம்
இரட்சிப்பு..இவைகளை அடைய ஒரு சாதாரண கிறிஸ்தவன் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல..

சத்தியம் இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒரே காரணத்தால் பாரம்பரியத்தின் இருளுக்குள் மூழ்கிப் போனது கிறிஸ்தவம்..

பாமர ஜனம் வேதத்தை அறியாமல் ரோமன் கத்தோலிக்க குருக்கள் சொல்லிக் கொடுத்த வெற்று வார்த்தைகளை மந்திரமாய் சொல்லிக் கொண்டிருந்தது..

இப்படிப்பட்ட காலத்தில் எழும்பினார் ஜாண் விக்ளிஃப்..

போப்பாண்டவரால் நியமிக்கப்பட்ட பிஷப்புகளாலும் குருக்களாலும் கறைபட்டுப் போன கிறிஸ்துவின் சுவிசேஷ நற்செய்தியை..

கலப்பின்றி சத்தியமாகவும் துப்புரவாகவும் துணிந்து அறிவித்து ஜனங்களைக் கிறிஸ்துவிடம் திருப்ப எதை வேண்டுமானாலும் செய்யத் தயாரானார் விக்ளிஃப்..

விக்கிரக ஆராதனையிலும் நற்கருணை ஆராதனையிலும் கண்சொருகிப் போயிருந்த சபையை வெளிப்படையாய் சாடினார் விக்ளிஃப்..

ஆதி அப்போஸ்தலரும் ஆதிசபையும் உலகத்து ஜனங்களால் உபத்திரவப்படுத்தப்பட்டனர்.

ஆனால் இப்போது கிறிஸ்துவின் பெயரைக் கொண்ட கிறிஸ்தவனே கிறிஸ்தவனை உபத்திரவப்படுத்தும் வேதனையான நிலை உருவானது..

அவருக்கு விரோதமாய் குருக்கள் பிஷப்புகள் ஆர்ச்பிஷப்புகள் மூப்பர்கள் என்ற பெரிய கூட்டம்..

கடைசியாக போப்பாண்டவரிடமிருந்து ஆர்டர் வந்தது..

ஜாண் விக்ளிஃப், ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியிலிருந்து மட்டுமல்ல கத்தோலிக்க சபையிலிருந்தும் வெளியேற்றப் படுகிறார்..

ஆனாலும் அவர் தன் செய்திகளில் தன் மனதைப் பிரதிபலிப்பதில் பின்வாங்கவில்லை...

தேவகிருபை விக்ளிஃப் மேல் அபரிமிதமாக இருந்தது..

இங்கிலாந்தின் ராஜ குடும்பம் அவருக்கு ஆதரவாக இருந்ததால் சிறிது காலம் சபையால் அவர் மேல் கைபோட முடியவில்லை..

## "அன்றைய கிறிஸ்துவத்தின் நிலை"

ஆவியோடும் உண்மையோடும் செய்யப்பட வேண்டிய ஆவிக்குரிய காரியங்கள்..

மாயமான தாழ்மையிலும் வெளிப்படையான சடங்காச்சாரங்களிலும் விக்கிரக ஆராதனையிலும் மூழ்கிப் போய்விட்டதை..

அன்றைய கிறிஸ்தவ வரலாறை வாசிக்கும் ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனும் நிச்சயம் அறிந்து கொள்வான்..

அவர்கள்..

மனிதர்களைப் புனிதர்களாக்கினர்..
மரியாளை வணங்கினர்..

புண்ணிய தலங்கள் என்று சில இடங்களைக் குறிப்பிட்டு அங்கே தீர்த்தயாத்திரை செய்தனர்..

முடியைக் காணிக்கையாக்கினர்..

புனிதர்கள் எனப்பட்டவர்களின் எலும்புகளும் உடல் பாகங்களும் ஆராதிக்கப்பட்டன..

பெரிய பெரிய கதீட்ரல் ஆலயங்களையும் குருமடங்களையும் கட்டினர்..

கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார் என்ற சத்தியம் மறக்கப்பட்டு..
மனிதனால் பரிசுத்தமாக்கப்பட்ட அப்பத்தின் உருவத்தில் கிறிஸ்து வணங்கப்பட்டார்..

ஜனங்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி வளர்த்துச் செல்லும் மிக முக்கியமான பணியை விட்டுவிட்டு..

குருக்களும் பிஷப்புகளும் தங்களை மட்டுமே நன்கு பராமரித்துக் கொள்ளும் பரிதாப நிலை..

தேவனுடைய கட்டளைகளுக்குப் பதிலாக மனிதருடைய வார்த்தைகளே பின்பற்றப்பட்டது..

கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு அல்ல..
போப்பாண்டவரின் வத்திக்கான் சங்க வழிமுறைகளே எங்கும் எதிரொலித்தன..

கர்த்தருடைய வேதம் வாசிக்கப்படுவது அரிதானதால்..
கிறிஸ்துவின் இரட்சிப்பின் சுவிசேஷம் மறக்கப்பட்டு..

மனிதன் கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசம் காணாமல் போனது..

"கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்து நம்மை சாபங்களுக்கு விடுதலையாக்கினார்.."என்ற மூல உபதேச அஸ்திபார சத்தியமே அறியாமல் போன அறியாமையால்..

சபைக்குள் தவறுகளும்..
மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட வேதத்துக்குப் புறம்பான முறைமைகளும் புகுந்தன..

சத்தியத்தை விட்டு நீண்ட காலம் தூரமாய்ப் போய்விட்ட சபையை மீண்டும் அதின் அஸ்திபார உபதேசத்தில் நிலைநிறுத்த தேவன் இறங்கினார்..

அதற்கு அவர் உபயோகப்படுத்திய முக்கிய உபகரணம்..
“விஞ்ஞானம்.."

இதற்குள் "பிரிண்ட்டிங்”
நடைமுறைக்கு வர..
வேதம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்படத் துவங்கப்பட்டது..

ஜனங்கள்..இருளையும் வெளிச்சத்தையும்..
சத்தியத்தையும் கள்ளப் போதகங்களையும்..
உண்மைக் கிறிஸ்தவத்தையும் பாரம்பரியச் சடங்குகளையும்..
வேறுபிரித்துப் பார்க்க ஆரம்பித்தனர்..

ரோம சபையில் அதிவேகத்தில் ஒரு புரட்சி அல்ல..
பூகம்பமே வெடிக்கக் காத்திருந்து..

ஆனால் அதற்கு முன்..
முக்கியமான மூவர் அதற்காகத் தங்களையே விலையாகக் கொடுத்திருந்தனர்..

- ஜாண் விக்ளிஃப்
- ஜாண் ஹஸ்
- ஜெரோம் சவனரோலா

இந்த மூவருக்கும் திருச்சபை இன்றைய நாள் வரை தீராக் கடன் பட்டிருக்கிறது..

## "விக்ளிஃபின் மரணம்"

*1377..*
ஜாண் விக்ளிஃப் பிஷப் சங்கத்தின் முன் ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பப்படுகிறது..

பிப்ரவரி *19..1377..*
லாங்ஸ்டர் மேயர்..லார்ட் ஹென்றி பெர்சி மற்றும் இங்கிலாந்தின் லார்ட் மார்ஷல் ஆகியோரோடு ஆஜராகிறார் விக்ளிஃப்..

பரி.பவுல் வளாகத்தில் பெரிய கூட்டம் கூடியது..
மரியாளின் தேவாலயத்தில் நடந்து கொண்டிருந்த வழக்கு விசாரணையின் நடுவே புயலாய் நுழைகிறான் ஒரு மனிதன்..
பெயர்-லெவிஸ்..

அவன் யாரென்று தெரியாவிட்டாலும் அவனது மிரட்டல்..
பிஷப்புகளை அதிர்ச்சியடையச் செய்கிறது..

வழக்கு விசாரணையின்றி முடிந்து இம்முறை தப்பித்து விடுகிறார் விக்ளிஃப்..

ஆக்ஸ்போர்டு மற்றும் கத்தோலிக்க சபையின் எந்த மிரட்டலுக்கும் அடிபணியாத விக்ளிஃப்..
தன் கருத்துக்களைப் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கிறார்..

தனக்குக் கிடைத்த குறுகிய காலத்தில் சூறாவளியாய் சுற்றுப்பயணம் செய்து வேதத்தின் வெளிச்சத்துக்கு ஜனங்களை திருப்புகிறார்..

சில காலம் மறைவாய் இருந்தவர் மீண்டும் லுத்தர்வொர்த் என்ற இடத்திலுள்ள தன் சபைக்கு வருகிறார்..
1384ல்..

இதற்குள் அவருக்கு வயது ஐம்பத்திஆறு..

அது டிசம்பர் 31..1384 ம் ஆண்டு..தன் அயர்ந்த நித்திரையிலேயே கர்த்தரோடு அயராமல் இருக்கச் சென்று விடுகிறார் விக்ளிஃப்..

"விக்ளிஃப் தன் வாலிபத்தில் கர்த்தருக்காக எவ்வளவு வைராக்கியம் காண்பித்தாரோ அதே வைராக்கியத்துடன் தன் வயதான காலத்திலும் பற்றி எரிந்தார் "என்கிறது அவரைக் குறித்த செய்திக் குறிப்பு..

விக்ளிஃப் மரித்து 31 ஆண்டுகள் பின்..

கான்ஸ்டன்ஸ் கவுன்சில் கூடுகிறது..
அங்கு அவரது உபதேசங்களுக்கு எதிராக முடிவுகள் எடுக்கப்பட்டதோடு..

அவரைப்பற்றிய ஞாபகத்தையே துடைத்துப் போடும் நோக்கத்தோடு..
அவரது கல்லறை தோண்டப்பட்டு..

எஞ்சியிருந்த எலும்புத் துண்டுகளும் எரிக்கப்பட்டு ரைன் நதியில் சாம்பல் வீசப்படுகிறது..

இயேசுவைக் கொன்ற பரிசேயர்..அவர் கல்லறையில் வைக்கப்பட்டதோடு அவரது சகாப்தம் முடிந்தது என்று நினைத்தது போல..

விக்ளிஃப் கதை சாம்பலாய்க் கரைந்தது என்று நினைத்தனர் கத்தோலிக்கர்..
ஆனால் நடந்து வேறு..

தேவனுடைய வார்த்தை வெட்ட வெட்ட எழுந்து நிற்கும் ஜீவனுள்ள வித்து அல்லவா?

விக்ளிஃப் என்ற விதையிலிருந்து முளைத்து எழும்பியது ஜாண் ஹஸ் என்ற பலத்த விருட்சம்..

## சவோனரோலா

21 செப் 1452..
இத்தாலியின் பெராரா நகரில் நிக்கோலா சவோனரோலாவுக்கும் எலினாவுக்கும் பிறந்தவர் ஜிரோலமா சவோனரோலா.

மருத்துவராகப் படிக்க ஆரம்பித்தவர் படிப்பில் ஆர்வமின்றி ஆன்மீக காரியங்களில் நாட்டம் உள்ளவராய் குருவானவராகி குருமடத்தில் சேர்ந்தார்..

1482 ம் ஆண்டு ப்ளாரன்ஸ் என்ற இடத்தின் சென் மார்க்கோவுக்கு பேராசிரியராக அனுப்பப்பட்டவர்..
தன் பேச்சாற்றல் மற்றும் அறிவினால் அநேகரைக் கவர்ந்தார்..

ஆனால் அவருக்குக் கிடைத்த சில வெளிப்பாடுகள் அவரைத் தீர்க்கதரிசியாக மாற்றியது..

1485,86..லெந்து நாட்களில் தீப்பொறியாய்ப் பிரசங்கித்தவர்..

“சபையில் பெரிய புரட்சியும் மாற்றமும் வந்தே ஆக வேண்டும்..சபை நொறுக்கப்பட்டு எழுப்புதலடையும்" என்று முழங்கினார்..

1487ல் போலோக்னா என்ற இடத்துக்கு மேற்படிப்புக்குச் சென்றவர் மறுபடியும் ப்ளாரன்சுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்..

லோரன்ஸோ டி மெடிஸி என்ற அங்குள்ள ரோமன் கத்தோலிக்க அரசனுக்கு விரோதமாய் பகிரங்கமாய் பிரசங்கித்தார் சவோனரோலா..

அரசாங்கம் மட்டுமல்ல இவருக்கு எதிராக ஒரு கட்சியே ஆரம்பிக்கப்பட்டு கொடி தூக்கியது..

போப்பால் அனுப்பப்பட்டவர்களின் அழைப்பை நிராகரித்தார் சவோனரோலா..

மட்டுமல்ல..
1496 லெந்து நாட்கள் நெருங்க..
வேதத்தின் ஆமோஸ் புத்தகத்திலிருந்து எரிமலையாய் வெடித்தார்..

அவருக்கு ஆதரவு பெருகப் பெருக..அவரோடு சமரசம் செய்து கொள்ளும் நோக்கத்தோடு "இதோ இந்தக் கர்தினால் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று போப் தூது விடுகிறார்..

சவோனரோலா சொன்னார்..

"இந்தச் சிவப்பு தொப்பி அல்ல..இரத்த சாட்சியின் இரத்தத்தால் தோய்ந்த தொப்பியே சூடிக் கொள்வேன 1496, 97 ன் சபையின் பொருட்காட்சி விழாவில் நுழைந்தவர்..
அங்கு காணப்பட்ட சிலைகள், நிர்வாண ஓவியங்கள்,
சூதாட்ட மேஜைகள் எல்லாவற்றையும் போட்டு கொளுத்திவிட.
கலவரம் வெடிக்கிறது..

சவோனரோலாவும் நண்பர் டோமினிக்கோவும் கொலைக் குற்றவாளிளைப் போல் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.. ரோம நீதிமன்றம் தீர்ப்பளிக்க..

கழுத்து நெறிக்கப்பட்டு எரித்துக் கொல்லப்படுகிறார் சவோனரோலா..

அவரது மரணத்தின் கடைசி மணி நேரங்கள் ஆதி சபையின் முற்பிதாக்களைப் பிரதிபலித்தது..



# தீக்கொளுத்துவேன் !
# தீக்கொளுத்துவேன் !
# தீக்கொளுத்துவேன் !

## CHAPTER - 10

# தீக்கொளுத்துவேன் ! தீக்கொளுத்துவேன் ! தீக்கொளுத்துவேன்..!

## Chapter -10

***“ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்..அது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும்.. (ஆமோஸ் 1:4)***

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்..
அவன் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு
சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறான்.. அவைகள் ஆவிக்கேற்ற
பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், ஜென்ம
சுபாவமுள்ளவன் அவைகளை அறிய மாட்டான்..
(1 கொரி 2: 13 - 15)*

*தேசத்தின் எப்படிப்பட்ட சம்பவமானாலும்..
ஆட்சி மாற்றமோ .. அரசு ஆணையோ...
கலவரமோ.. கொரானாவோ..
சுனாமியோ.. சி ஏ ஏ வோ ..
GST யோ.. பண மதிப்பிழப்போ...
எதுவாயிருந்தாலும் கர்த்தர் தமது சபைக்கென்று அவைகள்
ஒவ்வொன்றிலும் ஒரு செய்தியையும், எச்சரிப்பையும் தீர்க்கதரிசன
நிறைவேறுதலையும் வைத்து வைத்தே இருக்கிறார்!*

*தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன்..
என்று தீயாய் நிற்கிறார் ஆமோஸ் !*

*" கர்த்தரின் செய்கையில்லாமல் ஊரிலே தீங்கு உண்டாகுமோ?*
*சிங்கம் கெர்ச்சிக்கிறது..*
*யார் பயப்படாதிருப்பான்?*
*கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார்..*
*யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?" (ஆமோஸ் 3:8)*

*"நீங்கள் கூடிவந்து..*
*தேசத்திலே நடக்கிற பெரிய கலகங்களையும், அதற்குள்*
*செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள் என்று*
*அரண்மனைகளான இந்திய சபைகள் யாவற்றின் மேலும் கூறுங்கள் !*
*(ஆமோஸ் 3:9)*

***என்ன கூறுங்கள்?***

*ஆண்டவர் சொல்லுகிறார்..*

■ ***ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்..***
***அது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும்!***

■ ***காசாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்..***
***அது அதினுடைய அரமனைகளைப் பட்சிக்கும் !***

■ ***தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்..***
***அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும்!***

■ ***தேமானிலே தீக்கொளுத்துவேன்..***
***அது போஸ்ராவின் அரமனைகளைப் பட்சிக்கும்!***

■ ***ரப்பாவின் மதில்களுக்குள் தீக்கொளுத்துவேன்..***
***அது யுத்த நாளின் முழக்கமாகவும் பெருங்காற்றின் புசலாகவும்***
***அதின்அரமனைகளைப் பட்சிக்கும்!***

■ ***மோவாப் தேசத்திலே தீக்கொளுத்துவேன்..***
***அது கீரியாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்!***

■ யூதாவிலே தீக்கொளுத்துவேன்..அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்...

தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன் !

■ ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்..
ஏனென்றால் ஆசகேலின் வீடாய் மாறிப் போனது ஆண்டவரின் சபை !

■ காசாவின் மதில்களுக்குள்ளே தீக்கொளுத்துவேன்..
காரணம் காசாவின் மாயைகளுக்குள்ளே காணாமல் போனது கர்த்தரின் சபை !

■ தீருவின் மதில்களுக்குள்ளே தீக்கொளுத்துவேன்..
ஏனென்றால் தீருவின் தீமைகளால் தீட்டுப்பட்டுப்போனது தீர்க்கதரிசிகளின் சபை !

■ தேமானிலே தீக்கொளுத்துவேன்..
காரணம் தேமானின் தேசமாய் தேய்ந்து காய்ந்து தீய்ந்து போனது தேவனின் சபை !

■ ரப்பாவின் மதில்களுக்குள்ளே தீக்கொளுத்துவேன்..
ஏனென்றால் ரப்பாவின் ரணமாகிப் போனது ரபியின் சபை !

■ காரணம் மோவாபோடே சம்பந்தங்கலந்து மோசம் போனது பரிசுத்த சபை !

■ யூதாவிலே தீக்கொளுத்துவேன்.. ஏனெனில் யூதாவே! உனக்கு ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது!

தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன் !
தீக்கொளுத்துவேன் !

இது ஒரு மிகப்பெரிய வார்த்தை!

*அவ்வளவு சீக்கிரம் நாம் சொல்ல அஞ்சும் ஒரு வார்த்தை !*
*நினைத்தாலே நம்மை நடுநடுங்க வைக்கும் பயங்கரமான ஒரு வார்த்தை !*

*தேவன் இவ்வார்த்தையை புறஜாதிப் பட்டணங்களுக்கு மட்டுமல்ல.. தமது ஜனமாகிய யூதாவுக்கும் இஸ்ரவேலுக்குமே விரோதமாய் உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்ன?*

*தேவனது இந்தத் தீர்ப்புக்கும் நமக்கும் சம்பந்தம் என்ன?*

*இதை நாம் எழுத வேண்டிய காரணம் என்ன?*

*புறஜாதிகள் மேல் கூறப்பட்ட "தீக்கொளுத்துவேன் " என்ற இந்த வார்த்தையை தமது சபைக்கு விரோதமாய் இன்று உச்சரிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தேவன் தள்ளப்பட ஒரே ஒரு காரணம்...*

*காணியாட்சிக்குப் புறம்பாயிருந்தும் கர்த்தருடைய சுதந்திரத்திற்குப் பங்குள்ளவர்களான பின்பு...*
*புனிதம் கெட்டு மீண்டும் புறஜாதிகளாகவே மாறி, மறுபடியும் காணியாட்சிக்குப் புறம்பாக்கப்பட்டுப் போன ஒரே காரணத்தாலேயோ ?*

*காட்டு ஒலிவமரமாயிருந்தும், நல்ல மரத்தோடே ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளிகளாய் இருந்தும், ஒட்ட வைத்த தேவனின் தயவைத் தூக்கியெறிந்து, மேட்டிமையும், பெருமையும்,*
*அகந்தையும் மமதையுடன் கூடிய செருக்கினாலே..*
*ஒட்ட வைத்த தேவனாலேயே தறித்துப் போடப்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அவரை ஆளாக்கிய காரணத்தினாலேயோ ?*

**இன்று..**

**ஆசகேலின் வீடாய் மாறிப் போனது ஆண்டவரின் சபை !**
**காசாவின் இச்சைகளுக்குள் சிக்கிச் சாகிறது கர்த்தரின் சபை !**

**தீருவின் தீமைகளால் தீட்டுப்பட்டுப் போனது தீர்க்கதரிசிகளின் சபை !**
**தேமானின் தேசமாய் தேய்ந்து போனது தேவனின் சபை !**
**அம்மோனின் அருவருப்புகளால் அசுத்தமாகிப் போனது பரிசுத்தசபை !**
**மோவாபாய் மோசம் போனது மோட்சப் பிரயாண சபை !**

## *1. தமஸ்குவின் மூன்று பாதகங்களினிமித்தமும்*

**நாலு பாதகங்களினிமித்தமும்ஆசகேலின் வீட்டிலே**
**தீக்கொளுத்துவேன் !**

■ தமஸ்கு என்ற தலைக்கனம் தலைமை சபைகளில் தலைவிரித்தாடவில்லையோ ?

■ அபிஷேகம் பெற்ற ஆசகேல்களின் அட்டூழியங்களுக்கு அளவில்லையோ ? *(2 இராஜா 8:12)*

■ பெனாதாதின் வஞ்சகங்களுக்கும் வஞ்சகர்களுக்கும் இங்கே பஞ்சமுண்டோ ? *(1 இரா 20:31-33)*

■ கீலேயாத்தாம் சபையிலே இயேசுவின் இரத்தமாம் பிசின் தைலம் இல்லையோ ? இரண வைத்தியனாம் இயேசுவும் அங்கே இல்லையோ ?

■ ஆனாலும் சபையாம் கீலேயாத் சத்துருக்களின் கிரியைகளாம் இருப்புக் கருவிகளினால் போரடிக்கப்படுகிறதே !

**ஆகவே..**

**"ஆசகேலின் வீடாய் மாறிப் போன ஆண்டவரின் சபையிலே**
**தீக்கொளுத்துவேன்" !**
**அது பெனாததாத் போன்ற வஞ்சகர்களைப் பட்சிக்கும் !**

***2. காசாவின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும் காசாவின் மதில்களுக்குள்ளே தீக்கொளுத்துவேன்.. அது அதினுடைய அரமனைகளைப் பட்சிக்கும் !***

*(தமிழ் வேதாகமத்திலே காத்சா என்று சொல்லப்படும் வார்த்தை "காத்சா" அல்ல.. "காசா")*

- *சிம்சோனை சீராட்டிய காசா !*
- *சிங்கத்தைக் கிழித்தவனை சிறைவத்த காசா !*
- *பட்சிக்கிறவனைப் பட்சித்துப் போட்ட காசா !*
- *பலவானைப் பலட்சயப்படுத்திய காசா !*
- *நசரேயன் சிரையை சிரைத்துப் போட்ட காசா !*
- *விரதம் காத்தவனை விளையாட்டுப் பொம்மையாக்கிய காசா !*

*இன்று..*

***கர்த்தரின் சபை காசாவாகிப் போகவில்லையோ ?***

***மறுஜன்மம் முதல் மரணம் வரையான நசரேய விரதம் இங்கே நரபலி கொடுக்கப்படவில்லையோ ?***

***பெலிஸ்தரின் கையிலிருந்து விடுவிக்க வேண்டிய ஜனம்..பெலிஸ்தன் கையிலேயே இரையாகிப் போகவில்லையோ ?***

***தேவனின் எதிர்பார்ப்புக்களும் ஏங்கல்களும் இங்கே ஏமாற்றமடையவில்லையோ ?***

***திர்சாவைப் போல அழகுள்ள சபை, தெலீலாளின் மடியாகிப் போனதோ ?***

***தரிசனக் கண்கள் பிடுங்கப்பட்ட கண்ணற்ற கபோதிகள் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கவில்லையோ ?***

***வேடிக்கையாகிப்போன தேவ ஜனம்,பகைவனுக்கு முன் வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறதோ ?***

***“இந்த ஒருவிசை மாத்திரம் நினைத்தருளும்..” என்ற கூக்குரல்கள் மண்மேடாகிப் போன காசாவின் சபைகளுக்குள்ளே அடங்கிப் போனதோ ?***

*ஆகவே..*

***காசாவின் விபச்சார வேசித்தனத்துக்குள் மாயமாகிப்போன கர்த்தரின் சபைகளுக்குள்ளே தீக்கொளுத்துவேன் !***
***அது அதின் அரமனைகளான மகா சபைகளைப் பட்சிக்கும் !***

## *3. தீருவின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் தீருவின் மதிலுக்குள்ளே தீக்கொளுத்துவேன்!*

- *வியாபார சந்தையான தீரு !*
- *ஆராதனை வீரனான தீருவின் ராஜன் !*
- *தேவனின் மகிமையையும் கனத்தையும் களவாடிக் கொண்ட தீரு !*

***இன்றைய சபையின் மூன்று பாதகங்கள் இவையல்லவோ ?***

***ஊழியங்கள்.. வியாபாரங்கள் !***
***ஊழியர்கள்.. வியாபாரிகள் !***
***சபைகள்..சந்தைகள் ! சரக்குகள்..சொந்தச் சரக்குகள் !***
***வரங்கள்.. வித்தைகள் !***
***வாக்குத்தத்தங்கள்.. வாய்ஜாலங்கள் !***
***விழுந்து போன லூசிபரின் வீடாய் மாறிப்போன நவீன தீரு இது !***

***தேவனுடைய தோட்டமாம் ஏதேனில் இருந்தவன்.. இன்று தேவனுடைய வீடாம் சபைக்குள்ளும் புகுந்தானே !***

- ***முத்திரை மோதிரமாய்..***

***பூரண அழகாய்..***
***இரத்தினங்களினாலும் பொன்னாலும் போர்த்தப்பட்டு..***
***அக்கினிக் கற்களின் நடுவில் உலாவி..***
***மேள வாத்தியங்களும் நாகசுரங்களும் புடைசூழ..***
***இவன் செட்டைகள் விரித்தால் இன்ப நாதமாம் !***

***ஓ ! தள்ளப்பட்டுப்போன தீருவின் தீயனே !***
***தேவனின் ஆலயத்தில் வந்து தேவனைப் போல அமர்ந்தாயோ ?***
***எங்கள் ஆராதனை வீரர்களுக்கு ஆதர்ச புருஷனாய், ஆண்டவனாய் ஆனாயோ ?***
***எங்கள் ஜீவனுள்ள தேவனின் மகிமையை நீ திருடிக் கொண்டு போனாயோ ?***

***■ தாவீதைப் போல ஆடுவார்களாம் !***
***ஒவ்வொரு அடியிலும் அபிஷேகமாம் !***
***புதுத் துருத்தியில் புது ரசமாம் !***
***பூர்வ பாதைகள் பழஞ்சரக்காம் !***
***அக்கினி ஸ்தம்ப ஆராதனையாம் ! புகைமூட்டப் பிரசன்னமாம் !***
***வண்ண விளக்குகளாம் !***
***ஒளி வெள்ளமாம் !***
***மேளதாளங்களாம் ! மேற்கத்தியரானார்களாம் !***

***■ தமது வீட்டிலிருந்தே ராஜா துரத்தப்பட்டார் !***
***வெறுங்காலாய் விரட்டப்பட்டார் !***

***ராஜாசனம் பிடுங்கப்பட்டது !***
***தங்களையே ராஜனும் தேவனும் ஆக்கிக் கொண்டனர் !***

*இம்மூன்றும் இன்றைய தீருவின் தீராத தீமைகள் அல்லவோ ?*

***இதினிமித்தமே தீருவாய்ப் போன திருச்சபைகளுக்குள்ளே தீக்கொளுத்துவேன் !***

***அது இன்றைய அப்சலோம்களின் அரண்மனைகளைப் பட்சிக்கும் !***

***4. ஏதோமுடைய மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் தேமானிலே தீக்கொளுத்துவேன்..***

*இந்த தேமான் ஏசாவின் பேரனாம் !*
*ஏதோமின் வம்ச வழியாம்!*

*ஒரு வேளை கூழுக்காக "சேஷ்ட புத்திர பாகத்தையே" விற்றுப் போட்டவன்" அல்லவா?*

*எனக்கு இந்த சேஷ்ட புத்திர பாகம் என்னத்திற்கு என்றவனல்லவா?*
*அதை "அலட்சியம்" பண்ணினவன் அல்லவா?*
*"சீர் கெட்டவன்" என்று பெயர் பெற்றவன் அல்லவா?*
*"ஆகாதவன்" என்று "தள்ளப்பட்டவன்" அல்லவா?*

***" உன் நிலத்தை எனக்குக் கொடு.. அதற்கேற்ற விலை தருவேன்" என்று நாபோத்திடம் , அவனது முற்பிதாக்களின் சுதந்திரத்தை விலை பேசினான் ஆகாப் !***

***"இஸ்ரவேலை எனக்காக வந்து சபியும் .. உம்மை மிகவும் கனம்பண்ணுவேன் என்று பிலேயாமுக்குத் தூது அனுப்பினான் பாலாக் !***

***"என்னை மண்டியிட்டுப் பணியும் .. இந்த உலகத்தையே உமக்குத் தருவேன் என்று தேவகுமாரனிடமே ஒப்பந்தம் போட வந்தான் இவ்வுலகத்தின் அதிபதி !***

*அன்றும் இன்றும் இந்த உலகம் exchange offer உலகம் தான் !*

*இன்று சமரசமும், ஒத்துப்போகுதலும், காம்ப்ரமைஸும், அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்வதும், கண்டும் காணாதலும், "இதெல்லாம் சகஜம் பிரதர்" என்பதும், "இதிலெல்லாம் என்ன இருக்குது ?" என்பதுமே சகஜமாய்ப் போன நாட்கள் !*

------------------------------------------

***ஞாயிற்றுக்கிழமை லீவு கிடையாது.. ஆனா லட்சக்கணக்கில் சம்பளம் தருகிறோம்.. நல்ல பொஸிஷன்...***

*சரி பிரதர்.. என்ன செய்றது? கர்த்தர் என் நிலையை அறிவார் !*
*அதனால என்ன? சனிக்கிழமை மாலை ஆராதனைக்குப் போய்க்கலாம்!*
*நல்ல சம்பளம் வாங்கி, கர்த்தருடைய ஊழியத்தைத் தாங்கலாமே! - இது தான் இன்றைய சமரசம் !*

------------------------------------------

***பொண்ணு நல்லா படிச்ச பொண்ணு..அவ்ளோ அழகு ! நல்லா செய்றாங்க ! விரும்பின பொண்ணு வேற..***

*சரி..எப்படியாவது கர்த்தருக்குள்ள கொண்டு வந்துரலாம்..*
*ஒரு வேளை இப்படியும் ஒரு ஆத்துமாவை ஆதாயம் பண்ணுவது கூட கர்த்தரோட சித்தமா இருக்கலாமே !*
*அப்புறம் என்ன ரொம்ப யோசிக்கக் கூடாது..*

-------------------------------------------

***பையன் ஃபாரின்ல வேல செய்றான்..ஏகப்பட்ட டிஜிட்ல டிஜிட்டல் சம்பளம்.. வெளிநாட்ல அவனோட ஃப்ரண்ஸோட கிறிஸ்மஸ்க்கு சர்ச்சுக்கெல்லாம் கூட போவானாம்.. நல்ல சான்ஸ்..பரவாயில்ல..கட்டிக்கோ..***

*இந்தக்காலத்தில பொண்ணுங்களால முடியாதது என்ன சொல்லு ?*
*கொஞ்சம் கொஞ்சமா சபைக்கு கொண்டு வந்துரலாம்.. வந்த சம்பந்தத்தை வேண்டாம்னு சொல்லிராத..*

-------------------------------------------

***என்ன பாஸ்டர் நீங்க ! உங்க அப்பா காலம் மாதிரியே ஜிப்பா வேஷ்டி கெட்டிகிட்டு, டெடிகேஷன் பிரதிஷ்டைன்னுலாம் சொல்லிகிட்டு..***

*எப்ப பாத்தாலும் கர்த்தருக்காக பாடு சகிக்கணும், சிலுவை சுமக்கணும்..சுயத்தை வெறுக்கணும்னு பேசிக்கிட்டு..*

*காலம் மாறிப்போச்சு பாஸ்டர்..இன்னும் வெவரம் தெரியாம இருக்கீங்களே ! எவ்வளவு நாளைக்கு இன்னும் இப்படியே இருப்பீங்க ?*

*ஆசீர்வாதம், அற்புதம், தீர்க்கதரிசனம்.. எழுப்புதல்..ஃபயர் கியர்னு சொல்லிட்டு இறங்குங்க பாஸ்டர்.. இன்னும் உங்க தாத்தா காலத்திலே இருக்கீங்களே !*

***ஓ அப்படீன்றீங்களா ! ஆமா.. இல்ல !!***

-------------------------------------------

***யாரு பிரதர் இப்ப எல்லாம் நகை நட்டைக் கழட்டிகிட்டு ??***
***நம்ம பிள்ளைங்க எதிர்காலத்தில் எவ்ளோ கஷ்டப்படப் போறாங்க தெரியுமா ? பேசாம போய் பிள்ளைகளுக்கு காது குத்துங்க பிரதர் !!***

*அங்கங்க அவன் அவன் நகைக்கடையா திறந்துகிட்டே போறான்.. நீங்க வேற..*

-------------------------------------------

***ஏம்மா யாரும்மா இப்ப எல்லாம் முக்காடெல்லாம் போட்டுகிட்டு ? துப்பட்டாவே போடுறதில்ல.. இதுல வேற முக்காடு வேறயா? (அது என்ன? ஒரு சைடு துப்பட்டா ?)***

போங்கப்பா.. போய் வேற எதாச்சும் வேல இருந்தா பாருங்க.. நாட்ல அவன் அவன் துண்டக் காணோம் துணியைக் காணோம்னு தலை தெறிச்சி ஓடிகிட்டு இருக்கான்.. இப்பதான் வந்து துண்டு துப்பட்டான்னு இதெல்லாம் பேசிகிட்டு ...

------------------------------------------

***இயேசு என்ற சேஷ்ட புத்திர பாகத்தையே விற்றுவிட்டோம்..***

***எப்போது பார்த்தாலும் வசனம் - இந்த மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு  முன்பாக வேறு எதுவுமில்லையே ?***

***"இந்த மன்னா என்னத்திற்கு?"- இது தான் நமது வெறுப்பு ! சலிப்பு !***

***மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டு விட்டோம்!***

***சீர்கெட்டு, சீர்குலைந்து "ஆகாதது" என்று தள்ளப்பட்ட தேமானிய ஏசாவின் சபைகளுக்குள் தீக்கொளுத்துவேன்.. அது போஸ்ரா என்ற போலி சபைகளைப் பட்சிக்கும் !***

---

***5. அம்மோன் புத்திரரின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் ரப்பாவின் மதில்களுக்குள் தீக்கொளுத்துவேன்!***

---

***அம்மோன் :*** *இவன் லோத்தின் அருவருப்பின் அடையாளம்!*

*ஜீவன் தப்ப ஓடிப்போ என்று கல்வாரி மலைக்கு ஓடிவந்து சேர்ந்தாலும், சோதோம் கொமோராவைக் கூடவே கூட்டி வந்த புறவாசல் என்ட்ரி இது!*

*சவம் செத்துப் பொழச்சாலும், கூடவே ஒட்டிக்கிட்டு வந்த சாவாத இச்சை !*

*இந்த அம்மோனிய அருவருப்புக்குத் தான் ஞானி என்று சொல்லப்பட்ட அந்த அஞ்ஞானி, கர்த்தருக்கு ஆலயம் கட்டின அதே மலைக்கு எதிராகவே பலிபீடம் கட்டினான் வயசான காலத்தில் - வைப்பாட்டிகளுக்காக ! வெக்கக்கேடு!*

■ ***"என் நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கும்படி மகனும் தகப்பனும் ஒரே பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.. (ஆமோஸ் 2:7) - அது ஆமோஸ் காலம்|***

■ ***"ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருக்கிறானே!"- இதெல்லாம் கொரிந்திய காலம்!****

■ ***பாஷை பேசும் பெந்தேகோஸ்தியன் ஒருவன் தாயையும் மகளையும் தனதாக்கிக் கொள்கிறான்!- இது 30 வருட பழைய பெந்தேகோஸ்தே கதை !***

■ ***பெங்களூருவின் IT Family Friends Get-together பார்ட்டி ! ஆட்டம் பாட்டம் முடிந்து டேபிளில் எல்லாருடைய கார் சாவிகளும் மொத்தமாகப் போடப்படுகிறது.. யாரும் யார் கார் சாவியையும் எடுத்துக் கொள்ளலாம்..யார் கார் யார் கைக்குக் கிடைக்கிறதோ, அவர்கள் காரோடு சேர்த்து அந்த கார்க்காரரின் மனைவியையும் அன்று தன்னோடு அழைத்துக் கொண்டு போகலாம்..அன்று முழுவதும் அந்த மாற்றான் மனைவியோடு ஜாலியாய் இருந்து விட்டு அடுத்த நாள் கொண்டு வந்து காரையும் மனைவியையும் மாற்றிக் கொள்ளலாம் !***

***"இதெப்டி இருக்கு" !!!***

****இது வேற எங்கேயும் இல்ல..இதைப் போன்ற காரியங்கள் நம்ம சபைகளுக்குள்ளேயும் இருக்கிறது !(கண்டுக்காதீங்க பிரதர் !)****

***இப்பல்லாம் மல்ட்டிப்பிள் சாய்ஸ் தான் லேட்டஸ்ட் ட்ரெண்ட்..இன்று உன்னுடையதைப் படை.. நாளைக்கு என்னுடையதைத் திங்கலாம்! அவ்வளவு உடல் பசி !***

***"இன்று நான் நாளை நீ.." - என்ற லோத்தின் குமாரத்திகளின் ம்யூச்சுவல் அன்டர்ஸ்டாண்டிங்..***

***History repeats itself* சிஸ்டர்ஸ்..**

***அட அம்மோனிய அருவருப்பே !***

***உன் ரப்பாவுக்குள் தீக்கொளுத்த இதோ வருகிறார் ! அது யுத்த நாளின் முழக்கமாகவும் பெருங்காற்றின் புசலாகவும் உன்னைப் பட்சிக்கும் !***

## *6. மோவாபின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் மோவாபிலே தீக்கொளுத்துவேன் !*

*பிலேயாம், போற போக்கிலே சூப்பர் ஐடியா ஒண்ணு குடுத்துட்டுப் போனான் பாருங்க பாலாக்குக்கு..*

**சொன்னான்..**

*"இந்த இஸ்ரவேல் மடங்கிப் படுத்துக்கிடக்கிற பால சிங்கம்! அதை எழுப்புறவன் அம்போ தான்..அது மேல கைய போடு ! நீ அவ்வளவு தான்!*

*ஒண்ணு செய்யி..*

*இவனுங்க தேவன் பரிசுத்தமான தேவன்..பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணன்..*
*இவனுங்களைப் பாவம் செய்ய வைத்தாலொழிய இவனுங்களைத் தோக்கடிக்கவே முடியாது !*

*ஒண்ணு செய் !*

*உன்னுடைய மோவாபியன் girls ஐயும் லேடீஸையும் சும்மா பாளயத்துக்குள்ளே அப்படியே அனுப்பிவுடு..மீதியை அவனுங்களே பாத்துக்கிருவானுங்க !*

*தம்முடைய பாளயத்துக்குள்ளே பாவத்தை சகிக்கக் கூடாத அவங்க தேவனே அவனுங்களுக்கு சத்துருவா மாறி அவனுங்களைத் துவம்சம் பண்ணுவார்.. நீ வேற எதுவும் செய்யவே வேண்டாம்.."*

*அவ்வளவு தான் உடனடியா களமிறங்கி தன் பொண்ணுங்களையும் களமிறக்கினான் பாலாக் !*

*மேற்கொண்டு நடந்தது வேத சரித்திரம் !*

*தன் கூடாரத்துக்குள்ளேயே துணிந்து சென்று தன் மூப்பர்கள் கண் முன்னாலேயே பட்டப்பகலின் வெட்ட வெளிச்சத்தில் அந்த மோவாபியாளோடே வேசித்தனம் பண்ணியவனை பினெகாஸ் என்ற ஒரு வாலிபன் தரையோடே தரையாய் உருவக் குத்தும் வரை வாதை பாளையத்தை வாரிச் சுருட்டியது !*

*இன்றும் சபைக்குள்ளே ஊடுருவியிருக்கும் மோவாபிய மோகங்கள் !*

***ஆடை மோகம் !***
***மேடை மோகம் !***
***வெஸ்டர்ன் மோகம் !***
***வெளிநாட்டு மோகம் !***
***ஜீன்ஸ் மோகம் !***
***லெக்கின்ஸ் மோகம் !***
***மாடல் மோகம் !***
***ஆடல் மோகம் !***

***மோவாபின் குமாரத்திகளாய் மாறிப்போன சீயோன் குமாரத்திகளின் அகந்தைக்கும்..கழுத்து நெறிப்பு நடைகளுக்கும்..கண்களின் மருட்டிய பார்வைகளுக்கும்.. ஒய்யார நடை பயில்களுக்கும்..சிலம்பொலி ஜில்ஜில்களுக்கும் முடிவு கட்டி..***

***அவர்கள் உச்சந்தலைகளை மொட்டையாக்கி..***

***அவர்களுடைய கட்டிங்குகளையும் ஃபிட்டிங்குகளையும் ஜடைகளையும் ஜன்னல்களையும்..***

***ஆரங்களையும் மாலைகளையும் பாதசரங்களையும் மார்க்கச்சைகளையும் சகல திறப்புகளையும் விநோத வஸ்திரங்களையும் கண்ணாடிகளையும் செல்ஃபிகளையும் செல் போன்களையும்.. சல்லாக்களையும் குல்லாக்களையும் உரிந்து போடுவார் !***

***அப்பொழுது சபைகளின் சுகந்த வாசனைக்குப் பதிலாக நாற்றமும், கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச்சுருளுக்குப் பதிலாக மொட்டையும், ஆடம்பர வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டும், அழகுக்குப் பதிலாக கருகிப் போகுதலும் இருக்கும் ! (ஏசா 3:16-24)***

***ஆகவே மோவாபாய் நாறிப்போன சபைகளுக்குள்ளே தீக்கொளுத்த இதோ வருகிறார் !***

***7. யூதாவின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் யூதாவிலே நான் தீக்கொளுத்துவேன் ! அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும் ! (ஆமோஸ் 2:4)***

*இது வரை வந்தவர்கள் புறஜாதிகளானால்..*
*இவனோ யூதா அல்லவோ ?*

*தம் சொந்த ஜனம் அல்லவோ ?*
*புறஜாதிகளால், தாம் புறம்பாக்கப்பட்டதில் ஆச்சரியம் இல்லை என்றாலும், தமது சொந்த இரத்தத்தால் வாங்கப்பட்ட தன் ஜனமாவது ஆறுதல் தருமென்றால்..*

*இன்றைய ஆவிக்குரிய யூதாவும் இஸ்ரவேலுமோ என்றால்..*

***கர்த்தருடைய வேதத்தை மறந்ததாம் ! அவரது கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் போனதாம் ! பிதாக்கள் பின்பற்றின பொய்யினால் மோசம் போனதாம் !***

***நீதிமானைப் பணத்துக்கும் எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப் போட்டதாம் ! தரித்திரருடைய தலையிலே மண்ணை வாரி இறைத்ததாம் !***

***சிறுமையானவர்களின் வழியைப் புரட்டியதாம் !அவரது நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியதாம் !***

***அடமானமும் வட்டியும் பொலிசையும் வாங்கினதாம் !அந்தப் பணப்படுக்கைகளின் மேலேயே படுத்துக் கொண்டு ஊற்றி ஊற்றிக் குடிக்கிறதாம் ! (ஆமோஸ் 2: 6-8)***

***ஆகவே..***

***இன்றைய யூதாவிலும் இஸ்ரவேலிலும் தீக்கொளுத்த இதோ வருகிறார் !***

***அது உங்கள் ஆவிக்குரிய எருசலேம்களை எரித்து உங்கள் நாசரேத்துக்களைப் பட்சித்துப் போடும் !***

***முடிவு :***

***"ஆகையால் இஸ்ரவேலே !***
***இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன் !***
***இஸ்ரவேலே !***
***நான் இப்படி உனக்குச் செய்யப் போகிறபடியினாலே உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு ! (ஆமோஸ் 4:12)***

# இது காலமா ?

## CHAPTER - 11



# இது காலமா ?

## Chapter -11

### *"இது காலமா?"*

*"பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?" (2 இரா 5 : 26)*

*"இந்த நாள் நெருக்கமும் இக்கட்டும் கண்டிதமும் அனுபவிக்கும் நாள்.." ( ஏசா 37:3)*
*"இது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்" (எரே 30:7)*

----------------------------

"ஏதாகிலும் அவன் கையிலே வாங்குவேன்.." என்று இரண்டு மாற்று வஸ்திரங்களுக்காகவும், ஒரு தாலந்து வெள்ளிக்காகவும் நாகமானின் பின்னால் ஓடி, "உமது அடியான் எங்கும் போகவில்லை.." என்று தன் எஜமானாகிய எலிசாவிடமே வாய்கூசாமல் பொய் சொன்ன கேயாசியைப் பார்த்து, எலிசா கேட்ட கேள்வி இது ..

"பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?" (2 இரா 5 : 26)

எலியாவின் ஆவியின் வரத்தை இரட்டிப்பாய்ப் பெற்றிருந்தும், தான் வாழும் காலம் எப்படிப்பட்ட காலமென்றும், எப்படிப்பட்ட சவால்களை, தான் எதிர்கொள்ளும் காலகட்டத்தில் இருக்கிறேன் என்பதையும் நன்கு அறிந்திருந்தான் எலிசா. "இப்படி ஒரு நெருக்கடியான காலத்தில் நாம் இருக்கிறோமே? அப்படியிருக்கும் போது பணத்தையும், தோப்பு துரவுகளையும் திராட்சைத் தோட்டங்களையும் குறித்து யோசிக்கும் காலமா இது? இக்காலத்தின் நெருக்கமும் தீவிரமும் உன் கண்களுக்குத் தெரியவில்லையோ ?" என்பதே கேயாசியின் மீது எலிசாவின் கோபமும் வேதனையும் கடுப்புமாய் இருந்தது.

தன் காலத்தின் நெருக்கங்களையும் இக்கட்டுகளையும் சவால்களையும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தான் எலிசா. இது எலிசாவின் காலத்துக்கு மட்டுமல்ல, இன்றைய நமது நாட்களுக்கும் அப்படியே பொருந்தவில்லையோ? அப்படியானால் நாம் வாழும் காலம் எப்படிப்பட்டதென்றும் "இது காலமா?" என்று நம்மை நாமே உலுக்கிக் கொள்ளும் தெளிவும் தீவிரமும் நம்மிடையே உண்டோ?

**எலிசாவின் காலத்துக்கும் நமது இன்றைய நாட்களுக்கும் உள்ள ஒற்றுமையும் ஒப்புமையும் :**

### *1. கொடிய காலம் :*

***(1) போதகப் பிதாக்கள் நம்மிடையே இல்லாத காலம் :***

*“என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமானவரே..” (2 இரா 2:12)*

தன் தலையாயிருக்கிற தன் எஜமானாகிய எலியா தன்னை விட்டு எடுபட்டு, ஆவிக்குரிய தகப்பன் ஒருவனின்றி தான் தன்னந்தனியே விட்டுவிடப்பட்ட ஒரு காலத்தில் தன்னை உணர்ந்தான் எலிசா.

இன்றைய நமது காலமும் இதுவே அல்லவோ? போதகப் பிதாக்கள் யாவரும் நமது மத்தியிலிருந்து எடுபட்டுப்போய், உபாத்தியாயர்கள் அநேகர் இருந்தும், இன்றைய கிறிஸ்தவ உலகத்தைச் சரியாய் வழிநடத்திச் செல்ல தகப்பன்மார் யாரும் இல்லாத ஒரு காலமல்லவோ இது? இஸ்ரவேலை வழிநடத்தத் தகப்பனாயிருந்த சாமுவேல் தீர்க்கனுக்குப் பின், நியாயாதிபதிகளே கூட யுத்த வீரரும் தலைவரும் தீர்க்கதரிசிகளுமாயிருந்து நடத்தின காலங்களுக்குப் பிறகு அவர்களும் இல்லாத காலகட்டத்தில் "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன் தன் பார்வைக்கு சரி போனபடி செய்தான்..." (நியா 21:25) என்ற காலத்தின்படி இன்றைய கிறிஸ்தவ உலகத்தை சரியாய் வழிநடத்தும் தகப்பன்மாரும் தலைவர்களும் இல்லாமல், அவனவன் தன் தன் பார்வைக்கு சரிபோனபடி கட்டுக்கடங்காமல் போகும் ஒரு காலகட்டத்தில் நாம் இல்லையோ?”

***(2) ஊழியர்கள் பரியாசம் பண்ணப்படும் காலமிது : (2 இரா 2:23)***

எலியாவின் இரட்டிப்பான ஆவியின் வரம் பெற்றும், அவன் சால்வையினாலே யோர்தானின் தண்ணீரை அடிக்க, அது பிரிந்து போனதைத் தங்கள் கண்களால் கண்டும் கூட, அவைகளினாலே எந்தத்

தாக்கமும் வித்தியாசமும் அடையாத தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனை, "மொட்டைத் தலையா ஏறிப்போ!" என்றல்லவோ பரியாசம் செய்தனர்? ஒரு ஆவிக்குரிய தலைவனின் மதிப்பும் மரியாதையும் அறியாமல் அவன் மேலிருந்த அபிஷேகத்தின் பயமின்றி அன்று அவனைப் பரியாசம் செய்த காலம் போன்ற காலமல்லவோ இது?

இன்று சோஷியல் மீடியாவிலும் *YouTube* லும் தேவனற்ற புறஜாதியார் தேவ ஊழியர்களைப் பரியாசம் செய்வது ஒரு புறமிருக்க, கிறிஸ்தவ உலகமே ஒருவரையொருவர் மீடியாவில் பரியாசம் பண்ணுவதும் மண்ணை வாரித் தூற்றுவதும் சகஜமாய் நடக்கவில்லையோ?

### 3. உப்பு சாரமற்றுப்போன காலம் : (2 இரா 2: 20 - 22)

*“பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது, தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம்" என்று சொல்ல, அவன், "ஒரு புதுத் தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, அவன் நீரூற்றிலே உப்பைப் போட்டு, "இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்..இனி இதனால் சாவோ நிலப்பாழோ இராது" என்றானே!*

ஐயோ! பூமிக்கு உப்பாய் இருக்க வேண்டிய இன்றைய கிறிஸ்தவ உலகம் சாரமற்றுப் போய் வெளியே கொட்டப்படுகிறதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமான காலத்தில் வந்து கிடக்கவில்லையோ?

### (4) "நான் உம்மை விடுறதில்லை" என்று பலவந்தம் பண்ணுகிறவர்கள் இல்லாத காலம். ( 2 இரா 2: 2, 4, 6)

*பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள் " என்றார் இயேசு (மத் 11:12).”*

அரிதானதைக் கேட்டாய்" என்று ஆண்டவர் நம்மைப் பார்த்துச் சொல்லுவாரோ? "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்" என்று ஆசீர்வாதத்துக்காக மாத்திரமே ஆண்டவரை பலவந்தம் பண்ணுகிற கூட்டம் பெருகியுள்ள காலமல்லவோ இது?

மாறாக, தன்னைத் தன் காலத்தின் தலைமுறைக்கு ஆசீர்வாதமாய் வைக்கும்படியாகவும், சந்திக்கும் ஒவ்வொரு சவாலையும் இரட்டிப்பான ஆவியின் வரத்தினால் கையாளும்படியாகவும் ஆண்டவரை விடாமல் பற்றிக்கொள்ளும் கூட்டமொன்று இன்று உண்டோ? இப்படிப் பரலோகத்தையே பூமியில் இழுத்துப்போடத் துடிக்கும் கூட்டமொன்று இல்லாத காலமல்லவோ இது ?

## *(5) யோசபாத்துகளும் வஞ்சிக்கப்படும் காலம்: (2 இரா 3: 5 - 7)*

*யார் யாரோடே கூட்டு வைப்பது? யார் யாரோடே இசைந்து நடப்பது? யார் யாரோடே தோழமை கொள்வது? தேவனுக்குப் பயந்த யோசபாத் போன்றவர்கள் பொல்லாத ஆகாபின் மகனோடே (யோராம்) தோழமை கொள்ளலாமோ? அவன் கூப்பிட்டவுடனே இவனும் அவனோடே தோளில் கைபோட்டுப் போகலாமோ?*

*தெரிந்துகொள்ளப்பட்ட யோசபாத்துகளும் வஞ்சிக்கப்படும் காலமல்லவோ இது? அவர்கள் ஆகாபுகளோடே சம்பந்தம் கலக்கலாமோ? இசைந்து நடக்கலாமோ? சகலமும் சமரசம் செய்யப்படும் சமரசங்களின் காலமல்லவோ இது?*
*ஐயோ ! ஐயோ ! ஐயோ!*

## *(6) கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இல்லாத காலம்: ( 2 இரா 5:11)*

*"நாம் கர்த்தரிடம் விசாரிக்கும்படி கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யாரும் இங்கே இல்லையோ?" என்று கேட்டான் யோசபாத்..*

*ஓ! தீர்க்கதரிசிகள் என்று தங்களைத் தாங்களே சொல்லிக் கொள்பவர்களுக்கு மத்தியில் தீர்க்கதரிசன எழுப்புதல் பெருவிழாக்கள் நடத்துபவர்கள் பெருகிக் கிடக்கும் இந்நாட்களில் "இதோ கர்த்தர் சொல்லுகிறார்.." என்று தேவ வார்த்தையை நெருப்பாய்க் கக்கும் யோவான் ஸ்நானகன்களும், 401வது தீர்க்கதரிசியான மிகாயா போன்ற உண்மையான தீர்க்கர்களும் காணக் கிடைக்காத காலமல்லவோ இது?*

## *(7) ஊழியர்கள் கடன் பிரச்சனைகளில் சிக்கித் தவிக்கும் காலம் : (2 இரா 4:1)*

அன்றைய எலிசாவின் காலத்தில் கடன் வாங்கி மரித்துப் போன ஊழியனின் வாசலில் கடன் கொடுத்தவன் அவனது பிள்ளைகளைக்

கொண்டு போக வந்து நின்றது போல இன்று பேங்க் லோனிலும், கந்துவட்டியிலும் சிக்கிச் சீரழியும் ஊழியர்கள் நம்மிடையே இல்லையோ? கடன் மேல் கடன் வாங்க மாதம் முழுவதும் EMI யிலேயே கழிந்து க்ரெடிட் கார்டிலேயே பெருமை பீத்தி, கட்ட முடியாத சூழ்நிலையில பேங்க் காரன் வந்து கழுத்தை நெறிக்க வேதனையில் மரித்துப்போகும் ஊழியர்கள் இன்று இல்லையோ? வீட்டுக்காகவும் கார் வண்டிக்காகவும் சபை கட்டிடத்துக்காகவும் கடன் கடனென்று கடனிலேயே மூழ்கிக் காலம் கழிக்கும் ஊழியர்கள் இன்று எத்தனை எத்தனை பேர் ! இது ஒரு எலிசாவின் காலமல்லவோ?

## *(8) ஊழியர்களுக்கு சவால் நிறைந்த காலம் (2 இரா 4:18 - 36)*

சூனேமியாளின் மகன், மேல் வீட்டறையிலே செத்துக் கிடக்கிறான். அவள் வந்து எலிசாவின் கால்களைப் பிடித்துக்கொள்கிறாள். கர்த்தரும் அவனுக்கு அதை அறிவியாமல் மறைத்து வைக்கிறார். உடனிருக்கும் உடன் ஊழியனும் காரியத்துக்கு உதவாத வைத்தியனாய், கைத்தடியை வைத்துக்கொண்டு கையாலாகாதவனாய்த் திரிகிறான்.

இன்றும் இப்படிப்பட்ட சவால்கள் நம்மைச் சூழ்ந்து இல்லையோ? புறஜாதி உலகம், "உங்கள் தேவன் எங்கே ?" என்று ஒரு பக்கம் சவால்விட்டுக் கொண்டிருக்க, சபைகளுக்குள் ஒவ்வொரு நாளும் கொண்டுவரப்படும் வியாதிப்பட்டவர்களும், புத்திசுவாதீனம் அற்றவர்களும், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களும், அசுத்தஆவி பிடித்தவர்களும் நமக்கு சவாலாய் வந்து நம் முன் கிடத்தப்பட்டுக் கிடக்கவில்லையோ?

தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாகியிருக்கிறது என்று, விழுந்து செத்த ஐத்திகுக்களையும், கட்டில் கிடையாய்க் கிடக்கும் ஐனேயாக்களையும் தூக்கியெழுப்ப முடியாமல் விழிபிதுங்கி நிற்கும் ஊழியர்கள் நிறைந்த காலம் மட்டுமன்றி, இப்படிப்பட்ட சவால்களை அன்றாடம் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டிருக்கும் காலமுமல்லவோ இது?

## *(9) வசனத்துக்குப் பஞ்ச காலம் (2 இரா 4:38)*

எலிசா காலத்தில் "தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று."

*இன்று கிறிஸ்தவ உலகத்தில் வசனப் பஞ்சம் இல்லையோ? ஆரோக்கிய உபதேசங்களுக்கும், பிரதிஷ்டைகளுக்கும், உலகத்திலிருந்து வேறு பிரிந்து வாழும் வாழ்வுக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் காலமல்லையோ இது? பிரசங்க பீடங்களெல்லாம் கூத்தாடிகளின் மேடைகளாகிப் போன காலமல்லவோ இது? கூட்டத்தை எழுப்புதல் என்றும், கூச்சலை அபிஷேகமென்றும், கட்டுக்கதைகளைக் கர்த்தருடைய வார்த்தையென்றும் தவறாக எடைபோட்டு, தாங்களும் வஞ்சிக்கப்பட்டு, மற்றவர்களையும் வஞ்சித்து, ஆழமான சத்தியங்களும், சவாலான செய்திகளும் கேட்கக் கூடாத பஞ்சம் ஏற்கனவே துவங்கிவிட்ட காலமல்லவோ இது ?*

## *(10) பேய்க் கொம்மட்டிக் காய்களான கள்ள உபதேசங்கள் சபைக்குள் புகுந்து பெருகிவிட்ட காலம் : (2 இரா 4: 38 - 41)*

*எலிசா காலத்தில் தேசத்திலே பஞ்சம் உண்டாயிருக்கையில் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்ச ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய் ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு அதின் காய்களை மடி நிறைய அறுத்து வந்து அவைகளை அரிந்து போட்டு கூழ்க்காய்ச்சி அதை சாப்பிடப் போகிறபோது, "ஐயோ, பானையிலே சாவு இருக்கிறது" என்று சத்தமிட்டது போன்ற காலமிது!*

*இன்று நம் நடுவே பேய்க்கொம்மட்டிக் காய்களான எத்தனை எத்தனை கள்ள உபதேசங்கள்! திரிக்கப்பட்ட வார்த்தைகள், வசனங்கள் ! இன்று இவைகளால் கிறிஸ்தவ உலகில் ஆவிக்குரிய சாவு இல்லையோ? ஐயோ! இந்த உபதேசங்கள் வீடியோக்களாய், செய்திகளாய், பாடல்களாய் சோஷியல் மீடியாக்களிலும் You Tube களிலும் Forward செய்யப்பட்டு ஒவ்வொருவருடைய போன்களிலும் பரிமாறப்படவில்லையோ? ஐயோ, நம் சபைகளில் சாவு இருக்கிறதே!*

*பிடி மாவாம் ஆரோக்கிய உபதேச வசனத்தால் இந்தக் கள்ள உபதேச சாவைப் போக்குவாரில்லையோ? இன்று பிரசங்கிக்கப்படும் இயேசு வேறொரு இயேசு அல்லவோ? இன்று பிரசங்கிக்கப்படும் சுவிசேஷம் வேறொரு சுவிசேஷமல்லவோ? இன்று கிரியை செய்யும் ஆவி வேறொரு ஆவி அல்லவோ? ஐயோ! ஐயோ! ஐயோ!*

## (11) நாகமான்கள் குஷ்டரோகியாய் நம் வீட்டு வாசல்களிலும் சபை வாசல்களிலும் வந்து நிற்கும் காலமிது :

அன்று எலிசா வீட்டு வாசலிலே நாகமான் குஷ்டரோகியாய் வந்து நின்றது போல, தேசத்துக்குப் பாவக் குஷ்டரோகம் கண்டு நமது சபையின் வாசலைத் தட்டி நிற்கிறது, ஒரு உலகத்தாரின் கூட்டம். பாவக் குஷ்டம், சாபக் குஷ்டம், பாடுகளின் குஷ்டம், வேதனையின் குஷ்டத்தோடும் கஷ்டத்தோடும் தேசத்தின் எத்தனையோ பராக்கிரமசாலிகள் நம் சபைகளின் கதவைத் தட்டி நிற்கவில்லையோ?

அவர்களது பொன்னையும் வெள்ளியையும் பணத்தையும் மாற்று வஸ்திரங்களையும் கண்ணேறிட்டுக்கூடப் பாராமல், அவற்றில் ஒன்றையும் இச்சிக்காமல் இப்படிப்பட்டவர்களது பாவ சாபக் குஷ்டரோகங்களை நீக்கும் வழியான இயேசுவின் இரத்தத்தின் கல்வாரி நதிக்கு வழிகாட்டி பாவ சாப ரோகங்களை நீக்கிவிடும் எலிசாக்கள் இன்று நம்மிடையே உண்டோ? ஐயோ! இது நாகமான்கள் நம் கதவைத்தட்டிக் கெஞ்சி நிற்கும் காலமல்லவோ?

## (12) கேயாசி போன்ற பேராசை கொண்ட கள்ள ஊழியர்கள் பெருகியுள்ள காலம்:

■ இன்றைய கேயாசிகள், ஒரு கண் சொருகிப்போன, பரலோகப் பார்வையும், தேவன் தங்களைச் சுற்றி வைத்துள்ள பாதுகாப்பு வளையங்களையும் காணக்கூடாத தூரப்பார்வையற்றவர்கள்.

■ இப்படிப்பட்ட கேயாசிகள் தங்கள் தலைவனாகிய ஊழியனின் ஆவிக்குரிய அருமை பெருமை தெரியாத யூதாசுக்கு முன்னோடிகள்..

■ இப்படிப்பட்ட கேயாசிகள் தங்கள் தலைவனிடமிருந்து அவர்களது ஆவிக்குரிய அரிதானவைகளை அல்ல, அவர்கள் மூலம் வரும் அற்ப ஆதாயத்தின் மேலேயே குறியாயிருப்பவர்கள்.

■ இப்படிப்பட்ட கேயாசிகள், "பரிசுத்தவான்" என்ற சாட்சி பெற்ற தங்கள் மூத்த ஊழியர்களின் சாட்சியின் மேலெல்லாம் மனதாயிராமல், தலைவர்களோடு தாங்கள் விசிட் செய்யப்போகும் வீடுகள் மற்றும் விசுவாசிகளின் முழு விபரங்களையும், மூத்த ஊழியர்களைக் காட்டிலும் விரல் நுனியில் வைத்திருக்கும் விஷமிகள்.

■ சூனேமியாள் போன்று உண்மை விசுவாசிகள், இப்படிப்பட்டவர்கள் யாரென்று அறிந்து வைத்திருப்பது மட்டுமன்றி, இவர்களைக் குறித்து சட்டையே செய்யாதவர்கள்.

■ இப்படிப்பட்ட கேயாசிகள், சுகவீனமும் பெலவீனமும் உள்ளவர்கள் மேல் என்ன தான் கை வைத்து ஜெபித்தாலும் அவர்கள் கைகளால் ஒரு அற்புதமும் நடப்பதில்லை.

■ "என் தலைமை பாஸ்டர், நாகமானைப் போன்ற பணக்காரர்களின் கையில் ஒன்றும் வாங்காமல் இப்படி வெறுமனே போக விட்டுவிட்டாரே" என்றும், "நான் ஓடிப்போய் ஏதாகிலும் வாங்குவேன்" என்று அப்படிப்பட்டவர்கள் பின்னால் ஓடுவதே இவர்கள் நோக்கமாயிருக்கும்.

■ தன் மூத்த ஊழியர் பெயரில் பொய் சொல்லி, "பாஸ்டர் தான் வாங்கி வரும்படி என்னை அனுப்பினார்" என்று வாய்கூசாமல் தங்கள் தலைவர்களின் நற்பெயரைத் தங்கள் சுயலாபத்துக்கென்று அழகாய் உபயோகப்படுத்துவார்கள். மட்டுமன்றி, பிரச்சனைகளிலிருந்து தப்பிக் கொள்ளத் தங்கள் தலைவர்கள் பெயரை பயப்படாமல் பயன்படுத்துவார்கள். தங்கள் மூத்த ஊழியர்களின் பெயரைக் கெடுக்கவும் அவர்கள் நன்மதிப்பைக் கொலை செய்யவும் கொஞ்சமும் தயங்காதவர்கள்.

■ எல்லாவற்றையும் வாங்கி வாயில் போட்டுத் தின்று வாயைத் துடைத்துவிட்டு, "நான் ஒரு பாவமும் செய்யவில்லை.. உமது அடியான் எங்கும் போகவில்லை.." என்று தங்கள் ஊழியர்களுக்கு முன்னால் வந்து ஒன்றும் அறியாதவர்கள் போல் கை கட்டி நிற்பார்கள்.

■ "என் மனம் உன்னுடனே கூடச் செல்லவில்லையா? என்பது போல, நிச்சயமாகவே தங்கள் மூத்த ஊழியர்களின் சத்தமும் வார்த்தையும் அவர்கள் காதில் விழுந்து, மனசாட்சி குத்தினாலும், அந்த மனசாட்சியின் வாயைப் பொத்தி விடுவார்கள்.

■ இப்படிப்பட்ட கேயாசிகள் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, பொருளாசைப் பித்தர்கள்.

■ “இது காலமா?" என்ற இக்கட்டுக் காலத்தின் நெருக்கத்தையெல்லாம் குறித்துக் கவலையே அற்றவர்கள் இவர்கள்.

■ தேவ சாபம், தேவ மனிதர்களின் சாபத்தைக் குஷ்டரோகமாய்த் தங்கள் மேலும் தங்கள் தலைமுறையின் மேலும் சுமந்து திரிபவர்கள் இவர்கள்.

***ஆம்! இது ஒரு அப்பட்டமான, கேயாசிகளின் காலம் !***

## *2. இது ஒரு யுத்த காலம்*

*"மறுவருடம் இராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படும் காலம் வந்த போது.."( 2 சாமு 11:1)*

*தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரமே உண்டென்று அறிந்து பிசாசு உக்கிர கோபத்தோடு நம் மீது இறங்கி யுத்தம் செய்யும் காலமிது அல்லவோ ?*

*"நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்" என்ற தமது புத்தகத்தில் நைஜீரியாவின் எழுப்புதல் வீரர் Dr. Paul Enenche எழுதுகிறார்..*

*"ஒவ்வொரு நாளும் நாம் யுத்த களத்தில் நிற்கிறோம்.. யுத்தத்துக்கு எல்லை குறிக்கப்பட்டாகி விட்டது. அந்தகார சேனைகளுக்கும் ஒளியின் பிள்ளைகளுக்கும் போர் தொடங்கி விட்டது. யுத்தத்தில் வல்ல யேகோவா தேவனுக்கும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிக்கும் நடக்கும் இறுதிப்போர் இது!"*

*"இதில் வேதனை என்னவென்றால், மும்முரமாய் நடக்கும் யுத்தத்தில் போர்க்களத்தின் நடுவில் நிற்கிற விசுவாசி ஒருவன், போர் என்ற ஒன்று நடக்கிறது என்ற உணர்வே இல்லாமலிருப்பது தான். அப்படிப்பட்டவன் மதிகெட்டவன் சாகிறது போல செத்துப்போகிறான். தீவிர யுத்த களத்தில் நிற்கிறேன் என்ற எண்ணமே இல்லாமல் இந்த உலகத்தில் வாழ்கிறவன் உயிரோடே செத்தவன்..."*

*மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மட்டுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் ஒரு கர்த்தருடைய பிள்ளைக்கு விரோதமாய் நடக்கும் மும்முரமான யுத்தமிது!*

--------------------------

தன் நாட்களில் பல யுத்த களங்களைக் கண்டவன் தாவீது. ஏலா பள்ளத்தாக்கிலே கோலியாத்துடன் துவங்கிய அவனது யுத்தம், களங்கள் பல கண்டு, காத் ஊரின் கோலியாத்தின் சகோதரரோடும் அவனது வம்சாவளிகளான இராட்சதப் பிறவிகளோடும் நடந்துகொண்டே இருந்தது. *(2 சாமு 21:15 -22)*

ஆனாலும் தொடர் வெற்றிகளினால் வந்த அலட்சியமோ, அசட்டையோ, முடிவில்லா யுத்தங்களினால் வந்த விரக்தியோ, எரிச்சலோ அவனை அரண்மனையில் இருக்கச்செய்து, கண்காணா யுத்தம் ஒன்றில் ஆவிக்குரிய உயர்ந்த உப்பரிகையிலிருந்து பாவத்தின் பாதாளப் படுக்கையறைக்குள் தலைகுப்புறத் தள்ளிவிட்டது.

மதிமயங்கி உரியாவைப் போர்முகத்திலிருந்து வரவழைத்த மன்னனை, அவனது பராக்கிரமசாலிகளில் கடையானவனான *(2 சாமு 23: 39)* அந்த உரியாவின் வார்த்தைகள் முகத்தில் அறைந்திருக்க வேண்டும்!

**"பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும், என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் (மட்டும்) புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் என் மனைவியோடே சயனிக்கிறதற்கும் என் வீட்டுக்குள் பிரவேசிப்பேனோ?**

**நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும் உம்முடைய ஆத்துமாவின் பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.."*(2 சாமு (11:11)***

போர்க்களத்தில் நிற்க வேண்டிய தாவீது, உப்பரிகையில் உலாத்திக் கொண்டிருக்க, "உச்சிதமான பதார்த்தங்களோடு உன் வீட்டுக்குப் போய் புசித்துக் குடித்து மகிழ்ந்திரு" என்று அனுப்பப்பட்ட உரியாவின் இருதயமோ போர்க்களத்தையும் உடன்படிக்கைப் பெட்டியையும் போர்முனையில் மும்முரமாய்ப் போரிட்டுக் கொண்டிருக்கும் தன் வீரர்களையும் தன் தளபதிகளையுமே எண்ணி எண்ணித் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இது விசுவாசிகள் சத்துருக்களோடு சமர்புரியும் காலமல்லவோ? இது யுத்த களத்தில், போர்முனையில் ஆவிக்குரிய பராக்கிரமசாலிகளும் வீழ்ந்து கொண்டிருக்கும் காலமில்லையோ? கிராமங்களிலும் உயர் மலைகளிலும் தன்னந்தனியான யுத்த களங்களில் மிஷினரிகளும் ஊழியர்களும் போராடிக் கொண்டிருக்கும் காலமல்லவோ இது?

உண்மை ஊழியர்கள் யுத்த களத்தில் துவண்டு கொண்டிருக்கும் காலமல்லவோ இது? அவர்கள் கரங்கள் சோர்ந்து வீழ்ந்து, தங்கள் ஆதரவுக்காக அவர்கள் ஏங்கி நிற்கும் காலமல்லவோ? கிறிஸ்துவுக்காக ஒரு கூட்ட ஜனம் செத்துக் கொண்டிருக்கும் காலமல்லவோ? எங்கு பார்க்கிலும் ஆவிக்குரிய யுத்தம் ! யுத்தம் ! யுத்தம் !

இப்படிப்பட்ட காலத்திலே ஓய்வாய்க் காலார உலாவும் காலமோ இது? மனம்போனபடி புசிப்புக்கும் குடிப்புக்குமான காலமோ இது? எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரம் இருந்தும் இப்படிப்பட்ட காலத்தில் புசிப்பும் குடிப்பும் சரீர சுகமும் தகுதியாயிருக்குமோ? எல்லாவற்றையும் அனுபவிக்க முழு அதிகாரமும் நமக்கிருந்தும் அவைகள் நம்மை அடிமைப்படுத்த நாம் நம்மை விட்டுக் கொடுக்கும் காலம் இதுவோ?

யோவேல் சொன்னபடி, மணவாளன் தன் அறையையும் மணவாட்டி தன் மறைவையும் விட்டு வெளியே வந்து தங்கள் இருதயங்களைக் கிழித்துக் கதறும் காலமல்லவோ இது? (யோவேல் 2:16)

தானியேல் சொன்னார், "அந்த நாட்களில்... தானியேலாகிய நான் துக்கித்துக் கொண்டிருந்தேன்.. அந்த நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, **இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை...(தானி 10:2,3).**

**இப்படிப்பட்ட, யோவேல்களின் வார்த்தையும், தானியேல்களின் வார்த்தையும் நிறைவேறப்பட வேண்டிய காலமல்லவோ இது ?உபவாசங்களில் பல வகைகள் உண்டு. வாராந்திர, மாதாந்திர, வருடாந்திர உபவாசங்கள் தவிர ருசிகரமான உச்சிதமான பதார்த்தங்கள் நமக்கு முன்பாகக் கொண்டு வரப்படும்போதும், திருமணங்களுக்கும் வைபவங்களுக்கும் ஹோட்டல்களுக்கும் செல்லும் வாய்ப்புகள் கிடைக்கும்போதும் "நீ போஜனப் பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை !" (நீதி 23:2) என்ற வார்த்தைகள் நமக்கு முன் வந்து நம்மை முறைத்து விறைத்து நிற்காதோ?**

**சரீரம் தன் உரிமை கேட்டு நம்மிடம் மல்லுக்கு நிற்கும் போது உரியாவின் வார்த்தைகள் நம்மை உலுக்காதோ? அவன் ஒரு இஸ்ரவேலன் அல்ல..அவன் ஒரு புறஜாதி ஏத்தியன் அல்லவா? அப்படியிருந்தும் அவனுக்குள்ளிருந்த யுத்த களத்தின் தீவிரமும் கவலையும் பாரமும் அவனை அப்படிச் சொல்ல வைத்ததே! இப்படிப்பட்ட, போராட்டங்கள் சூழ்ந்த ஆவிக்குரிய யுத்த காலத்திலே உரியாவின் அந்த வைராக்கியம் நம்மையும் பற்றிப் பிடிக்காதோ?**

சாங்கோபாங்கமும் ஆகாரத் திரட்சியுமான சோதோம் கொமோராவின் பாவங்கள் இன்று சபையைக் கொள்ளை யாடிக் கொண்டிருக்கவில்லையோ? இவைகளுக்கெல்லாம் இது காலமா? இது காலமா? இது காலமா?

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்களையும் தங்கள் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" என்ற வார்த்தைகளோடு, பவுலும், யோவேலும், தானியேலும், உரியாவும் நமது இந்த யுத்த காலத்திலே நமக்கு முன்பாக சவாலிட்டு நிற்பார்களாக !

## 3. இது ஒரு இக்கட்டுக்காலம்

***"நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால்.." (எஸ்தர் 4:14)***

■ எஸ்தரின் காலம் திரும்பியிருக்கும் காலமிது!

■ சபைகளுக்கு விரோதமாய் ஆமான்கள் எழும்பியிருக்கும் காலமிது!

■ ராஜாவும் ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்திருக்கும் காலமிது!

■ யூதர்களைக் கொன்று குவிக்க நாள் குறிக்கப்பட்டது போல, தேவ பிள்ளைகளுக்கும் சபைகளுக்கும் நாள் குறிக்கப்பட்டுவிட்ட காலமிது!

■ சூசான் நகரம் கலங்கியது போல தேசமே கலங்கி நிற்கும் காலமிது!

■ தேவ ஜனத்துக்கு விரோதமாய் ஆங்காங்கே தூக்குமரங்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருக்கும் காலமிது!

■ சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் விரோதமான செய்திகள் நாடெங்கிலும் மிகத் தீவிரமான அஞ்சறக்காரர்களாம் மீடியாக்கள் மூலமும், சோஷியல் மீடியாக்கள் மூலமும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் காலமிது!

■ ஓ! மொர்தெகாயாம் தேவ ஊழியர்களே! உங்கள் இருதயத்தைக் கிழித்து, இரட்டுடுத்தி, தலையிலே சாம்பலை அள்ளிப் போட்டுக் கொண்டு, நகரங்களுக்கும் சபைகளுக்கும் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே கூட அலறிக்கொண்டு, ராஜாதி ராஜாவின் அரமனை வாசலாம் தேவ சமூகத்தின் முகப்பு மட்டும் வந்து புலம்பி அழ மாட்டீர்களோ?

■ ஓ! விசுவாசிகளாம் ஆவிக்குரிய இஸ்ரவேலரே, இக்கொடுமையின் காலம் கண்டு உங்களுக்குள்ளே மகா துக்கமும் உபவாசமும் அழுகையும் புலம்பலும் உண்டாகி, சாம்பலில் விழுந்து கிடக்கமாட்டீர்களோ?

■ ஓ! ஜெப வீர வீராங்கனைகளாகிய எஸ்தர்களே! மன்றாட்டு வீரர்களே! சபைகளிலும் சினாடுகளிலும் மேல் மட்டங்களில் அமர்ந்திருப்பவர்களே, நீங்கள் உயர் பதவியில் இருக்கிறபடியினாலே மற்ற கிறிஸ்தவர்கள் தப்பக் கூடாதிருக்க, நீங்கள் மட்டும் தப்பிவிடுவீர்களோ? நீங்கள் மவுனமாயிருக்கும் காலம் இதுவோ? இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உங்களுக்கு ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்திருக்கவில்லையோ? ஓ! நீங்கள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து கர்த்தராம் ராஜாவின் சமூகத்துக்குப் போய் உங்கள் ஜனங்களுக்காக மன்றாட மாட்டீர்களோ?

■ ஓ! இது ஒரு கொடிய காலமல்லவோ?
ஓ! இது ஒரு யுத்த காலமல்லவோ?
ஓ! இது ஒரு இக்கட்டுக்காலம் அல்லவோ?

■ பணத்தையும் உடுபுடவைகளையும், வீடு வாசல்களையும், கார் பங்களாக்களையும், சபைக் கட்டிடங்களையும், தோட்டம் துரவுகளையும், நிலபுலங்களையும், நகைநட்டுகளையும் வேலைக்கார வேலைக்காரிகளையும் வாங்கிக் குவிக்க இது காலமோ ?

■ ஓ! புசிக்கவும் குடிக்கவும் மனைவி மக்களோடு மகிழ்ந்து உல்லாசித்து, உலகமுழுவதும் உல்லாசப் பயணங்கள் சென்று வர இது காலமோ?

■ ராஜ அரமனையில், ராஜமேன்மையில், ராஜ போகத்தில், உயர் பதவிகளில் உழன்று சுகித்திருக்க இது காலமோ?

**இது காலமோ?**
**இது காலமோ?**
**இது காலமோ?**

# நினிவேக்குத் திரும்புங்கள்.. எழுப்புதல் காத்திருக்கிறது !

CHAPTER - 12



# நினிவேக்குத் திரும்புங்கள்! எழுப்புதல் காத்திருக்கிறது!!

## Chapter -12

***யோனாவே, நீர் நினிவேக்குத் திரும்பமாட்டீரோ? உமக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்துக்கும், போகும்படியாய் நீர் அனுப்பப்பட்ட இடத்துக்கும் திரும்ப மாட்டீரோ? நீரே அறியாத, உம்முடைய கண்கள் கண்டிராத, உம்முடைய செவிகள் கேட்டிராத, உம்முடைய இருதயத்தில் தோன்றியிராத எழுப்புதல் ஒன்றை உம்மைக்கொண்டு செய்ய தேவன் ஆயத்தமாயிருக்கிறாரே! ஓ! அதை நிறைவேற்ற நினிவேக்குத் திரும்பமாட்டீரோ? உம்முடைய செய்தி ஒன்றுக்காக நினிவே காத்திருக்கிறதே! வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இலட்சாதி இலட்சங்கள் மனந்திரும்பக் காத்துக் கிடக்கிறதே! ஓ, நீர் திரும்பி வர மாட்டீரோ?***

*ஓ! இது திசை மாறிய இன்றைய, தீர்க்கதரிசிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகிறவர்கள் தங்கள் தர்ஷீசின் பாதைகளை விட்டு நினிவேக்குத் திரும்பும் காலமல்லவோ ?*

*ஓ! இது எத்தன் யாக்கோபுக்கள் ஆராமிலிருந்து பெத்தேலுக்குத் திரும்பும் நாட்களல்லவோ?*

*ஓ! தன் பெத்லகேமை விட்டு மோவாபுக்கு ஓடிச்சென்று, தன் புருஷனையும், மணமான இரண்டு குமாரர்களையும் சாகக் கொடுத்த நகோமிகள் மீண்டும் பெத்லகேமுக்குத் திரும்பும் காலமல்லவோ?*

*ஓ! தூரம் போன தேவ மைந்தர்கள் கல்வாரியாம், தங்கள் தகப்பன் வீட்டுக்குத் திரும்பும் நாட்களல்லவோ?*

*ஓ! சபை தன் பூர்வ நாட்களுக்குத் திரும்பாதோ?*

*சபை தன் பூர்வ பாதைகளுக்குத் திரும்பாதோ?*

*சபை தன் முற்பிதாக்களின் நாட்களுக்குத் திரும்பாதோ?*

**விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ?
வழிதப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையோ? (எரே 8:4)**

## *1. இராஜாவைத் திரும்ப அழைத்து வருவோம், வாருங்கள்!*

***“இப்போதும் ராஜாவைத்திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன் ?" (2 சாமு 19:10)***

*ஓ! பதவி வெறியும் சுயநலனும் கொண்டு, மக்களை ராஜாவிடம் நெருங்கவிடாமல், மயக்கும் வார்த்தைகளால் தன்னிடமே ஈர்த்து, நெஞ்சார அணைத்துக்கொண்ட அப்சலோமைப் போன்று, விசுவாச சகோதரங்களையும், சபையின் வாலிபர்களையும் கர்த்தரிடம் சேர்க்காமல் தங்களிடமே ஈர்த்துக்கொள்ளும் நவீன அப்சலோம்கள் இங்கேயும் இல்லையோ?*

*ஐயோ, தகப்பனும் ராஜாவுமானவர் சபைகள் நடுவிலிருந்து அவரது சிங்காசனத்தை விட்டு வெறுங்காலாய் வெளியே துரத்திவிடப்படவில்லையோ ? நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கி மீட்டவர் அவரல்லவா? அவர் தானே நம்மைப் பெலிஸ்தராம் பிசாசின் தாக்கங்களுக்கு நம்மைத் தப்புவித்தார்? ஓ! சபையின் நடுவிலிருந்து தமது முகத்தை மூடி வெறுங்காலாய் நடந்து அழுது கொண்டு கல்வாரி மலையின் மேல் மீண்டும் ஏறிப்போகும் நமது ராஜாவின் சத்தம் இங்கே கேட்கப்படாதோ?*

*ஓ! நாமே நம் நடுவிலிருந்து நமது ராஜாவைத் துரத்து விட்டோமே! நீர் எங்களுக்கு அவசியமில்லை என்று சொல்லாமல் சொல்லி அவரை வெளியேற்றிவிட்டோமே! ஜனங்களை வஞ்சித்தோமே! ஜனங்களின் இருதயத்தை அவர் பக்கம் திருப்பாமல், அவர்களை வஞ்சித்து நம் பக்கம் கவர்ந்து கொண்டோமே! அவரைத் தள்ளி விட்டோமே!*

*ஆனாலும் அப்படிப்பட்ட அப்சலோம்களையும் கண்டு, "என் மகனாகிய அப்சலோமே! என் மகனே, என் மகனே!" என்று இன்றும் நம் இயேசு ராஜா துக்கித்து அழுது புலம்பும் சத்தம் சபையின் காதில் விழவில்லையோ?*

*போகட்டும் அப்சலோம்கள் !*

மீதியான கூட்டமாகிய நாமாவது நமது ராஜாவைத் திரும்ப சபை நடுவே அழைத்து வருவோம் ! அவரை வருந்தி அழைத்து வருவோம்! நாம் அவரது எலும்பும் மாம்சமுமான அவரது சரீரத்தின் அங்கங்கள் அல்லவோ? மீண்டும் நம் நடுவே அவரை அழைத்து வந்து சிங்காசனத்தில் அமர வைப்போம்! நமது சபைகள் நடுவே அவரே இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும், நம்மை ஆளுகின்ற ஆண்டவருமாய் வீற்றிருப்பாராக!

இது நாம் அவரிடம் திரும்பும் காலமல்லவோ? இது நாம் அவரை நம் நடுவே திருப்பி அழைத்துக் கொண்டுவரும் காலமல்லவோ?
*(2 சாமு 15:30 / 15:5, 6 / 19:9)*

## 2. தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம் நடுவே கொண்டு வருவோம்! (1 நாளா 13:1-3)

தாவீது ராஜாவானதும் செய்த முதல் காரியம்...அவன் இஸ்ரவேல் சபையையெல்லாம் பார்த்துச் சொன்னான்..

**"நாம் தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டு வருவோமாக! சவுலின் நாட்களிலே அதைத் தேடாதே போனோம்! (1 நாளா 13:3)**

ஓ! ஒன்றல்ல, இரண்டல்ல.. 40 ஆண்டுகள் தேவ பெட்டி தேடப்படாமலே போனதே!

■ 40 வருடமாய்க் கிரியை செய்தது சவுலின் மாம்ச பெலமல்லவோ?

■ 40 வருடமாய்க் கிரியை செய்தது சவுலின் சுய பெருமையல்லவோ?

■ 40 வருடமாய்க் கிரியை செய்தது முரட்டாட்டமும் கீழ்ப்படியாமையுமே அல்லவோ?

■ வருடக்கணக்காய் மாம்சம் ஆவியைத் துரத்தித் துரத்தி அடித்ததே!

■ 40 வருடமாய் தேவ பிரசன்னமும், தேவ மகிமையும், தேவ வழிநடத்துதலும் தேடப்படாமலே போனதே!

ஓ! இப்படிப்பட்ட நவீன சவுல்கள் இங்கேயும் இல்லையோ? ஓ! நம் நடுவேயிருந்த உடன்படிக்கைப் பெட்டி சத்துருக்களின் வசமாகிப் போகவில்லையோ? அது அவர்களால் பிடிபட்டுப் போகவில்லையோ? ரெகோபோத்துகள் எல்லாம் இக்கபோத்துகளாகிப் போகவில்லையோ?

இன்று நம் நடுவே தேவ பிரசன்னம் எங்கே? இன்று நம் நடுவே தேவ மகிமை எங்கே? இன்று நம் நடுவே வழிகாட்டும் பெட்டி எங்கே? இன்று நம் நடுவே கற்பலகைகளாம் கற்பனைகள் எங்கே? இன்று நம் நடுவே வார்த்தையாம் மன்னா தாங்கிய பொற்பாத்திரங்களாகிய பரிசுத்த தேவ மனிதர்கள் எங்கே? இன்று நம் நடுவே தேவ அங்கீகாரமாகிய ஆரோனின் துளிர்த்த கோல்கள் எங்கே? (எபி 9:4)

தங்கள் அபிஷேகத்தையும், கிரீடத்தையும், ஆதிமேன்மையையும் இழந்து ஆவியில் செத்துப்போன சவுல்கள் போகட்டும்!

ஓ! மீதியான தேவ ஜனமே! இன்றைய சபையே! ஒன்று சேராயோ? நம் தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம் நடுவே நம்மிடத்துக்குக் கொண்டு வருவோம் வா! நெடுங்காலமாய் நாம் தேடாமல் போன உண்மையான தேவ பிரசன்னத்தையும், இழந்த தேவ மகிமையையும் திருப்பிக் கொண்டு வருவோம் வா!

ஓபேத்ஏதோம் வீட்டிலே மூன்று மாதம் மட்டும் இருக்கும் போதே அந்தப் பெட்டியினால் அந்த வீட்டுக்கு ஆசீர்வாதமேயானால், பெட்டியானது நிரந்தரமாய் நம் நடுவே இருக்குமானால் அதை விட என்ன ஆசீர்வாதம் நமக்கு வேண்டும்?

ஓ! சபையே அழுது புலம்பாயோ? தேவ பெட்டியாம் உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்பக் கொண்டு வாராயோ?

ஐயோ! ஐயோ! ஐயோ!

## *3. பூர்வ நாட்களைத் திரும்பக் கொண்டு வருவோம் ! (புல 5:21)*

***"கர்த்தாவே... பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும் !" (புல 5:21)***

*பூர்வ பரிசுத்தவான்களிடம் சபை இருந்த அந்த நாட்கள்!*

*மூல உபதேசத்தின் அஸ்திபாரத்தில் சபை ஸ்திரமாயிருந்த அந்த நாட்கள்!*

*உலகத்தோடு ஒத்துப்போகுதலும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லாமலும் இருந்த அந்த நாட்கள்!*

*உலகம் என்ற ஒன்று சபைக்குள் நுழைய இடம் தராமல், தன்னை இறுக்கப் பூட்டிக்கொண்டிருந்த அந்த நாட்கள்!*

*இன்றைய ஆராதனைக் குத்தாட்டங்களை சபை அறியாதிருந்த அந்த நாட்கள் !*

*சோஷியல் மீடியாக்களில் சபை சிக்கிச் சீரழியாதிருந்த அந்தப் பொன்னான நாட்கள்!*

*சபை வஞ்சிக்கப்படாதிருந்த அந்த நாட்கள் !*

*பாவமும் நரகமும், நித்தியமும், நித்திய ஆக்கினையும், பூரண இரட்சிப்பும், பூரண சுவிசேஷமும், வேறு பிரிக்கப்பட்ட வாழ்வும், சாட்சியின் ஜீவியமும், ஆத்தும ஆதாயமும், மிஷினரி அழைப்பும், தியாகமும், எளிமையும் அழுத்தமாய்ப் போதிக்கப்பட்ட அந்த நாட்கள்!*

*ஓ! அப்படிப்பட்ட நாட்களைத் திரும்ப நம் நடுவே கொண்டு வரமாட்டோமோ?*

*இது சபையானது தேவனிடம் திரும்பும் காலமல்லவோ?*

*சபை வேதத்துக்குத் திரும்பும் காலமல்லவோ?*

*நினிவேக்கும், பெத்தேலுக்கும், பெத்லகேமுக்கும், கல்வாரிக்கும் திரும்பும் காலமல்லவோ?*

*வேதம் சொல்கிறது...*

***"இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி.. (யோனா 3:1)***

*We need a Second Touch !*

*கர்த்தர் நம்மைத் திரும்பத் தொட்டு நமது கண்களைத் திறப்பாராக!*

*கர்த்தருடைய வார்த்தை திரும்ப நமக்கு உண்டாவதாக!*

*நாம் உடைத்துப் போட்ட கற்பலகைகளில் இருந்த கற்பனைகளை தேவன் திரும்ப தமது கைகளாலே எழுதுவாராக!*

*திசைமாறிச் சென்ற இன்றைய சபையை தேவன் திரும்ப அழைக்கும் காலமிது!*

*இரண்டாந்தரமும் தாம், அதனிடம் பேசும் காலமிது!*

*அதை நம்பித் தன் உத்திரவாதத்தைத் திரும்பத் தரும் காலமிது!*

*நினிவேக்குத் திரும்புவோம்! தேவன் நம்மிடம் இரண்டாந்தரமும் பேசுவார்! நம்மைக் கொண்டும் பேசுவார்!*

***இன்னும் 40 நாட்கள் உண்டு! நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும்!***

***■ மனம் திரும்பும்படியாய் நோவாவின் பூர்வ உலகுக்குத் தரப்பட்ட வருடங்கள் - 120***

***■ பாபிலோன் சிறையிருப்பில் இஸ்ரவேல், தான் உணர்வடைந்து திரும்ப அதற்குத் தரப்பட்ட வருடங்கள் - 70***

***■ இஸ்ரவேலின் முதல் ராஜா, தேவனிடத்துக்குத் திரும்ப அவனுக்குக் கொடுக்கப்பட்ட வருடங்கள் - 40***

***■ கனி தர அந்த மரத்துக்குத் தரப்பட்ட வருடங்கள் - 3***

***மீண்டும் அதற்குக் கிருபையாய்த் தரப்பட்ட வருடம் - 1***

***நினிவேக்குத் தரப்பட்ட நாட்கள் - 40***

***■ பேழைக்குள் எல்லாரும் உட்பிரவேசித்த பின்பும், யாராகிலும் உள்ளே வரமாட்டார்களோ என்ற எதிர்பார்ப்பில் நோவாவின் பேழை கடைசியாய்த் திறந்து வைக்கப்பட்டிருந்த நாட்கள் - 7***

***■ லோத்தின் மருமகன்களுக்குத் தப்பும்படியாய்க் கொடுக்கப்பட்டது - 1 இரவு நேரம்!***

■ சிலுவைக் கள்ளர்களுக்குத் தரப்பட்ட கடைசித் தருணம் - 1 மணி நேரம் !

இன்று நமக்கும் நமது தேசத்துக்கும் நமது சபைகளுக்கும் கொடுக்கப்படும் நாட்கள் - ???

-----------------------------

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்.

அந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான்.

மேலும் ராஜா தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயில் எங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும்,

மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.

யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான்.

அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.
யோனா 3:5-9

-----------------------------

நினிவேயின் ஜனங்கள்..
தேவனை விசுவாசித்து..
உபவாசித்து..
இரட்டுடுத்தி..

**சாம்பலிலே உட்கார்ந்து..**

**ஒன்றும் ருசிபாராமலும்..**

**தண்ணீர் குடியாமலும்..**

**தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு..**

**தம் தம் பொல்லாத வழியையும்..**

**தம் தம் கைகளின் கொடுமையையும் விட்டுத் திரும்பினர்...**

**இப்படிப்பட்ட மனஸ்தாபம் தேவனையே மனஸ்தாபப்பட வைக்கும் !**

**இப்படிப்பட்ட மனம் திரும்புதல், தேவனது மனதையும் திரும்ப வைக்கும் !**

**இப்படிப்பட்ட ஒரு மாறுதல் தேவனையும் தமது முடிவை மாற்ற வைக்கும் !**

இதுவே தேவ கோபாக்கினைக்கும் நரக அக்கினிக்கும் நித்திய நியாயத்தீர்ப்புக்கும் நம்மைத் தப்புவிக்கும் !

இதுவே எழுப்புதலைக் கொண்டு வரும் !

இதுவே அக்கினியை இறங்கச் செய்யும் !

இதுவே பெருமழையைப் பெய்யச் செய்யும் !

இது தேவனையே நம் மத்தியில் இறங்கி வரச்செய்யும் !

**மகா நகர் நினிவே - மா மகா எழுப்புதல் !**

வெறும் நாற்பது நாள் உபவாசமல்ல!
வெறும் வெற்று ஜெபமல்ல!
வெறும் கூக்குரல் அல்ல!

அது, ஆகாரம் தண்ணீர் பாராத கண்ணீர் உபவாசம்!

அது, இருதயத்தைக் கிழித்து ஜெபித்த எழுப்புதலின் ஜெபம்!

அது, தேவன் தமது தீர்மானத்தையே மாற்ற வைத்ததொரு கதறலின் விண்ணப்பம்!

**யாருக்குத் தெரியும்?**

- தேவனே மனஸ்தாபப்படலாம்!
- தேவனே தமது தீர்ப்பை மாற்றியும் எழுதலாம்!

**யாருக்குத் தெரியும்?**

நினிவேயிலே எழுப்புதல்!
சமாரியாவிலே எழுப்புதல்!

அந்தியோகியாவிலே எழுப்புதல்!
அத்தனேயிலே எழுப்புதல்!

எபேசுவிலே எழுப்புதல்!
எருசலேமிலே எழுப்புதல்!

இந்தியாவிலும் எழுப்புதல் !
இந்த தேசத்திலும் எழுப்புதல் !

**யாருக்குத் தெரியும்?**

- இங்கே சவுல்களும் மனம் மாறலாம் !
- சல்மனாசார்களும் மனம் திரும்பலாம்!

**யாருக்குத் தெரியும்?**

- கொர்நேலியுக்கள் இரட்சிக்கப்படலாம்!
- கொரிந்தியரும் இரட்சிக்கப்படலாம்!

**யாருக்குத் தெரியும்?**

- ஐத்திகுக்கள் உயிரோடு எழும்பலாம்!
- ஐனேயாக்களும் எழுந்து நடக்கலாம்!

**யாருக்குத் தெரியும்?**

- லீதியாக்கள் மனதைக் கர்த்தர் திறக்கலாம்!
- லீஸ்திராவிலே அற்புதங்களும் நடக்கலாம்!

**யாருக்குத் தெரியும்?**

- சிறைச்சாலைகளிலே பூகம்பம் வெடிக்கலாம்!
- சிறைத் தலைவர்களும் கைதிகளும் ஒருசேர ஞானஸ்நானமும் பெறலாம் !

**யாருக்குத் தெரியும்?**

- மாயவித்தைச் சீமோன்கள் மனந்திரும்பலாம்!
- மாயவித்தைச் சரக்குகளும் மலை போல் குவித்து எரிக்கவும் படலாம்!

***யாருக்குத் தெரியும்?***

■ *ஆக்கில்லா பிரிஸ்கில்லாக்கள் கழுத்தையும் தரலாம்!*

■ *அப்பொல்லோக்களும் அப்பியாக்களும் சீஷரும் ஆகலாம்!*

***யாருக்குத் தெரியும்?***

■ *அகிரிப்பாக்களையும் சம்மதிக்க வைக்கலாம்!*

■ *அப்போஸ்தலர் நடபடிகளையே நமது நடபடிகளாய்த் திரும்பவும் எழுதலாம்!*

***யாருக்குத் தெரியும்?***

***காற்றுக்கும் கடலுக்கும்,***
***பூச்சிக்கும் புழுவுக்கும்,***
***செடிக்கும் செத்தைக்கும்,***
***மீனுக்கும் மனுவுக்கும் கட்டளையிட்டவர்...***

***இந்தத் தேசத்திலேயும் எழுப்புதலைக் கட்டளையிடுவார்!***

***தர்ஷீசின் பாதையில் பாதை மாறிச் செல்லும் இன்றைய சபை நினிவேக்குத் திரும்பட்டும்!***

***வரலாறு காணா எழுப்புதல் ஒன்று இங்கேயும் வெடிக்கக் காத்திருக்கிறது!!***

# மொழிபெயர்ப்புகள்:




ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]




கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]




நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]




கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில்
பேஜஸ்




என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !




என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?




இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...




மீண்டும்
ஒரு
மிஸா ?




மிஷன் 2024




குருதிப் பிரளயம்




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்




முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள்

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

# எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...





















# அடைபட்ட அக்கினி

Pr. S.Romilton
Delhi
98106 46981

# புத்தக ஆசிரியரைப்பற்றி...



டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த 30 வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் பாஸ்டர் ரொமில்ட்டன் கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீராத ஆர்வம் கொண்டவர். கர்த்தருடைய பாரத்தைத் தனது நெஞ்சில் சுமந்து திரியும் இவர், கடந்த பத்து ஆண்டுகளாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், இன்றைய தமிழ்க் கிறிஸ்தவ உலகால் அறியப்படாத இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான அரிய பல புத்தகங்கள் மற்றும் தேசத்தின் சமகால சம்பவங்களை வேதத்தின் சம்பவங்களோடு இணைத்து எச்சரிப்பின் செய்திகளாகக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் படைத்துப் பதிவிட்டு வருகிறார்.

**இவரது ஜெபமும் பாரமும் கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை எழுத்து வடிவில் சபைகளுக்குக் கொண்டு சேர்ப்பதே!**

இவர் ஒரு ஆவிக்குரிய எழுத்தாளர் மட்டுமல்லாது, நூல் மொழிபெயர்ப்பாளரும் கூட..

"இவரது எழுத்து வீச்சும், மொழி (பெயர்ப்பு) நடையும் பிரமிக்க வைப்பவை. நேரடியாய் நெஞ்சைக் குறிவைக்கும் வாள்வீச்சு வார்த்தைகள் இவருடையவை.. எளிதாய் யாரும் தொட்டுவிடத் துணியாத, அல்லது தொட்டுத் தோல்வி கண்ட லியோனார்டு ரேவன்ஹில் (எழுப்புதல் தாமதிப்பது ஏன்?) போன்றோரது சாகச மற்றும் சவாலிடும், செறிவுள்ள ஆங்கில மொழிநடைக்கு சரிநிகராய் சமர் புரிந்து வெற்றிகண்ட எழுத்து இவருடையது," என்கிறார் இவரது ஆத்ம நண்பரும் போதகருமான ஏனோக்கு ஜேம்ஸ் (Holy of Holies Ministries) அவர்கள்.

இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன?, இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை, மீண்டும் ஒரு மிஸா, மிஷன் 2024, என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம்?, குருதிப் பிரளயம், யோவேல் மறவேல், தீக்கொளுத்துவேன் தீக்கொளுத்துவேன் மற்றும் முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள் ஆகிய புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் வரிசையில் இப்போது **"இதோ நாட்கள் வருகிறது!"**